புரவலர் புத்தகப் பூங்காவின்
24-ஆவது வெளியீடு

# கண்ணுக்குள் சுவர்க்கம்



காத்தான்குடி நசீலா

# கண்ணுக்குள் சுவர்க்கம்

(சிறுகதைகள்)

**சர்வதேச மகளிர் தின சிறப்பு வெளியீடு**

காத்தான்குடி **நசீலா**

வெளியீட்டகம்:

புரவலர் புத்தகப் பூங்கா

25, அவ்வல் சாவியா ரோட்,

கொழும்பு-14, ஸ்ரீலங்கா

## பதிவுத் தரவுகள்


| | |
|---|---|
| நூல் தலைப்பு | : கண்ணுக்குள் சுவர்க்கம் |
| வகை | : சிறுகதை |
| நூலாசிரியர் | : காத்தான்குடி நசீலா |
| உரிமை | : இலக்கியப் புரவலர் ஹாசிம் உமர் |
| முதற்பதிப்பு | : டிசம்பர் 2009 |
| பதிப்பாசிரியர் | : கலைஞர் கலைச்செல்வன் |
| அட்டை வடிவமைப்பு | : எஸ்.அனூர்ஜன் |
| கணனி வடிவம் | : ஏ.ஆர்.எம்.பயாஸ் |
| பக்கங்கள் | : VIII + 72 |
| அச்சிட்டோர் | : யுனி லங்காஸ்<br>இல:32, சென் அந்தோனிஸ் மாவத்தை,<br>கொழும்பு 13.<br>தொலைபேசி - 0776258778 |
| வெளியீட்டாளர் | : புரவலர் புத்தகப் பூங்கா<br>25, அவ்வல் சாவியா ரோட், கொழும்பு-14.<br>தொலைபேசி - 0774-161616, 0786-367431 |
| விலை | : ரூபா 150/= |


## BIBLIOGRAPHICAL DATA


| | |
|---|---|
| Title | : **KANNUKKUL SUVARKKAM** |
| Category | : Short Stories |
| Author | : Kattankudy **NASEELA** |
| Copy Rights | : Puravalar **HASSIM OMAR**<br>46, Ananda Coomarasamy Mwt, Colombo-07 |
| First Edition | : December 2009 |
| Publishing Editor | : Kalaignar **KALAICHELVAN** |
| Cover Design | : S.Anoorjan |
| Type Setting | : A.R.M.Fayas |
| Pages | : XIII + 72 |
| Printed | : **UNI LANKA'S**<br>#32, St Anthony's Mwt, Colombo-13<br>Mobile: 0776258778 |
| Publishers | : Puravalar Puthaka Poonga<br>25, Awwal Zavia Road, Colombo-14<br>Mobile: 0774-161616, 0786-367431 |
| Price | : Rs 150/- |
| ISBN | : 978-955-095-08-2 |

## இந்நூல்...

எங்கோ ஒரு மூலையில்
நான்கு சுவர்களுக்குள்ளிருந்து
ஒவ்வொரு இரவும்
தூக்கம் காணாமல் போன கண்களுடன்
ஏக்கப் பெருமூச்சு விட்டுக்கொண்டிருக்கும்
முதிர்கன்னிகளுக்கு...



**சமர்ப்பணம்**

# விழுமிய எண்ணத்தின் விடிவுகள்

ஒவ்வொரு மனிதனுக்குள்ளும்
ஒரு சாதனையாளன் உறங்கிக்கொண்டோ,
விழித்துக்கொண்டோதான் இருக்கிறான்.
ஆற்றல்கள் அரங்கேற வேண்டுமானால்
அடையாளங்கள் பதிவு செய்யப்படல் வேண்டும்.
ஒரு சாதனையாளனுக்கு மகுடம் சூடுவது பதிவுகள்தான்!

❖ ❖ ❖ ❖

புரவலர் ஹாசிம் உமர் அவர்களின்
“மாதம் ஒரு நூல்-இலவச வெளியீட்டுத் திட்டம்”
வேர்களுக்கு விலாசம் தரும் ஒரு செயற்கரிய செயற்பாடு!
புரவலர் புத்தகப் பூங்காவின் ஒவ்வொரு வெளியீடும்
ஒரு சாதனையாளனை- ஒரு படைப்பாளியை
பதிவு செய்து கொண்டிருக்கிறது.
இது நம்மூர் இலக்கியப் புரவலரின்
விழுமிய எண்ணத்தின் விடிவுகள்!

❖ ❖ ❖ ❖

மூன்றாவது ஆண்டு தொடங்கும் வேளையில் இருபத்து நான்கு நூல்கள்
பூங்காவில் பூத்துக் குலுங்குகிறது!
கவிஞர், சிறுகதையாளர், நாடகாசிரியர்
காத்தான்குடி நசீலா எழுதியுள்ள
“கண்ணுக்குள் சுவர்க்கம்” எனும் இச்சிறுகதைத்தொகுதி
பூங்காவின் இருபத்து நான்காவது புஷ்பமாகும்.
கவிதாயினி ஒருவர் பெண்ணியம் பேசும்
போராளியாகவும் மாறலாம் என்பதற்கு அவரது சிறுகதைகள்
ஓர் எடுத்துக்காட்டாகும்.
இலக்கியப் பரப்பில் தனிமுத்திரை பதித்துவரும் எங்கள்
நிறுவனத்திலிருந்து தொடர்ந்தும்
பயனுள்ள அறுவடைகளை எதிர்பார்க்கலாம்!

-பதிப்பகத்தார்-

புரவலர் புத்தகப் பூங்கா
25, அவ்வல் சாவியா ரோட்
கொழும்பு-14

# புதிய களம்; புதிய அனுபவம்; புதிய செய்தி!

சிறுகதைத் துறையின் மூலவர் யார் யாரோ இருக்கலாம். ஆணிவேர் என்னவோ மரியாதைக்குரிய ஜே.கே.அவர்கள்தான்.

ஜெயகாந்தன் என்கின்ற தமிழின் ஆளுமைதான் சிறுகதை இலக்கியத்திற்கு முத்திரை பதித்தது என்பதை நித்திரையில் உள்ளவனும் ஒத்துக்கொள்வான்.

ஜே.கே.யின் ஒவ்வொரு சிறுகதைக்குள்ளும் தாழ்வுற்றுப் போன சமூக அமைப்பில், பாழ்பட்டுப்போன ஒவ்வொரு மனிதனும்- மனிதமும் உயிரோடு நடமாடுவதால்தான் உலக சிறுகதைகளின் தரத்திற்கு அவரது படைப்புக்கள் இன்று ஒப்பீடு செய்யப்படுகிறது.

அவர் கருத்துக்களில் காணப்படும் சமூக கொடுமைகளுக்கும் மனித அவலங்களுக்கும் அவரது எழுத்துக்கள் கருத்தடை மாத்திரைகளைக் கொடுக்கவில்லை. மாறாக நம்பிக்கை என்னும் “டானிக்” கைத்தான் அள்ளி வழங்குகிறது.

சமூக கடமைகளை உணராத படைப்புக்களும் - காம சூத்திராவினாலும் சுகம் காணும் வெளி:யீட்டாளர்களுக்குமிடையில் எந்த வித்தியாசமும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

சமூக இருப்பு குறித்த எனது பார்வையும் அத்தகைய படைப்புக்களையே படம் பிடிக்கின்றது. சுருங்க சொல்வதாயின் அத்தகைய படையல்களே என் நேசம், சுவாசம் எல்லாம்.

திருமதி காத்தான்குடி நசீலாவின் கண்ணுக்குள் சுவர்க்கம் என்னும் சிறுகதைத் தொகுதியும் இலக்கியத்தை சுவாசமாகக் கொண்டவர்களை ஒரு புதிய சுகானுபவத்திற்கு அழைத்துச் செல்கிறது என்பது ஆடை கட்டாத நிஜம்.

1967 இல் கவிதைக் களத்தினூடாக இலக்கியப் பரப்பிலே தடம் பதித்தவர் சகோதரி காத்தான்குடி நசீலா. பாரதி அவதரித்தார் என்ற தலைப்பிலே முதல் கவிதையை பிரசவித்ததன் மூலம் ஈழத்து இலக்கியத் துறையில் பெண்ணியம் பேசுவதற்கு ஒரு பெண் பாரதி பிறந்துவிட்டாள் என்பதை நாசூக்காக உணர்த்தினார் போலும்.

பதினைந்துக்கு மேற்பட்ட வானொலி நாடகங்களை இவர் முஸ்லிம் நிகழ்ச்சிக்காக எழுதியுள்ளார். அந்நாடகங்களில் நான் பங்க பற்றியமை கூட பசுமையான நினைவுகளாக.

அவரது நாடகங்களில் வரும் பெண் பாத்திர வார்ப்புகளில் நசீலாவின் கோபத்தீயின் ஜுவாலைகள் கண்களுக்கு அனலாகவும் காதுகளுக்கு கனலாகவும் இருப்பதைக் கண்டு நான் வியப்புக்குள் வீழ்ந்திருக்கிறேன்.

கவிதை நாடகம் அதைத்தொடர்ந்து கதை படைக்க ஆரம்பித்தார். எண்பதுகளில் அவளுக்கும் வாழ்வு வரும் என்ற இவரது சிறுகதையை சிந்தாமணிப் பத்திரிகை பதிவு செய்தது. பெண் அடிமைத் தனத்தைப் புதைப்பதும் பெண் விடுதலையை விதைப்பதுமே தன் எழுத்தில் தவமாகக் கொண்டவர். இச்சிறுகதைப் போராளி இதுவரை ஐம்பதுக்கு மேற்பட்ட சிறுகதைகளை நம் நாட்டு தினசரிகளுக்கும், வார மாத சஞ்சிகளுக்கும் எழுதிக் குவித்துள்ளார்.

எனினும் புரவலர் புத்தகப் பூங்காவின் வரையறைகளுக்கேற்ப பத்து சிறுகதைகள் மட்டுமே கண்ணுக்குள் சுவர்க்கமாகக் காட்சி தருகிறது.

ஒவ்வொரு கருப்பொருளும் வித்தியாசமானதுதான் என்றாலும் தொனிப்பொருள் பெண்ணிலைவாதம்தான். தொடர்ந்து பத்து கதைகளிலும் பாதிக்கப்பட்ட பெண் பாத்திர வார்ப்புகளுக்கூடாக தேனையும் கொட்டுகிறார். தேளாகவும் கொட்டுகிறார்.

இவரது விவரிப்புத்திறன், செட்டான வார்த்தைப் பிரயோகம், கதை சொல்லும் பாங்கு வாசகர்களை நிச்சயம் வசீகரிக்கும். மொத்தத்தில் கண்ணுக்குள் சுவர்க்கம் புதிய களம், புதிய அனுபவம், புதிய செய்தி.

"எங்கோ ஒரு பெண் இரவுகளுடன் நிரந்தரமாக அழுது கொண்டுதானிருக்கிறாள்." இது காத்தான்குடி நசீலா படித்த கவிதை வரிகள்.

"எங்கோ ஒரு மூலையில் இருந்து பாவப்பட்ட அந்தப் பெண்களுக்காக எழுத்தாணிப் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறார் நசீலா." - இது ஒரு கலைஞனின் வைர வரிகள்.

நசீலாவின் கண்ணுக்குள் சுவர்க்கம் என்னும் இச்சிறுகதைத் தொகுப்பு புரவலர் புத்தகப் பூங்காவினூடாக வெளிவருவது அவரது எழுத்துக்களுக்குக் கிடைத்த காலத்தின் அங்கீகாரம்.

**–கலைஞர் கலைச்செல்வன்**

ஈ/ஜி/02 ஸ்டுவர்ட் வீதி தொடர் மாடி

கொழும்பு-02. தொலைபேசி: 011-2304071

# வெறும் எழுத்துக்களல்ல... உணர்வுகள்!

எனது முதல் சிறுகதை "அவளுக்கும் வாழ்வு வரும்" எண்பத்து ஐந்துகளில் சிந்தாமணி வார மஞ்சரியில் வெளிவந்தது. எனது சேகரிப்பிலிருந்து அச்சிறுகதை தவறியதால் இத்தெகுப்பில் அது இடம் பெறவில்லை.

அதன் பிறகு என்னால் எழுதப்பட்ட சிறுகதைகள் அனைத்தும் பெண்ணியம் பேசுபவையாக அமைந்தது. பெண் உணர்வுகள் மிதிக்கப்படுபவையாக இல்லாவிட்டாலும் மதிக்கப்படுபவையாக இருக்கின்றதா என்பது கேள்விக்குறியே.

"எங்கோ ஒரு பெண் இரவுகளுடன் நிரந்தரமாக அழுது கொண்டுதான் இருக்கின்றாள்" என்பது நான் படித்த மறக்க முடியாத கவிதை வரிகள்.

நான் எழுதிய கவிதைகளில் நாடகங்களில் சிறுகதைகளில் பெண்மையின் துடிப்புகள்தான் அதிகம் கேட்கும். என்னைச் சூழ்ந்துள்ளவற்றை உணர்கின்றேன். எழுதுகின்றேன். பார்ப்பவையாக, கேட்பவையாக, படிப்பவையாக பல வழிகளில் கதைக்குரிய கருக்கள் என்னை வந்தடைகின்றது. ஒரு தாய்க்கதையிலிருந்து எண்ணற்ற சிறுகதைகள் பிறக்குமாம். ஒரு சிறுகதைப் பிரச்சினையையும் கூறி தீர்ப்பையும் கூறினால்தான் முழுமையடையும்.

இங்கேயுள்ள ஒவ்வொரு சிறுகதையையும் வெறும் எழுத்துக்களாக அல்ல உணர்வுகளாகத்தான் வடித்திருக்கின்றேன். ஒவ்வொரு கதையாக வெளிவந்த போது பார்த்துப் பரவசமடைந்து நான் ஒன்று சேர்த்து நூலுருவமாக பார்த்த போது தாய்மையின் பூரிப்பிற்கு நிகரான உணர்வை அடைந்தேன்.

எமக்கான அங்கீகாரம் புரவலர் ஹாஷிம் உமர் அவர்களின் புத்தகப் பூங்கா மூலமாக கிடைத்திருக்கின்றது. அல்ஹம்துலில்லாஹ். இன்ஷா அல்லாஹ் இச்சேவை மேலும் தொடர வேண்டும். என்னைப் போன்ற இன்னும் பல எழுத்தாளர்கள் இனம் காணப்பட வேண்டும். நான் படைத்த வானொலி நாடகப் பாத்திரங்களில் தன் நடிப்பால் உயிர் கொடுத்த கலைஞர் கலைச்செல்வன் அவர்கள் இந்நூலின் சிறப்பிற்கு உதவியதை என்னால் என்றுமே மறக்க முடியாது.

நான் நேசிக்கும் வாசகர்களே! இனி வாசிக்கும் நீங்கள்தான் பேச வேண்டும்.

**-காத்தான்குடி நசீலா**

இல: 18/33
அல்அமீன் வித்தியாலய வீதி,
புதிய காத்தான்குடி - 06

# உள்ளே... உள்ளவை


| படையல் | | பக்கம் |
| --- | --- | --- |
| 01. | நெஞ்சம் மறப்பதில்லை | 1 |
| 02. | ஞாபகம் வருதே | 14 |
| 03. | பெருநாள் பரிசு | 19 |
| 04. | பாவ மன்னிப்பு | 26 |
| 05. | முஹர்ரம் தந்த விடுதலை | 33 |
| 06. | நடை | 41 |
| 07. | தலைநோம்பும் புதிய பயணமும் | 49 |
| 08. | கண்ணுக்குள் சுவர்க்கம் | 56 |
| 09. | சுனாமியும் ஒரு சோடி காலுறையும் | 61 |
| 10. | இரசனைகள் | 66 |

# 1 நெஞ்சம் மறப்பதில்லை

மேகத்தினூடாக மெல்ல வெளிவந்து கொண்டிருந்தது நிலவு. அன்று பூரணை நாள். கடலின் மேற்பரப்பெல்லாம் நிலவின் ஒளிபட்டு ஜொலித்துக் கொண்டிருக்க வெள்ளை நுரையுடன் வருவதும் போவதுமான அலையின் செயற்பாடு என்றும் போல் தொடர்ந்து கொண்டு இருந்தது. ஆர்ப்பரிக்கும் அத்தனை அழகிலும் கம்பீரமாகத் தெரிந்த கடலின் ஆழமான அமைதியுடன் உறைந்து போய் நின்றாள் நஸ்லியா.

கடல் அலைகளின் இரைச்சலுக்கு ஈடுகொடுத்து நஸ்லியாவின் உள்ளத்தில் எழுந்து கொண்டிருந்த வேதனை அலைகள்... கரையுடைத்து அவள் கண்களின் வழியே பாதை தேடிக்கொண்டிருந்தன. ஒரு எல்லைக்கப்பால் அவளால் நிற்க முடியவில்லை. கால்கள் மெலிதாக நடுங்க பக்கத்தில் பெரிதாக வெட்டிப் போட்டுக்கிடந்த மரக்குற்றியின் மீது சரிந்து உட்கார்ந்து முழங்காலை கைகளால் கட்டி அதில் முகம் புதைத்து விம்மி அழத்தொடங்கினாள். தேற்றுவாரைத் தேடாத அந்த அழுகையின் ஆழத்தையும் பாரத்தையும் அல்லாஹ்தான் அறிவான்.

'பாலமுனை' நஸ்லியாவின் சொந்தக் கிராமம். அவள் ஓடித் திரிந்து விளையாடியதெல்லாம் இந்தக் கடல் மண்ணில்தான். மண்ணரிப்பைத் தாண்டினால் வரும் ஒற்றையடிப்பாதை வழியாக கொஞ்ச தூரம் நடந்தால் நஸ்லியாவின் வீடு இருக்கும். பென்னம்பெரிய வளவு வந்து விடும். கூலிக்கு ஆட்கள் வைத்து இரண்டு மூன்று இயந்திரப் படகும் வைத்து மீன் வியாபாரம் பண்ணுபவர்தான் நஸ்லியாவின் வாப்பா கலந்தர் காக்கா. ஊர் நிர்வாகம், பள்ளிவாசல் நிர்வாகம் என்று நேர்மையான முறையில் நடந்து கொள்ளும் ஸாலிஹான- எளிமையான மனிதர். மனைவி பாத்தும்மா பாடுபட்டு பொறுப்புணர்ச்சியுடன் குடும்பத்தையும் கட்டிக்காத்து புருசனுக்கும் பக்கபலமாக வாழ்ந்துவரும் கெட்டிக்காரி. அவர்கள் இருவருக்கும் நஸ்லியா தலைச்சன். நஸ்லியாவிற்குப் பிறகு இரண்டு ஆணும் ஒரு பெண்ணுமாக நான்கு பிள்ளைகள். அதிகம் அலட்டிக் கொள்ளத் தேவையில்லாத அளவான குடும்பம். இனப் பிரச்சினையின் பின் ஏற்பட்ட தெளிவில தெம்புடனும்,நம்பிக்கையுடனும் நாட்களை நகர்த்திக் கொண்டிருந்தார்கள்.

நஸ்லியாவின் வாப்பாவிற்கு ஒரே தங்கை ஆரிபா. அழகானவள். ஆனால் வாய் பேச முடியாத ஊமை. அளவற்ற பாசம் வைத்திருந்த தங்கையின் ஊனத்திற்கும் சீதனம் கொடுத்து துணையொன்றை தேடிக் கொடுத்தார்கள். நான்கே வருடத்து வாழ்க்கை... இரண்டு வாரிசுகளுடன் தங்கை வந்து நின்ற போது எதற்குமே அதிகம் துயரப்படாத கலந்தர் காக்கா கூட மனம் கலங்கித்தான் போனார். மனைவி பாத்தும்மாவின் ஆறுதலால் தேறித் தங்கையின் குடும்பத்தையும், தன் குடும்பத்தையும் இணைத்து ஒரே குடும்பமாக்கிவிட்டார். பாத்தும்மாவும் பெயருக்கேற்ற நாயகியல்லவா? மதினி என்று மனதால் கூட கரிச்சுக் கொட்டாமல் பாசத்துடனும், பரிதாபத்துடனும் எல்லோரையும் ஆதரித்து ஏற்றுக் கொண்டாள். தன் வீட்டுக்குப் பக்கத்திலேயே சாதாரணமான வசதிகளுடன் வீடொன்றை அமைத்து தங்கையையும், குழந்தைகளையும், குடியிருத்தி தன் குடும்பத்தையும், தங்கை குடும்பத்தையும் தன்னிரு கண்கள் போல் காத்து நின்றார் கலந்தர் காக்கா.

'சாபிர்' ஆரிபாவின் மூத்த மகன். நஸ்லியாவிற்கு மூன்று வயது பெரியவன். அவளுக்கு நினைவு தெரிந்தது முதல் மனதில் விழுந்ததெல்லாம் அவன் முகம்தான். 'சாபிர் மச்சான்' நண்டு பிடித்துத்தா... சாபிர் மச்சான் சிப்பி பொறக்கித்தா' என்று அவன் பின்னாலேயே திரிவாள். யார் என்ன பேசினாலும் பொருட்படுத்தவே மாட்டாள். அவளைப் பொறுத்தவரை எல்லாமே சாபிர் மச்சான்தான்.

இரண்டாவது மகன் சாஜித். சாஜித் வளர வளரத்தான் தாயைப்போல அவனுக்கும் வாய்ப்பேச முடியாதென்பது தெரிய வந்தது. இறைவன் எழுதியதை மாற்றி எழுத யாரால் முடியும். மனிதன் விதித்ததென்றால் போராடிப் பார்க்கலாம். இறைவன் எழுதியதை ஏற்றுக் கொள்ளத்தானே வேண்டும். வேதனைதான்... வேறு வழி என்ன? எல்லோரும் பொறுமையுடன் பொருந்திக் கொண்டார்கள். ஆனால் காது நன்றாக கேட்பதால் வாய் பேச முடியாத நிலையிலும் மிகவும் கெட்டித்தனமாக இயங்கும் சக்தியை சாஜித் பெற்றிருந்தான்.

நஸ்லியாவின் ஓதல், படிப்பு எல்லாமே இவர்கள் இருவருடனுந்தான். பொழுதெல்லாம் அவர்களுடனேயே இருந்து விட்டு இரவு சாப்பாட்டிற்கும், தூக்கத்திற்கும் கூட 'மாமி வீட்டிலேதான் தங்கப் போகிறேன்' என்று அடம் பிடித்து ஆர்ப்பாட்டம் பண்ணுவாள்.

இனி கலந்தர் காக்கா பிரம்புடன் வர வேண்டும். வந்தால்தான் அழுது கொண்டே உம்மாவிடம் ஓடுவாள். அழுது கொண்டே தூங்குவாள். அவளது எண்ணம், தேடல், எதிர்பார்ப்பு எல்லாமே மாமி வீட்டை சுற்றித்தான் வலம் வந்தது. அந்த ஏழைக் கிராமத்தின் இளம் தென்றல் நஸ்லியா இப்படித்தான் வளர்ந்தாள்.

"சாஜித் நான் வேலையெல்லாம் முடிச்சுட்டு வீட்டுக்கு வாரதுக்கு சுணங்கும். நஸ்லியாவையும், தம்பிமாரையும் கூட்டிகிட்டு வீட்டுக்குப் போய்ச்சேரு. டேய் சின்னப்பசங்களா! போய் குளிச்சிட்டு சாப்பிட்டுட்டுத்தான் தூங்கனும். இல்ல...? வந்து கவனிச்சுக்குவன்."

வாப்பாவின் ஓங்கிய சத்தத்தில் முகம் நிமிர்த்திய நஸ்லியா எழுந்து நின்று மண்ணைத் தட்டி விட்டு முகத்தையும் துடைத்துக் கொண்டாள். அருகில் வந்த சாஜித் அவள் அழுத முகத்தை அடையாளம் கண்டு கொண்டு,

"அழக்கூடா நஸ்லியா மச்சி. இப்படியா அழுதிட்டிருந்திங்கென்றா உடம்புக்குத்தான் ஆகா. எல்லாத்தையும் அல்லாஹ் பார்த்துக்கிட்டிருக்கிறானில்லையா? எல்லாத்தையும் ஹயராக்கித் தருவான். மனச நல்லா தெம்பா வெச்சிக்குங்க..."

கைச்சைகையால் காட்டிக்காட்டி சாஜித் சொன்ன ஆறுதல் வார்த்தைகள் நஸ்லியாவின் விழிகளை மறுபடியும் ஈரமாக்கின. பதிலேதும் பேசாமல் மௌனமாக நடந்தாள்.

பீப்... பீப்... பூம்... என்று காலால் மண்ணைத் தட்டி ஸ்டார்ட் எடுத்து கையால் ஸ்டேரிங்கை பிடித்தது போல் பாவனை செய்து ஒரு வட்டமடித்து உடம்பையே வாகனமாக்கி ஓடிக்கொண்டு போகும் தம்பிமார் இருவரையும் பார்த்து ஒரு கனம் மெய்மறந்து போனாள் நஸ்லியா.

"நினைவுகள்... நினைவுகள்... நரக வதை செய்யும் நினைவுகளே...! இதயத்தையும் கழட்டி எடுத்து போய் விட மாட்டீர்களா? வயதும் போயிருக்க வேண்டாம். வாலிபமும் வந்திருக்க வேண்டாம். குற்றமற்ற நெஞ்சுடன் குழந்தையாகவே இருந்திருக்க வேண்டாமா...?"

பொங்கி எழும் மனதை சமாதானப்படுத்த வழி தெரியாத நஸ்லியா நேரே கிணற்றடிக்குப் போய் வுழு எடுத்துக் கொண்டு இஷாத் தொழுகையை முடித்து விட்டு குர்ஆனை கையில் ஏந்திக் கொண்டாள்.

நேரம் நடுநிசியைத் தாண்டியிருக்கும்... ஊரே உறங்கியிருந்தது. ஒரு சோடி விழிகள் மூடித்தானிருந்தன. ஆனால் உறக்கத்தின் நினைவு கூட அந்த விழிகளுக்கு இல்லை என்பதுதான் உண்மை. நினைவின் ஊர்வலங்களை இரை மீட்டிக் கொண்டிருந்தாள். மறக்கக் கூடிய நினைவுகளா அவைகள். பிறப்போடும், வளர்ப்போடும் ஒட்டிய நினைவுகளை வெட்டிப் போட வேண்டுமென்றால் அவள் உயிர்தான் பிரிய வேண்டும்.

"என்னங்க... தூங்கிட்டிங்களா...?"

"இல்ல கேட்டுட்டுதான் இருக்கன் சொல்லு"

உம்மாவின் கேள்வியும் வாப்பாவின் பதிலும் நஸ்லியாவின் காதுகளையும் கவனப்படுத்தி கடந்து சென்றன.

"புள்ள நஸ்லியாவைப் பார்க்கும் போது மனசுக்கு ரொம்ப கஷ்டமா இருக்குங்க... ஒழுங்கா சாப்பிட மாட்டேங்கிறா... ஒருவரோடையும் ஒட்ட மாட்டேங்கிறா... இதன்ன ஏதேன்டு பார்க்க வேண்டாமா...? இப்படியே விட்டா நம்ம புள்ளட நிலமை என்னாகுமெண்டு நினைக்கவே பயமாக்கிடக்குங்க..."

ஆதங்கத்தோடு எழுந்த பாத்தும்மாவின் கேள்விகளுக்கு நெடிய மூச்சொன்றே பதிலாக வந்தது. பாத்தும்மாவே தொடர்ந்தாள்.

"சாபிர் தம்பி ஏன் இப்படி இருக்குது. என்னன்டாலும் ஒரு கடதாசி எழுதிப் போடலாமில்லையா...? கிட்டத்தட்ட ஆறு மாசத்திற்கு மேலாகுது ஒரு கடதாசியைக் கண்டு... டெலிபோன்ல பேசி... எப்பவும் போல மாசத்திற்கு ரெண்டு கடிதம் நஸ்லியா போடுறாதானே... சாபிருக்குக் கிடைக்காட்டி திரும்பியல்லவா வந்திருக்கும்... நம்மல தெரிஞ்ச அறிஞ்ச புள்ள குட்டிகள் இருக்கும்தானே... நீங்க ஏதேன்னு விசாரிச்சுப் பார்த்தீங்களா...?"

மனைவியை அவசரமா இடைமறித்த கலந்தர் காக்கா...

"பாத்தும்மா ராச்சத்தம் பெருஞ் சத்தம்... அல்லாஹ் ரஸுலேயெண்டு சொல்லி பேசாமல் படுங்க. காலையில் எழும்பி மத்தத்தப் பத்தியெல்லாம் பேசிக்கலாம்."

சொல்லியதோடு நின்று விடாமல் காது வரை பெட்சீட்டை இழுத்துவிட்டு மனைவிக்கு முதுகுப் புறத்தை காட்டியவாறு கண்களை

மூடிக் கொண்டார். பாத்தும்மாவிற்கு தெரியாதா என்ன? தம் புருசனுக்கும் நிம்மதியான தூக்கம் தொலைந்து போய் பல நாட்களாகி விட்டதென்று. தன் மன ஆதங்கத்திற்கும் சேர்த்து நீண்ட பெருமூச்சொன்றை கண் மூடி காற்றிலே கலக்க விட்டு பாத்தும்மாவும் படுக்கையிலே மெல்லச் சாய்ந்தாள்.

வாப்பா பதில் சொன்னால் ஏதாவது தெரிஞ்சுக் கொள்ளலாமென்று காத்திருந்த நஸ்லியாவிற்கு ஏமாற்றந்தான் மிஞ்சியது. முன் மண்டபத்தில் எல்லோரும் தூங்க... படுக்கையில் அவள் மட்டும்தான். விடி விளக்கின் வெளிச்சத்தில் கூரையையே வெறித்துக் கொண்டிருந்தாள்.

என்ன நடந்தது? சாபிர் மச்சானுக்கு என்ன நடந்தது? நெஞ்சில் சுருக்கென்று தைத்த ஆயிரம் ஆயிரம் வலிகளோடு முகம் மூடி அழத் தொடங்கினாள். இரவும் அமைதியும் ஆறுமாத காலமாக அவள் அழுது குளரும் நிலமைக்கு சாட்சி சொல்ல முடியாமல் மௌனித்து நின்றன.

பாலமுனையில் பண்போடு கூடிய தலைமைத்துவத்திற்கு கலந்தர் காக்காவின் குடும்பம்தான் என்றாகிவிட்டது. ஊர் மக்களிடம் அப்படியொரு மதிப்பும் மரியாதையும். கலந்தர் காக்காவின் எண்ணமெல்லாம் தம் மக்களையும், மருமக்களையும் படிக்க வைக்க வேண்டும் என்பதுதான். சாபிர், சாஜித், நஸ்லியா மூவருமே போட்டி போட்டுக் கொண்டு கெட்டித்தனமாகவே படித்தார்கள். மருமக்கள் இருவருக்கும் இரண்டு சைக்கிள் வாங்கி பாலமுனையை ஒட்டிய நகரமான காத்தான்குடி பெரிய பாடசாலைக்கு அனுப்பி வைத்தார். மகளை தானே சைக்கிளில் ஏற்றிக் கொண்டு போய் விட்டு ஏற்றி வந்தார். மகள் பெரியவளானதும் மகளின் படிப்பை நிறுத்தச் சொல்லி பாத்தும்மா எவ்வளவோ வாதாடிப் பார்த்தாள். கலந்தர் காக்கா மூச்சுக் காட்டக் கூடாதென்று கண்டிஷனாகச் சொல்லிவிட்டார்.

சாபிர் உயர்தர பரீட்சைக்குச் சித்தியடைந்தும் பல்கலைக்கழக அனுமதி கிடைக்கவில்லை. தொடர்ந்து முயற்சி செய்யும்படி எல்லோரும் எவ்வளவு சொல்லியும் மறுத்து மாமாவின் தொழிலோடேயே தன்னை இணைத்துக் கொண்டான்.

அதன் பிறகு உயர்தர பரீட்சை எழுதிய நஸ்லியா நல்ல பெறுபேறுகள் பெற்று பல்கலைக்கழக அனுமதி கிடைத்தும் சாபிர் மச்சானுக்கு போகக் கிடைக்ககாத இடம் தனக்கும் வேண்டாமெனக் கூறி வீட்டிலேயே இருந்து விட்டாள்.

மகளும், மருமகனும் அன்போடு பழகுவதை கலந்தர் காக்கா என்றுமே கண்டிக்க நினைத்ததில்லை. தவறு செய்யும் திருட்டுப் புத்தியுள்ளவர்களை ஆயிரம் விலங்கு போட்டு வைத்தாலும் பயனில்லை. ஆனால் கள்ளமில்லா நல்ல மனதோடு அன்பைப் பரிமாறும் இவர்களைக் கண்டிப்பது தவறுசெய்ய தானே சொல்லிக் கொடுப்பது போலாகிவிடும் என்ற தூர நோக்கு அவருக்கு. ஆனாலும் கண்கானிப்பதில் கெட்டிக்காரர்.

இப்படியே நாட்கள் நகர்ந்து கொண்டிருக்கும் போதுதான் சாபிரின் காத்தான்குடி நண்பனொருவன் றியாத்திலிருந்து சாபிருக்கு கடிதமொன்று அனுப்பி வைத்திருந்தான். தான் வேலை செய்யும் கம்பனியில் வெற்றிடம் ஒன்று இருக்கென்றும், சாபிர் அங்கு வந்தால் நல்ல சம்பளமும் சலுகைகளும் கிடைக்குமென்றும் எழுதியிருந்தான்.

புது வீடு கட்ட வேண்டும் இன்னும் விருத்தியாக தொழிலை செய்ய வேண்டும் என்று ஆசைப்பட்டுக் கொண்டிருந்த சாபிருக்கு அதிர்ஸ்டமே காலடியில் தேடி வந்ததைப் போலிருந்தது.

கலந்தர் காக்கா மறுப்பேதும் சொல்லவில்லை. நஸ்லியாதான் பதறிப் போனாள். எல்லோரையும் சமாதானப்படுத்தி மூன்றே மாதங்களில் சாபிர் றியாத்திற்கு பயணமாகி விட்டான். உயிரோடும், உணர்வோடும் கலந்த அந்த உறவு ஊரை விட்டுப் போனதும் ஒன்றுமே இல்லாததைப் போல் ஆகிவிட்டாள் நஸ்லியா. அவன் தந்துவிட்டுப் போன நினைவின் சுமைகளோடு போராடிப் போராடி ஓய்ந்து போனாள்.

ஹோ... என்று பரந்து விரிந்து கிடக்கும் கடலின் கரையில் நேரம் போவது தெரியாமல் உட்கார்ந்திருப்பாள். சாபிர் மச்சானைப் பிரிந்த துயரம் அந்தக் கடலை விடப் பெரிதாகவே அவளுக்குத் தோன்றியது. பாவம்! மெண்மையான அவள் பெண்மைக்கு அதுதான் நிரந்தரமான காதல் பரிசென்பதை விதி அன்று அவளுக்கு சொல்லாமலே விட்டு விட்டதே.

நாட்களின் நகர்வில் சாபிரிடமிருந்து வரும் கடிதங்களால் ஓரளவு அமைதியுற்ற அவள் உறக்க மயக்கத்தில் கூட சைக்கிள் மணியோசை கேட்டு திடுக்கிட்டு கண்விழித்து தனக்குத் தானே சிரித்து நாணிக்கொள்வாள். கண்படும் இடம் கைபடும் பொருள் கால் போகும் பாதை என்று எல்லாவற்றிலுமே அவன் ஞாபகங்களின் எச்சம் மிஞ்சியிருந்தது.

இப்படியே இரண்டு வருடங்கள் ஓடிப்போனது. அதன் பிறகு வந்த இந்த ஆறு மாதங்களில்தான் சூழ்நிலை அடியோடு மாறியது. படிப்படியாக கடிதம் வருவது குறைந்தது. 'நஸ்லியா சாபிர் மச்சானிடமிருந்து டெலிபோன்' என்று டெலிபோன் இருக்கும் வீடுகளில் இருந்து கிடைக்கும் அழைப்பும் குறைந்தது; இன்று அறவே சாபிரிடமிருந்து எந்தத் தொடர்பும் இல்லாமலாகி விட்டது. அரசல் புரசலாக காதில் விழுந்த செய்திகள் எதுவுமே நல்லதில்லை என்பதால், கலந்தர் காக்கா உள்ளுக்குள்ளேயே உடைந்து போனார். வெளியில் பயங்கர அமைதி காத்தாலும் அவரின் மனம் மட்டும் அப்படி எதுவுமே நடந்திருக்கக் கூடாதென்று பிரார்த்தித்தபடியே துடித்துக் கொண்டிருந்தது.

இரவும் பகலுமாக பொழுதுகள் போய்க் கொண்டிருந்தன. இறைவன் இதயமென்று ஒன்றை இயற்கைக்கு வைத்துப் படைக்காமல் விட்டது எவ்வளவு நல்லதாகப் போயிற்று. மனிதனைப் போல் இயற்கையும் வேதனையை அதிகம் சுமந்து நிலைமாறினால் நிலமை என்னவாகும். உண்மையான அன்பின் பிரிவு உண்மையான அன்பின் ஏமாற்றம், உண்மையான அன்பின் தோல்விதான் வேதனைகளிலே மிகக்கொடியது அதற்கு மொத்த சாட்சியாக கண்ணீர்ச் சிலையென வளைய வந்து கொண்டிருந்தாள் நஸ்லியா.

வீட்டின் முன்புறம் ஏராளமான பூ மரங்களை வைத்து ஒரு பூந்தோட்டத்தையே உருவாக்கியிருந்தாள். அதில் ஜாதி மல்லிகையும் அவள் தோட்டத்தை அலங்கரித்தது. சாபிருக்கு மல்லிகைப் பூக்களென்றால் அத்தனை பிரியம். வெள்ளை வெளேரென்று தூய்மையுடன் பட்டுப் போன்ற மென்மையுடனும் கமகமவென்ற வாசத்தைப்போல் மனசு நிறைந்த நல்ல எண்ணங்களுடனும் மனிதர்கள் வாழ வேண்டும் என்று அடிக்கடி சொல்லிக் கொள்வாள். அந்த மல்லிகைப் பந்தலின் கீழ் வந்து நின்றாளென்றால் நஸ்லியா தன்னையே மறந்து போவாள்.

அன்றும் அப்படித்தான் சருகுகளைப் பொறுக்கி விளக்குமாறால் மண்ணைக் கூட்டி துப்பரவு செய்து கொண்டிருந்த நேரம்தான்...காத்தான்குடி கடைகளில் சாமான்கள் வாங்கி வர சைக்கிளில் புறப்பட்டுப் போன சாஜித் அரக்கப் பரக்க ஓடி வந்து மூச்சிறைத்தபடியே அவன் பாசையால் கூச்சலிட்டுக் கொண்டு நின்றான். என்ன நடந்தது, என்ன நடந்தது என்று ஆளுக்கொரு பக்கம் பதற அவன் தான் கண்ணால் கண்டதை விபரிக்க விபரிக்க வீடே அமளி துமளிப்பட்டு கொண்டிருந்தது.

அவனைக் கேள்வி மேல் கேள்வி கேட்டு துளைத்துக் கொண்டிருந்த அந்த வினாடிகளில் புழுதியை வாரி இறைத்து சீறிக் கொண்டு நஸ்லியா வீட்டு வாசல் முன்னே வந்து நின்றது அந்தப் புதிய வேன்.

வேனிலிருந்து மூன்று ஆண்களும், இரண்டு பெண்களுமாக சாபிர் மச்சானும் இறங்க... அவன் பின்னே பட்டுப் புடவையும் பளபளக்கும் நகைகளுமாக புதுமணக் கோலத்தில் பெண்ணொருத்தி இறங்க... அடிக்கு மேல் அடி விழுந்த அதிர்ச்சியால் நஸ்லியா குடும்பமே உறைந்து போய் நின்றது.

எல்லோருடனும் சாபிர் இயல்பாகப் பேசிச் சிரித்த படியே வீட்டிற்குள் நுளைந்து கொண்டான். சந்தோசமோ துக்கமோ அளவுக்கதிகமாக வரும்போதுதான் பேசுவதற்குக் கூட நா சக்தியற்றுப் போகிறது. அதே நிலமையில் நஸ்லியாவின் குடும்பத்தினர் ஒவ்வொருவரும் ஆளுக்கொரு பக்கமாக திக்பிரமை பிடித்தவர்கள் போல் உட்கார்ந்து கொண்டனர். ஒரு ஐந்து பத்து நிமிடம் கழிந்திருக்கும் சாபிரும், சாபிரை ஒத்த வயதுடைய இன்னொருவரும் கலந்தர் காக்காவின் முன்னே வந்து நின்று ஸலாம் கூறிய பின் கூட வந்தவரே மெல்ல மெல்ல பேசத் தொடங்கினார்.

“முதல்ல எங்க எல்லோரையும் அல்லாஹ்வுக்கும் ரஸுலுக்குமாக மன்னிச்சுக்கனும். என்னோட தங்கையைத்தான் சாபிர் கல்யாணம் கட்டிக்கிட்டார். மச்சான் உங்கள பத்தின எல்லா விபரத்தையும் எங்ககிட்ட சொல்லியிருக்காரு. நானும் என்னுடைய தங்கையும் மனைவியும்தான் றியாதில தொழில் பார்த்தோம். அப்போதுதான் நான் சாபிரை றியாத்திற்கு வரச்சொல்லி எடுத்தேன். சாபிர் எங்ககூடத்தான் தங்கி இருந்தாரு.

“சாபிரும் என்னுடைய தங்கையும் ஒருத்தர ஒருத்தர் நேசிக்கிறத அறிஞ்சி அங்கேயே வச்சு கல்யாணம் கட்டிக் கொடுத்திட்டம்”.

சாபிர் உடைய மைத்துனன் பேச்சை மேலும் தொடர்கிறான்.

“அவங்கள வளத்து ஆளாக்கின பெரியவங்க உங்ககிட்டயெல்லாம் ஒரு வார்த்தை சொல்லாதது குற்றம்தான். ஊருக்கு வந்து உங்களையெல்லாம் நேரடியாகவே சந்திக்கலாமென்று இருந்திட்டம். சாபிர் மச்சான்ட உம்மா கூட ரொம்ப அழுதிட்டாங்க. நாங்க எல்லோரும் நேற்றுத்தான் காத்தான்குடிக்குப் புறப்பட்டு வந்தம். உங்க மருமகனும் மனைவியும் ஒரு கிழமைக்கு உங்க கூடத்தான தங்கப் போறாங்க. ஒரு மாசத்துல நாங்க எல்லோரும் மறுபடியும் றியாத்திற்குப் புறப்பட்டுப் போயிடுவம். சந்தோசமா நீங்க ஒத்துக்கனும்...”

தயங்கியபடியே அவர் மெல்ல மெல்ல சொல்லும் போது தலையாட்டியபடி கேட்டுக் கொண்டிருந்த கலந்தர் காக்கா அவர்கள் போனதும் துண்டால் வாயால் பொத்தியபடி அழுத அழுகை இருக்கின்றதே... தெய்வ நீதி அன்றே கொல்லுமென்றால் உலக இயக்கம் என்றோ நின்று போயிருக்குமல்லவா? நன்றி மறத்தலையும் நம்பிக்கை துரோகத்தையும் அனுபவித்தவர்களுக்குத்தான் வேதனை புரியும் என்பது போல் கலந்தர் காக்கா அழுததை தேற்றுவதற்குக் கூட அங்கு யாருக்கும் தெம்பில்லை. கொஞ்ச நேரத்தில் வந்த வேன் புறப்பட்டுப் போன சத்தத்துடன் எல்லாமே நிசப்தமாக, ஊருக்குள் செய்தி காட்டுத் தீ போல் பரவியது.

“சாபிர்... காத்தான்னுடிப் பெண் ஒருத்திய றியாத்தில வச்சு கல்யாணம் கட்டிக்கிட்டு ஊருக்குள்ள கூட்டிக்கிட்டு வந்திருக்கானாம். வருஷக் கணக்கில் காத்திருந்த நஸ்லியாவிற்கு இனி பைத்தியம் பிடித்தாலும் பிடிக்கும். கலந்தர் காக்கா மருமக்கள எப்படிப் பார்த்துக்கிட்டாரு. வளர்த்த கடா மார்பில மோதிருச்சு பார்த்தியா. இதுக்குத்தான் பலயீனம் நிறஞ்ச மனிசனில அளவுக்கதிகமா அன்பும் நம்பிக்கையும் வைக்கக் கூடா என்கிறது”

ஆளுக்கொவ்வொன்றாய் பலவிதமான கருத்துக்கள் ஊரெல்லாம் அலைமோதின.

ஒரு மரண வீட்டின் அமைதிதான் நஸ்லியாவின் வீட்டையும் மூடியிருந்தது. நஸ்லியா வீட்டில் சோகமென்றால் பொழுதுக்கென்ன வந்தது? சோறு தண்ணி.... ஏன்? ஒருவர் கண்ணிலும் ஒரு சொட்டு தூக்கமில்லாமலும் அன்றைய பொழுது இரவாகி விடிந்தது.

காலையில் சாஜித் வந்து நின்று வயிற்றைத் தொட்டுக் காட்டி "தேநீர் வச்சுத் தாங்க மாமி தாகமா இருக்கு" என்று கைச்செய்கையால் கேட்டதும் பாத்தும்மா பதறிப் போனாள். நாநா வந்ததன் பிறகு வீட்டிற்குப் போகாமல் எங்கேயோ நின்று விட்டு விடிந்ததும் மாமி என்று ஓடி வந்திருக்கிறான். நினைத்தாலே நெஞ்சில் சுரக்கும் பாசம் முட்ட ஒரு கனம் எல்லாவற்றையும் மறந்து காலைக் கடமையில் தன்னைப் பொருத்திக் கொண்டாள் பாத்தும்மா.

கலந்தர் காக்காவும் எழும்பி தேநீர் குடித்து விட்டு தன் கடமைக்குப் போய்விட்டார். ஒருவர் துக்கம் மற்றவரின் துக்கத்தை அதிகப்படுத்தி விடக் கூடாதென்ற கவனத்தில் இயல்பாக நடப்பதைப் போல் ஒவ்வொருவரும் நடித்துக் கொண்டிருந்தனர்.

மல்லிகைக் கொடியின் கீழ் போய் நின்ற நஸ்லியா கீழே விழுந்து கிடந்த பூக்களை ஒவ்வொன்றாகப் பொறுக்கி தட்டில் சேகரிக்கத் தொடங்கினாள். சாபிர் மச்சானின் மனதிற்கும் மல்லிகைப் பூக்களுக்கும் எந்த சம்பந்தமும் இல்லாமல் போகலாம். ஆனால் மல்லிகைப் பூக்கள் மல்லிகைப் பூக்கள்தானே. அதை அசிங்கம் படிந்த எந்தக் கால்களும் மிதித்துவிடக் கூடாது என்ற வெறித்தனமான எண்ணத்தில் வாடிய பூக்களையும் விடாமல் பொறுக்கினாள்.

இரண்டு தேநீர் கிளாசுகளுடன் வந்த சாஜித் ஒன்றை அவள் கையில் கொடுத்துவிட்டு ஆவேசத்துடன் கண்கள் சிவக்க, கைச் சைகையாலேயே தன் கோபத்தை கொட்டினான்.

"மறந்திடுங்க மச்சி... எல்லாத்தையுமே மறந்திடுங்க. புதிதா கட்டிக் கொடுத்த வீடும் வேண்டிக் கொடுத்திருக்கிற கார் மோட்டார் சைக்கிளும் வீடு நிறைய போட்டிருக்கின்ற சாமான் சக்கட்டும்தான் அவனுக்குப் பெரிசாகப் போயிடுச்சு. மண்ணுக்குள்ளே வைக்கிறப்போ இதையெல்லாம் அள்ளிக்கிட்டுப் போகமாட்டான். உங்களுக்குச் செய்த அநியாயத்தத்தான் அள்ளிக்கிட்டுப் போவான். அல்லாஹ் பாத்துக்குவான். அவன் கண் முன்னால நீங்களும் வாழ்ந்து காட்டனும். எல்லாத்தையும் மறக்கனும் மச்சி. நீங்கள் எல்லாத்தையும் மறக்கனும்."

பெப்... ப்... பே... பெ... ப்... பே... என்று அவன் கொந்தளித்துக் கொட்டியவற்றில் உள்ள ஆதங்கத்தைப் புரிந்து கொண்ட நஸ்லியா மல்லிகைத் தட்டை நெஞ்சோடு அணைத்து சுவரில் சரிந்து உட்கார்ந்து கொண்டே...

"மறக்கல... மறக்கமாட்டேன்... மறக்க முடியல்ல. யா அல்லாஹ்! என்னால எந்தயுமே மறக்க முடியலையே...!"

தன்னை மறந்து நஸ்லியா ஓ... என்று வாய் விட்டு அழத் தொடங்கியதும் அது வரையில் ஒரு ஓரமாக நின்று அத்தனையும் கேட்டுக் கொண்டிருந்த பாத்தும்மாவின் பெத்த வயிறு கொதித்துப் போனது...

கலந்தர் காக்காவும் சாஜித்தும் வலையைப் பிரித்துப் போட்டு துப்பரவு செய்து கொண்டிருந்தார்கள். மாமாவின் குறிப்பறிந்து வேலை செய்வதில் சாஜித் கெட்டிக்காரன். எள் என்றால் எண்ணெய்யாக நிற்பான். அவனின் வயதிற்கும் வாய் பேசாத் தன்மைக்கும் ஈடுகொடுத்து கலந்தர் காக்காவும் எப்பொழுதும் உற்சாகமாக வேலையில் இணைந்து கொள்வார். அந்த உற்சாகம் சுறுசுறுப்பெல்லாம் இப்போது இருந்த இடம் தெரியாமல் மறந்து போய்விட்டதே.

அவ்ர்களோடேயே புறப்பட்டு வந்த நஸ்லியா கரையில் இறங்கி அலை கால்களில் படும் தூரத்தில் நின்று அண்ணாந்து பார்த்தாள். தொடுவானம் மிகத் தெளிவாகத் தெரிந்தது. மேக மூட்டமே இல்லை. நாளை இந்த சூழலில், இந்த காற்றில் சாபிர் மச்சானின் மூச்சுக் காற்று கலந்திருக்காது. வந்தவர்கள் சொல்லிவிட்டுப்போன ஒருகிழமைக் கெடுவும் இன்றோடு முடிந்து விட்டது. நாளை சாபிர் மச்சான் போய் விடுவார். நெஞ்சு வெடிக்கின்றாப் போல் வேதனை முட்டிக் கொண்டு வந்தது. அப்படியே சரிந்து தரையில் உட்கார்ந்து கொண்டாள்.

“சாபிர் மச்சான்! உங்கட மூச்சுக் காத்து கூட இன்னொருத்தி மேல படக் கூடாது. பட்டா நான் உயிரோடயே இருக்க மாட்டன்...”

சாபிர் ஊரில் இருக்கும் போது உரிமையுடன் அவள் அடிக்கடி சொல்லிக்கொள்ளும் விசயம் இது. இன்று அந்த வார்த்தைகள் மட்டும்தான் அவளுக்கு சொந்தமாக இருக்கின்றது. நீர் நிறைந்து கண்கள் கடலாகின்றது. விதியின் ஓட்டத்தில் உயிர் வாழ்தல்தான் தலையாய நிர்ப்பந்தமாகின்றது. ஒவ்வொரு மனிதனும் உள்ளுக்குள் எதை எந்தளவு சுமக்கின்றான் என்பது யாருக்குத் தெரிகின்றது. நஸ்லியாவின் வேதனை அவளைக் கொன்று விடுமோ என்று மற்றவர்கள் பயப்பட வேதனைகளுடன் போராடுதலை அதைவிடக் கொடுமையாக நஸ்லியா அனுபவித்துக் கொண்டிருந்தாள். பாதங்களை தடவிச் செல்லும் அலைகள்... தேடல் துரத்தல்... தேடல் துரத்தல்... எப்போது இது முடியும்.

"ஆண் அலை பெண் அலையைப் புடிக்கிற நேரம் உலகம் அழிஞ்சிடுமாம்" சிறு வயதில் உம்மா சொன்ன கதை.

இப்போதெல்லாம் புரண்டு புரண்டு தரையைத் தொட்டுப் பார்க்கும் அலைகளைப் பார்த்தால் சாபிர் மச்சான் சொல்லிவிட்டுப்போன ஒரேயொரு வரிதான் திரும்பத் திரும்ப அவள் ஞாபகத்திற்கு வருகின்றது. றியாத்திற்குப் போவதற்காக கொழும்புக்குப் புறப்படும் கடைசி நிமிசம்... கண்கள் நான்கும் கலங்க, உதடுகள் நான்கும் துடிக்க, உயிரும் உணர்வும் உருகிக் கலைய அவன் சொன்ன கடைசி வார்த்தைகள்...

"நஸ்லியா மச்சி நான் திரும்ப வருவேன்..."

ஹல்பு நிறைய கொட்டி வைத்துக் காத்திருந்தாள். இந்தக் கடலின் அமைதியைப் போல, இந்த அலைகளின் தேடல் போல அந்தக் காத்திருப்பும் நிஜமானது.

"நஸ்லியா மச்சி..."

காற்று காதுகளை சிலிர்க்க வைத்துச் சென்றது. திரும்பிப் பார்த்தாள். சாபிர் மச்சான்! இரண்டடி பின்னாகியவளை அவனது குரல் தடுத்து நிறுத்தியது.

"நஸ்லியா மச்சி போயிடாதே..."

ஒற்றையாகத் தொங்கி நின்ற அந்த வார்த்தைளின் கனம் அவள் உயிரைக் கொழுவ அதுவரைக்கும் பொத்திப் பொத்தி வைத்த அத்தனை சோகத்தையும் கொட்டி சிறு குழந்தை போல் கேவிக்கேவி அழத் தொடங்கினாள். அவன் கண்களிலும் பளபளத்த கண்ணீர் துளிகள்...

"நஸ்லியா அழாதே...! ப்ளீஸ் நஸ்லியா தயவு செய்து அழாதே நீ அழுறதைப் பார்த்து தாங்குகிற சக்தி எனக்கில்ல." உடைந்து உடைந்து அழுகையுடன் வெளிப்பட்ட அவன் குரல் தொடர்ந்தது.

"ரெண்டு வருசம் பிரிந்திருந்தேன். ஆறுமாதம் எதுவிதமான தொடர்புமே இல்லாம இருந்தேன். இந்த இடைவெளியில் கொஞ்சமாவது மாறியிருப்பேன்னு நினைச்சுத்தான் உங்களையெல்லாம் பார்க்க வந்தேன். ஆனா... ஆனா... நீ... நஸ்லியா...! சந்தர்ப்ப சூழ்நிலையால்தான் நான் இன்னொருத்திக்கு தாலி கட்டும்படி ஆயிடுச்சு. அதுதான் என்னோட விதி... உன்னோட சேர என்னோட

விதியில இடமில்ல. இந்த விதிய நீயும் ஒத்துக்க மாட்டியா? உன்னைப் போல ஒரு நல்ல பொண்ணு பாழ்பட்டு நிக்க நான் காரணமாகலாமா? சாபிர் மச்சானுக்கு நீ தார நிம்மதி இதுதானா...? வேணாம் நஸ்லியா வேணாம். நஸ்லியாட மனம் அமைதியடையோனும். அவளுக்கு எல்லோரையும் விட நல்ல வாழ்க்கை அமையோனும். இப்போ என்னோட பிரார்த்தனையெல்லாம் இதுதான் நஸ்லியா... நஸ்லியா இதைவிட என்னோட நிலைமையை உனக்கு எப்படி நான் புரிய வைப்பேன்..."

மன்றாட்டமாக கேட்டு நின்ற சாபிரை தலை நிமிர்ந்து பார்த்த நஸ்லியா விலகி கரையோரமாக நடக்கத் தொடங்கினாள்.

"நஸ்லியா மச்சி நான் திரும்ப வருவேன்..."

பாதங்களையும் பாவாடையின் கரைகளையும் தொட்டுச் சென்ற அலைகள் அந்த வார்த்தைகளைத்தான் அவனிடம் விட்டுச் சென்றது. "நாம் அன்பு கொண்டது விதியென்றால் நீ பிரிந்து சென்றது விதியென்றால் நான் உனக்காகக் காத்திருக்கப் போவதும் விதிதான்."

அவள் உள்ளே ஒரு குரல் இதைத்தான் ஓங்கிச் சொல்லிக் கொண்டேயிருந்தது.

"நஸ்லியா போகலாமா..."

வாப்பாவின் குரல் மென்மையாக அவளைக் கடந்து சென்றது.

மறுபடியும் தலை நிமிர்து பார்க்கின்றாள் இருள் கவிழ்ந்து விட்டது. நட்சத்திரங்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாக முளைக்கத் தொடங்கி விட்டன. எப்போதும் போல் கடல் ஹோவென்ற அமைதியுடன்... அலைகள் மட்டும் அடித்துக் கொண்டேயிருந்தது.

நெஞ்சத்திற்கு மறக்கும் சக்தியை இறைவன் படைக்காததால்தான் இன்னும் நெஞ்சம் நெஞ்சுயர்த்தி நிற்கிறது போலும்!

✦ ✦ ✦

*பி.கு.*

| | |
|---|---|
| *மச்சி - அண்ணி* | *ஸாலிஹான - அமைதியான* |
| *தலைச்சன் - மூத்தபிள்ளை* | *ஹல்பு - மனது* |

# 2 ஞாபகம் வருதே...

நேரம் நடுநிசியைத் தாண்டி வட்டது. கீழே இன்னும் ஆரவாரம் அடங்கவில்லை. குடும்பமும் உறவுகளும் ஒன்று கூடினால் கேட்கவும் வேண்டுமா? அதுவும் பெண்கள்...! விசயங்களையெல்லாம் மூட்டையில்தான் கட்டி வைத்திருப்பார்கள் போலும். குதூகலம் இருக்குமளவிற்கு குழப்பங்களுக்கும் குறைவிருக்காது. அதிலும் என் மனைவி பணக் கஸ்டம் அறவே தெரியாத சுகவாசி. அடுத்தவர்களின் பிரச்சினையை அலசி ஆராய்ந்து விட்டுக் கொடுப்பது எப்படியென்று சொல்லிக் கொடுப்பாள். மகள் அதீகாவும் பெரிய மனுசியாகிவிட்டாள். இனிமேலாவது என இல்லத்தரசிக்குப் பக்குவமும் பொறுப்புணர்ச்சியும் வருமா அல்லது இப்படியேதான் வாழ்ந்து முடிப்பானோ என்னவோ...?

"ம்... ஹும்" நீண்ட பெரு மூச்சுடன் பாத்ரூமிற்குள் நுளைந்து கொள்கின்றேன். அன்றைய ஆட்ட ஓட்டத்தின் அலுப்புத் தீரக் குளித்து இரவு உடைக்குள் மாறி கட்டிலில் சாய்ந்த போதுதான்... மேசையில் பிரிக்காமலே வைத்திருந்த அந்தக் கவரைக் கவனித்தேன். சட்டென்று எல்லா நினைவுகளும் சிதறிப் போக ஒரு மலரைத் தொடுகின்ற உணர்வுடன் மெல்ல அதனை எடுத்துப் பிரிக்கின்றேன். "வீடென்பது வெறும் சுவர்கள் மட்டுமில்லை. மனிதர்கள் இருக்கணும் சிரிக்கணும் அழணும் ஆடனும் பாடனும் முக்கியமா வாழணும்" ப்ரியமான வாழ்த்துக்களுடன் மெஹ்ரூன் நிசா...

தலையணையில் சரிந்து கவரை நெஞ்சில் தாங்கி கண்களை மூடிக் கொள்கின்றேன். நினைவுகளின் ஒன்றுகூடலில் மெல்ல மெல்ல உள்ளம் கனமாகிப் போனது. எல்லையில்லாத பிரபஞ்ச வெளியில் யாருக்குமே தெரியாத எனது சோகங்களின் ஊர்வலத்தை தன்னந்தனியாய் நின்று அனுபவித்துக் கொண்டிருக்கின்றேன். மூடிய விழிகளின் விளிம்பில் ஈரம் படர்கின்றது.

இருபது வருடங்களுக்கு முன்னால்...! பல்கலைக் கழக மாணவனாக இருக்கும் போது திடீரென்று கிடைத்த வாப்பாவின் மௌத்துச் செய்தி பேரதிர்ச்சியையே எனக்குள் ஏற்படுத்தியது.

"மௌத்த சுமந்துகிட்டுத்தானே மகன் நாம் எல்லோரும் வாழ்ந்துக்கிட்டிருக்கம். அதுதானே நிஜம். எங்க மச்சான் உண்மையிலேயே சீதேவிதான். யாவாரத்தில குடும்பத்துக்குள்ள கூட்டுச் சேர்ந்தா குத்து வெட்டுத்தான் மிஞ்சுமெண்டு சொல்வாங்க. ஆனா கடையாத் தொடங்கின எங்க யாவாரத்த இந்தளவு காலூண்ட வச்சும் எங்களுக்குள்ள இதுவரைக்கும் எந்த மனஸ்தாபமும் ஏற்படட்டதில்ல. அந்தளவுக்கு பொறுமையும் பக்குவமும் நிறைஞ்ச மனுஷன்தான் உங்க வாப்பா. என்ன செய்யலாம் அல்லாஹ் நல்லவங்கள அழைச்சுக்கிட்டாலும் நாம பொறுத்துக்கத்தானே வேணும்..."

வாப்பாவின் அருமை பெருமைகளைச் சொல்லி மாமா கண் கலங்கிய போது நான் கதிகலங்கிப் போனேன். மூன்று வருட பல்கலைக் கழக வாழ்விற்கு முற்றுப் பள்ளி வைக்கப்பட்டது. பொத்திப் பொத்தி பாதுகாத்த என்னோட பூப்போன்ற காதலுக்கும் சேர்த்துத்தான் முற்றுப் புள்ளி வைக்கப்பட்டது. உம்மா கண்ணீராலேயே என்னைக் கரைத்து மாமாவின் மகளுக்கே மாப்பிள்ளையாக்கினார்கள். அதன் பிறகு எனது வாழ்க்கையின் சுழற்சி அதி பயங்கரமான வேகத்தில் அமைந்து விட்டதென்னவோ உண்மைதான். அதுதான் எனக்கும் தேவைப்பட்டது. நிஜமாகாத நினைவுகளை எல்லாம் மறக்க வேண்டுமல்லவா?

பழமையாகப் போய்க்கொண்டிருந்த தொழிலில் நவீனங்களைப் புகுத்தி, தொழிலையும் குடும்பத்தையும் தலைநகருக்கே மாற்றியெடுத்து... ஓட்டம்... ஓட்டம்... அப்படியொரு ஓட்டம். என் நிழலை விட்டே ஓடும் குற்றவாளியைப் போல் என்னை விட்டே நான் ஓடிக் கொண்டிருந்தேன். ஊருக்குப் போகவில்லை, உறவுகளைத் தேடவில்லை... மூன்று தம்பிமாருக்கும், தங்கைக்கும் தனித்தனி முகவரி கொடுத்த பின்பும் என் ஓட்டம் நிற்கவில்லை. மாமாவின் மௌத்துக்குப் பின் அந்தக் குடும்பத்தையும் தாங்கிக் கொண்டேன். அதீக் அதீபா என்று என்னையும் தந்தை ஸ்தானத்துக்கு உயர்த்திய உயிர்கள்..

என்னைச் சுற்றிய பிம்பங்களெல்லாம் சௌகரியங்களுடன் வாழ வேண்டும் என்பதற்காகவும் எனது திறமையை நானே பரீட்சித்துப் பார்ப்பதற்காகவும் எனது தேடலின் எல்லைகளையும் முடியுமானவரையில் விஸ்தீரணமாக்கிக் கொண்டே சென்றேன். ஆனால தொடந்து உடம்பு ஒத்துழைக்கவில்லை. கட்டாயம் ஓய்வு அவசியம என்று டொக்டர்கள் கட்டளையாகவே சொன்ன போதுதான்...! இருபது

வருட உழைப்புக்கு நான் கொடுத்த விலை புரிந்தது. நிமிர்ந்து பார்த்த போது நிம்மதியைத் தவிர என்னைச் சுற்றி எல்லாமே இருந்தது.

"இரண்டு மனம் வேண்டும் இறைவனிடம் கேட்டேன். நினைத்து வாழ ஒன்று மறந்து வாழ ஒன்று." என்று கவிஞர் ஒருவர் கூறியது போல எவ்வளவு உழைத்துமென்ன என்னால் இரண்டு மனம் மட்டும் வாங்காமலே போய் விட்டது. ஓய்வெடுக்க எல்லாம் முடியாதென்பதைப் புரிந்து கொண்டு மறுபடியும் எனது பயணத்தைத் தொடர முடிவெடுத்த போதுதான் ஊரிலிருந்து எனக்கு அந்த அழைப்பு வந்தது.

பழைய மாணவன் என்ற ரீதியிலும் இன்றைய பிரபல தொழிலதிபர் என்ற ரீதியிலும் எனது ஊர் தேசியப் பாடசாலையின் முப்பெரும் விழாவிற்கு சிறப்பு அதிதியாக என்னைக் கலந்து கொள்ளும்படி கேட்கப்பட்ட அழைப்பு அது. பாடசாலை நிர்வாகத்தினரின் தொடர்ச்சியான டெலிபோன் அழைப்புக்களால் சம்மதம் தெரிவித்தேன். குறிப்பிட்ட திகதி நேரத்தில் வரவேற்புடன் பாடசாலை வளவிற்குள் காலடி எடுத்து வைத்த போது...! என் இதயத்தில் எழுந்த மௌன ராகத்தை மீட்டுவதற்கு வார்த்தைகளே இல்லாமல் போனது.

நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றாக நடந்தேறிக் கொண்டிருந்தன. இறுதியாக ஆசிரியர்களைக் கௌரவிக்கும் முகமாக அவர்களுக்குரிய பரிசில்களை வழங்க என்னை அழைத்த போது எழுந்து கொண்டேன். உயர்தரம் படிக்கும் போது பரிசளிப்பு விழா விளையாட்டுப் போட்டி என்று நானும், நண்பர்களும் கலகலப்பாக்கிய நாட்கள்... நண்பர்களின் வற்புறுத்தல்களால் அன்றொருநாள் இதே மேடையில் நான் போட்ட அரபிக்கார ஷேக்கின் வேஷம் அதைப்பார்த்து பாராட்டிய அந்த தாமரை முகம்... ஓ...! வாலிப வயதிற்குள் வந்துவிட்டதைப் போன்ற குதூகலத்துடன் அழைத்த பெயர்களுக்குரிய பரிசில்களை வழங்கிக்கொண்டிருந்தேன்.

"செல்வி மெஹ்ரூன் நிஷா அப்துல் காதர்..."

பெயர் கேட்ட நான் திடுக்குற்று நிமிர்ந்து பார்க்கின்றேன். அவளேதான்...

"மெஹ்ரூன் நிஷா...!" வாய்விட்டே அலற வேண்டும் போலிருந்தது. இதயத்திற்குள் விழுந்த வெடிப்பால் சுனாமி போல் வேதனை பொங்கிப் பிரவாகித்தது.

உயர்தரம் இரண்டாம் ஆண்டில் நான் காலடியெடுத்து வைத்த நேரம் முதலாம் ஆண்டில் வந்து சேர்ந்தவள்தான் மெஹ்ரூன் நிஷா.

பார்த்துக் கொண்டே இருக்கலாம் போன்ற மென்மையான முகம்... அழகி. பாடசாலை முழுதும் கலகலத்துத் திரிந்த என்னால் அவளுடன் மட்டும் இயல்பாகப் பழக முடியவில்லை. அமைதியாக வளைய வந்த அவளை பார்த்து பார்த்து மனதிற்குள் பதிய வைத்துக் கொள்ள மட்டும்தான் என்னால் முடிந்தது.

உயர்தரப் பரீட்சை முடிவுகளின் பின்னால் நான் பல்கலைக் கழகம் சென்று விட்டேன். எத்தனையோ பெண்களைக் கடந்த போதும் மெஹ்ரூன் நிஷாவை என்னால் மறக்க முடியவில்லை. அடிக்கடி என் நினைவுகளில் அவள் கவிதை வாசித்துப் போனாள்.

நிஜமாகவே அடுத்த வருடம் புதிய மாணவர்களுடன் அவள் முகம் கண்ட போது...! மகிழ்ச்சியின் எல்லைக்கே சென்றுவிட்டேன். மெல்ல மெல்ல ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு மனம் விட்டுப் பேசிய ஓர் நாளில்... "உங்களுக்காகத்தான் பல்கலைக் கழகமே வந்தேன்"னு மெஹ்ரூன் நிஷா உருகிச் சொன்ன போது அவளது புனிதமான நம்பிக்கைகளை பாதுகாக்க வேண்டுமென்று மனதிற்குள் திடசங்கற்பம் பூண்டு கொண்டது உண்மைதான். ஆனால் வாப்பாவின் மௌத்தோடு எல்லாமே பொய்யாகிப் போய்விட்டது.

கண்முன்னே கலைந்து போன கனவுகளுக்கு நான் சாட்சியாக நின்ற கொடுமையை எப்படி என்னால் மறுக்க முடியும். காலத்தால் எல்லாற்றையும் மறைத்துத்தான் வைக்க முடியுமே தவிர எதையும் மறக்க வைக்க முடியாதென்பதை பாடசாலை விழாவின் போது புரிந்து கொண்டேன். கால ஓட்டத்தில் என்னை மறந்திருப்பாள். இன்பங்களும் துன்பங்களுமாய் அதில் காணாமல் போயிருப்பாள் என நான் நினைத்தவள்... அதே மெஹ்ரூன் நிஷாவாக மேடையில் தோன்றினாள். அவள் முகம் பார்த்து என் மனசாட்சி தலை குனிந்து கொண்டது.

அதன் பிறகு வந்த நாட்களில் ஊரிலேயே நின்றேன். மெஹ்ரூன் நிஷாவின் கதையையும் தெரிந்து கொண்டேன். ஒருவரது வாழ்வில் அசாதாரணங்கள் ஏதாவதொரு சந்தர்ப்பத்தில்தான் இடம்பெறும். ஆனால் அவளது வாழ்க்கை மட்டும் ஏன் அசாதாரணங்களாலேயே சூழப்பட்டு விட்டதென்பதை என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை.

மெஹ்ரூன் நிஷாவின் ஒரே சகோதரிதான் பதுறுன் நிஷா. திருமணமாகி இரண்டு பெண் குழந்தைகளுக்கும் தாயான பிறகு விபத்தொன்றில் கணவர் காலமாகிவிட சித்தம் குலைந்த பதுறுன் நிஷா மனநோயாளியாகிவிட்டாள். இயல்பிலேயே நல்ல குனங்கள்

நிறையப் பெற்ற மெஹ்ரூன் நிஷா சகோதரிக்காக சகோதரியின் பெண் குழந்தைகளுக்காக தன் திருமணத்தை மறந்து வாழ்கிறாள்... இதுதான் நான் கேள்விப்பட்ட மெஹ்ரூன் நிஷாவின் கதை.

இதயம் வலித்தது. அவளது இளமைக்கு நான் செய்த துரோகம் நெஞ்சை சுட்டெரித்தது. தொடர்ந்தும் ஊரிலேயே நின்றேன். சிறிய முயற்சிகளுக்குப் பின்னால் அவளுடன் டெலிபோனில் கதைக்கக் கிடைத்தது. நிறையக் கதைத்தேன். இனிமேலென்றாலும் அவள் மனதை மாற்றிக் கொள்ளக் கூடாதா... புது வாழ்க்கை ஒன்றை ஏற்றுக் கொள்ளக்கூடாதா என்ற நப்பாசையில் நிறையக் கதைத்தேன். ஆனால் மெஹ்ருன் நிஷா மறுத்து விட்டாள்.

“சந்தர்ப்ப சூழ்நிலைக்கு மாறிப் போகாத மனித மனமே கிடையாது. நானொருத்தி நம்பியதற்குக் கிடைத்த ஏமாற்றங்களே போதும். எனக்கு கணவரா வருகிறவரின் எதிர்பார்ப்புகளுக்கு இந்தப் பெண் குழந்தைகளும் பலியாக வேண்டாம்...”

என்றவள் நியாயம் கூறிய போது என்னால் பதில் கூற முடியவில்லை. என்னுடைய உதவிகளையும் ஏற்க மறுத்து விட்டாள்.

“உதவிகள் நன்றிக்குரியது... உறவுகள் மரியாதைக்குரியது. முடிந்தால் இன்பங்களையும் துன்பங்களையும் பகிர்ந்துக் கொள்ளக்கூடிய நல்ல நண்பராக இருங்கள்”

அவள் இறுதியாகக் கூறிவிட்டாள். அவளது உறுதியான முடிவு என்னை ஊமையாக்கியது.

இன்று எனக்கு மூன்றாவதாக ஒரு பெண்குழந்தை கிடைத்ததற்குரிய விஷேசம். வீட்டில் உறவுகளுக்கெல்லாம் சாப்பாடு சந்தோசமென்று ஏக தடபுடல். சாய்ந்த அழகான எழுத்துக்களில் அதற்கான சந்தோசப் பகிர் வைத்தான் மெஹ்ரூன்நிஷா சமர்ப்பித்திருந்தாள். ம்... ஹும்... நீண்ட பெரு மூச்சுடன் கண்களை மூடிக் கொள்கின்றேன். என் நினைவுகளின் ஊர்வலங்களில் மெஹ்ரூன்நிஷா என்னும் சோகராகம் என்றைக்கும் ஒலித்துக்கொண்டே இருக்கும் என்பது நிச்சயம்.

# 3 பெருநாள் பரிசு

**கா**ற்றில் ஈரம் கலந்திருந்தது மழைக்காலம். எப்போது பெய்யும் எப்போது ஓயுமென்று சொல்ல முடியாத சூழல். வெளியே குளிராக இருந்தாலும் நிலைப்படியிலே சாய்ந்திருந்தாள் ரசீனா.

"நேமமாய் சொல்லி வந்தால் - ஸலவாத்தால்
நெயினார் உதவியுண்டாம் முஹம்மத்
அல்லாஹும்ம ஸல்லி அலாமுஹம்மத்
யாரப்பி ஸல்லி அலைஹிவஸல்லம்"

அண்ணல் நபியின் பெருமைகளை அழகு தமிழில் பெரியவர் ஒருவர் சொல்லி முடித்ததும் அதே அழகோடு பள்ளிவாயல் ஒலிபெருக்கியில் கோரசாகக் கேட்ட ஸலவாத் ஒலி மேனியைச் சிலிர்க்க வைத்தது. ஆனால் ரசீனா எந்த சலனமும் இல்லாது உட்காந்திருந்தாள்.

"உம்மா... உம்மா..."

பலவீனமாகக் கேட்ட மகளின் குரலுக்கு "எலக்ரிக் ஷாக்" பட்டது போல் பதறி எழுந்து, மகளை நெருங்கியவள்.

"இப்ப எப்படிம்மா இரிக்கி. நோன்பில் ஒன்ட ரெண்ட உட்டுப்பிடி என்டாலும் கேக்க மாட்டேங்கிற. நோயாளிகளுக்கு நோன்பு கடமையில்லையே. பொறகு ராகத்தா இருக்கிற நேரம் பார்த்து புடிச்சிக்கலாம்தானே. அல்சர் குடல் பசி தாகம் இருந்திட்டு பச்சத்தண்ணியைக் கண்டாலும் பொரட்டிக்குது. கவ... கவண்டு எவ்வளவு சத்தி. சொன்னா கேக்க மாட்டேங்கிறியே..."

"என்னம்மா நீங்க ஒன்டில்லா ஒன்டு வருத்தம் வந்திட்டுதான் இருக்கும். இந்த நேரத்தில இந்த வயசில செய்யேலாத இபாதத்த இனியெப்ப செய்யப்போறம். இன்டைக்கென்டு தலசுத்திட்டு ஒரு மாதிரியா வந்திட்டு. படுத்தெழும்ப கொஞ்சம் ராகத்தாத்தான் இருக்கி. மச்சான் எங்கம்மா? நீங்க சாப்பிட்டிங்களா?

தாயின் வயிற்றில் கால் போட்டபடியே தூங்கிக் கொண்டிருந்த ஒன்றரை வயது பேரனை அலுங்காமல் தூக்கி கட்டிலில் ஒழுங்காக வளர்த்தாட்டியபடியே மகள் நிஸ்மியாவின் கேள்விக்கு பதில் சொன்னாள் ரசீனா.

"இல்ல மன நான் சாப்பிடல்ல. உண்ட மக்கள் ரெண்டு பேரும் நின்டா சும்மாவா நிப்பானுகள் மிரட்டுவானுகள். பள்ளிக்குப் போகக்குள்ள 'வாங்க'டான்னு மருமகன் ரெண்டு பேரையும் கையோடையே கூட்டிட்டு போயிட்டாரு. நான் சோத்தக் கறிய வச்செடுக்கன். முகம் கைகாலக் கழுவிட்டு சாப்பிடலாம்..."

பீங்கானில் வைத்த சோத்தைப் பிசைந்து கொண்டே நிஸ்மியா கேட்ட கேள்விதான் ரசீனாவை கண்கலங்க வைத்தது.

"வாப்பா வந்தயாம்மா..."

அள்ளி வைத்த சோறு தொண்டைக்குள் இடர துக்கத்தையும் சேர்த்து மென்று விழுங்கியபடி இல்லையென்று தலையாட்டினாள். அதன்பிறகு இருவரும் எதுவுமே கதைத்துக் கொள்ளவில்லை. கடமைக்காக சாப்பிட்டேன். என்று பெயர் பண்ணிவிட்டு முற்றத்தில் கிடந்த ஊஞ்சலில் வந்தமர்ந்து கொண்டவள் மனம் நிம்மதியில்லாமல் தவித்தது.

"சே...! என்ன மனிசன், இத்தின வருஷ காலம் புருசன் பொண்டாட்டியா வாழ்ந்து பொண்ணையும் கட்டிக் கொடுத்து பேரப் பிள்ளைகளையும் கண்ட பொறகா புத்தி இப்படி பேதலிச்சுப் போகனும். சாதி சனம் அறிஞ்சா காறித்துப்பும். ரெண்டு நாளா ஊட்டயும் வராம இருந்து அழிச்சாட்டியம் பன்றாரு. எந்த ஊட்ட இந்தப் புதினம் நடக்குது. அதக் கேட்டதற்குத்தான் அண்டைக்கு கிளம்பி அடிச்சாரே".

"இதப்பாரு ஊராண்ட ஊட்டயெல்லாம் எனக்கும் விளக்கம் காட்டாத. அவனவன் போற இடத்தயெல்லாம் ராகத்த தேடிக்கிறானுகள். நான் அப்படிப்பட்ட பொறப்புமில்ல வளப்புமில்ல. சொந்தப் பொண்டாட்டிதான். நீ எனக்கு கத சொல்லிச் சொல்லியே காலத்த கழிச்சிட்டிருக்க. இதெல்லாம் நல்லதுக்கில்ல, அவ்வளவுதான் சொல்லிட்டன்..."

நடந்ததை நினைச்சே சர்வநாடியும் ஒடுங்கிப்போய் உட்கார்ந்திருந்தாள் ரசீனா.

அவர் அண்டைக்கு அந்தவிதமா குத்திக்காட்டி கதைச்சது எண்ட தம்பியத்தான் என்டு எனக்குத் தெரியாதா? அவன் கொழும்பில்

ரெண்டாவதா ஒரு கல்யாணம் கட்டி வச்சிருக்கான் என்டு எல்லோரும் கதைக்காங்கதான். அவனக் கேட்டா, 'எனக்குத் தெம்பிருக்கு. தைரியமிருக்கி. ரெண்டில்ல மூனு வேணுமென்டாலும் கட்டிக்கிவன். முதுகெலும்பில்லாதவனுகள் வயித்தெரிச்சல்ல அத இத சொன்னா நீங்க நம்பிக்கிட்டு எங்கிட்ட வந்து கேள்வி கேப்பீங்களாக்கும்'. என்டு எரிஞ்சி விழுவான்".

"அவன்கிட்ட என்னத்தத்தான் விசாரிக்கிற. நெருப்பில்லாம புகையாது. அவன் எத்தின கலியாணம் வேண்டுமானாலும் கட்டிக்கட்டும். நம்மட ஊட்டுப் பிரச்சினை அதில்லையே..." ஊஞ்சலைவிட வேகமாக ரசீனாவின் மனம் புலம்பித் தவித்தது.

"ரசீனா புள்ள ரசீனா..."

கேற்றைத்திறந்தபடி அழைத்துக் கொண்டு வந்த உருவத்தை கண்டதும் சடாரென முகத்தைத் துடைத்தபடி எழுந்து கொண்ட ரசீனா...

"வாங்க காக்கா..." என்று அழைத்த படியே ஒதுங்கி நின்று கொண்டாள். இத்தின வயசுக்குப் பிறகும் மூத்த காக்கா என்றால் அத்தினை பயம் மரியாதை, கூடப் பொறந்ததுகள் எட்டுப் பேரோட நன்மை தீமையிலும் 'மூத்த காக்கா' எனும் மீராசாஹிபு பங்கெடுத்துகிற விதம் அப்படி. பிரச்சினைக்கொரு தீர்வு சொன்னாரென்றால் அதில் சுயநலம் கலவாத நியாயமிருக்கும். ஊஞ்சலில் அமர்ந்த கொண்டவர் தொப்பியைக் கழற்றி தலையை தடவியபடியே...

"என்ன புள்ள... மச்சான் ரெண்டு நாளா ஊட்டயும் வரல்லயாமே..."

காக்கா கேட்டதுதான் தாமதம்: அவ்வளவு நேரமும் பொத்தி வைத்திருந்த துக்கம் உடைய புடவைத் தலைப்பால் வாயைப் பொத்தியபடி விசும்பத் தொடங்கினாள் ரசீனா...

"சரி... சரி... இப்ப என்ன நடந்திச்செண்டு கண்கலங்கிற. நீ தனிச்சன் இல்ல. என்ன ஏதென்டு கேக்க கூடப்பொறந்தவங்க இருக்காங்க. இவ்வளவு காலமும் மச்சான் எந்தப் பிரச்சினையும் படுத்தினவரில்ல. இப்ப அவர் எவ்வளவு புடிவாதம் புடிகாரெண்டா சரி என்னென்டு பாப்பமே..."

"ஐந்தாறு வருசத்துக்குப் பொறகு நேர்ந்து தவமிருந்து பெத்த புள்ள எலா நிஸ்மியா, அவள உட்டுப்போட்டு எப்படி காக்கா..."

ரசீனாவால் பேச முடியவில்லை அழுகைதான் முந்திக்கொண்டு வந்தது.

"நானிப்ப மச்சானத்தான் பார்க்கப்போறன். இப்படியே நீ இருந்தா புள்ள நிஸ்மியாட மனசும் கலங்கிடும். தைரியமா இரு, நான் நாளைக்கு இந்தப் பக்கமா வாரன்..."

காக்காவின் வார்த்தைகளில் நம்பிக்கை வைத்து அவரை வழியனுப்பி வைத்தாள் ரசீனா.

"என்ன மச்சான் நான் கேள்விப்பட்டதெல்லாம் நிசமா? நோன்பும் காரியமும் நல்ல நாள் பொழுதில நீங்க இப்படி இருந்தா ஊட்டுப் பொண் பொரசிகள் கண்ணக் கசக்கிக்கிட்டு நிக்குதுகள். என்னயென்டாலும் ஊட்டுக்குப் போகாம இருக்கிற சரியில்லையே..."

மச்சான் சாதிக் வயதில் இளையவனென்றாலும் தங்கையின் கணவர் என்ற மரியாதையோடு மீராசாஹிபு பேச்சை ஆரம்பித்தார். மூத்த மச்சினன் என்றாலும் எல்லோரையும் போல் மீராசாஹிபு மேல் சாதிக்குக்கும் மரியாதை அதிகம்தான்.

"நானென்டாப்போல ஆசைப்பட்டு இருக்கல்ல மச்சான். என்ட நிலமையையும் உங்கட தங்கச்சி புரிஞ்சிக்கனும். நிஸ்மியா எனக்கும் மகள்தான். மூனு புள்ள தலைமுறை. மகளோட கூடவே இருந்தாச்சி.மருமகன்ட வயசுக்கி கூட்டாளிமாரெல்லாம் வருவாங்க போவாங்க. அவர்ட குடும்பம் சாதி சனமெல்லாம் வரும் போகும். வயசான காலத்தில நாம் ஏன் இடைஞ்சலா அங்கேயே குந்திக்கிட்டு இருக்கனும்... இதென்ட சொந்தக் கடதானே. பின்னால எல்லா வசதியும் இருக்கு. வந்திரிப்பமென்டா... ஏலா; மகள் வருத்தக்காரி மருமகன் ஊரோட தளத்தோட என்டு ஆயிரம் சாக்குப் போக்கு... என்ன என்னதான் பண்ணச் சொல்றீங்க..."

"சரி மச்சான்: அவ சொல்றதும் மெய்தானே.நிஸ்மியாவுக்கு கிடைச்ச மூனும் சீசர் பண்ணி எடுத்த புள்ளைகதானே. மூனையும் பொடியனுகளா வேற அல்லாஹ் குடுத்திட்டான். மாசத்தில ரெண்டு தரமென்டாலும் டொக்டர்கிட்ட போகாம இரிக்க மாட்டாள். தட்டத்தனிய அவள உட்டுப்போட்டு வாரத்துக்குப் பாவம் பெத்த மனசு கேக்குதில்ல. மத்தப்படிக்கு உங்கள எதித்து நடக்கனுமென்டெல்லாம் அவ நினைச்சிருப்பாளா... என்ன?"

ஆற்றாமையோடு கதைத்த தங்கையின் கணவருக்கு ஆதரவோடு மீராசாஹிபு பதில் சொன்னாலும் சாதிக்கின் மனம் ஆறினால்தானே...?

“நீங்க ஆயிரம்தான் சொல்லுங்க மச்சான். நீங்கென்ன செய்தீங்க. மகளுக்கு கல்யாணம் கட்டிக் கொடுத்து ஆறாவது மாசத்திலேயே பொண்டாட்டி புள்ளகுட்டிகள கூட்டிக்கிட்டு வேற ஊட்டுக்கு மாறிட்டீங்க. ஒத்தப்புள்ளயென்டாப் போல நம்மட சுக துக்கங்களைப் பார்க்க கூடாதா...? பகலைக்கெல்லாம் கிடந்து கஷ்டப்பட்டுப் போட்டு ராவையில மனிசன் ஊட்ட போற என்னத்துக்கு நிம்மதிக்குத்தானே? இது என்னடான்னா குசினிகுள்ள போய் அவ ஒதுங்கிக்குவா. நாம கடனே என்டு படுத்துக்கிடந்தெழும்பிட்டு வரவேண்டியதுதான். மருமகன்ட சாதிசனம் வந்திச்சென்டா நான் வெளியில இடம் பாத்து தங்கிக்கனும். புருசன் பர்ர சீரழிவெல்லாம் என்ட பொண்டாட்டிட கண்ணுக்குத் தெரியல்ல. நான் என்ன ஊர் தேசம் உட்டா போகக் கூப்பிர்ரன். இந்தா இருக்கிற கட. நினைச்சா உடனே போய்ப் பார்த்திட்டு வரலாம்தானே. சும்மா இல்ல மச்சான். மகளக் கட்டிக் கொடுத்து பத்து வருசத்துக்கு மேலாயிட்டு. இனி எனக்கென்டா இந்த சீரழிவெல்லாம் பொறுக்கேலா. நோம்புப் பெருநாள் கழிய என்னோட அவ வெளிக்கிடனும் இல்ல...”

இடைநிறுத்திய சாதிக் மீராசாஹிபின் முகத்தை நிமிர்ந்து பார்த்து நேருக்கே சொன்னார்.

“என்னோட வந்திருந்து என்ட பாடுதுண பார்க்க ஒரு சீவன் இல்லாம போயிடாது. ஹலாலான முறையில் நான் இன்னொரு கலியாணம் கட்டிக்கிறதப்பத்தி நீங்க யாருமே ஒரு குறையுமே எண்ணக்கூடாது...”

முடிவாகச் சொல்லிவிட்டு எழுந்து கொண்ட சாதிக்கிடம் அதற்கு மேல் என்ன பேசினாலும் மரியாதையாக இருக்காது என்ற எண்ணத்தில் மீராசாஹிபும் எழுந்து விடைபெற்றுக் கொண்டார்.

“வாப்பா உம்மாக்கு சரியான காய்ச்சலாகக் கிடக்கு. குளிச மருந்தெல்லாம் எடுத்துக் குடுத்தும் ஒன்டையும் போடுராங்கல்ல, மச்சான்ட உம்மாக்கும் சுகமில்லயாம். அங்க போகத்தான் நன் வெளிக்கிர்ரன். உம்மா தனியாகத்தான் இருப்பாங்க. நீங்க வந்து என்ன ஏதென்டு கேளுங்க...”

டெலிபோனில் கேட்ட நிஸ்மியாவின் குரல் காற்றில் கரையுமுன்பே சாதிக்கின் மோட்டார் சைக்கிள் வீட்டை நோக்கி புறப்பட்டு விட்டது.

ரசீனாவின் உடம்பு நெருப்புச் சட்டியைப் போல் கொதித்தது. சாதிக்கின் மடியில் தலைவைத்துப் படுத்திருந்தவளுக்கு புருஷனின் அண்மை புதிது போலவே இருந்தது. சாதிக்கின் வயிற்றில் முகத்தை நெருக்கி வலது கையால் இடுப்பை வளைத்துக் கட்டிக் கொண்டவள் குழந்தையைப் போல் கேவிக் கேவி அழத் தொடங்கினாள்.

சாதிக்கின் கண்களிலும் கலக்கம்.

"காய்ச்சல் உரமாகதான் இருக்கி. எடுத்த குளிச மருந்த போடுங்க புள்ள. முதல்ல எழும்புங்க நான் எல்லாத்தையும் எடுத்துத்தாரன்."

அவள் மெதுவாக எழும்ப முயன்றாள், முடியவில்லை.

"போடுங்க புள்ள. அப்பதானே காய்ச்சல் குறையும்..."

"காய்ச்சல் குறைஞ்சி என்ன செய்ய: நான் என்னத்துக்கு உயிரோட இருக்க. அதான் நீங்க வேற கலியாணம் கட்டுற அளவுக்குப் போயிட்டீங்கல்ல. நான் என்னத்துக்கு... இனி நான் என்னத்துக்கு..." துடித்து அழுத அவளை சமாானப்படுத்த வழி தெரியாமல் தவித்த சாதிக்...

"இஞ்ச பாரு! இப்ப அதெல்லாம் கதைக்கிற நேரமா? உடம்பு நெருப்பா கொதிக்குது..."

"உடம்பு எப்படியோ போகட்டும். வான்ட காலத்துக்கு உங்களுக்கும் உங்க மகளுக்குமாகத்தானே சீவனோடயே இருந்தன். நான் செய்யாத குத்தம் என்ன செய்தேன்னு மூத்த காக்காட்ட அப்படியொரு முடிவச் சொல்லி அனுப்பினீங்க. பெத்த புள்ள பேரப்புள்ளைங்க பாசந்தாங்க. ஆனா நீங்க இல்லாம அவங்கெல்லாம் எங்கால போதுங்க... என்ட பொழைப்பும் போதும்: நீங்க எங்க கூப்பிட்டாலும் வாரன்... ஆனா... ஆனா... என்ன இக்கட்டு வந்தாலும் உங்கள உட்டுப் போட்டு இன்னொரு கல்யாணம் கட்ட மட்டும் நான் முடிவெடுக்க மாட்டன்..."

அத்தனை காய்ச்சலிலிலும் ஆவேசமாக வந்து விழுந்த ரசீனாவின் வார்த்தைகளின் கனம் சாதிக்கை தலைகுனிய வைத்தது. தடுமாறியபடியே மெல்ல எழுந்து கொண்டவள்...

"எனக்கு நீங்கதானே முக்கியம். என்னத்துக்கு பெருநாளைக்கு பொறகு இப்பவே வெளிக்கிடுவம். நான் உடுதுணி எல்லாம் எடுத்து வைக்கன். மாமியாட்டப்போன மகளும் மருமகனும் புள்ளயலும் வரட்டும். சொல்லிட்டு போவம்"

எழுந்து நின்று நடுங்கியபடியே தடுமாறியவளை ஆதரவாகப் பிடித்து இருத்திய சாதிக்...

“சரி புள்ள எதுக்கு ஆத்திரப்பர்ரீங்க என்ட யோசினையை கேட்க மாட்டேங்கிறீங்களே! என்ட கோவத்தில ஒரு பேச்சுக்கு அப்படி சொல்லிட்டன். இப்ப உங்களுக்கு காய்ச்சலென்டு கேள்விப்பட்டதும் என்னால கடையில குந்தியிருக்க முடியல்ல அப்படியே போட்டுட்டு ஓடி வந்திட்டன். நீங்க தெம்பா இருந்தாத்தான் புள்ள எனக்கு நிம்மதி”.

சாதிக்கின் கண்களில் தெரிந்த கலக்கத்தில். தென்பட்ட உண்மையான கனிவில் கரைந்து போனாள் ரசீனா.

“உங்க கஷ்டமும் எனக்கு புரியுதுங்க அவங்கெல்லாம் இருந்தா... அவங்கெல்லாம் இருந்தா என்கிட்டகூட வர மாட்டீங்களே. அதெல்லாம் உங்க கஷ்டம் மட்டும் இல்லீங்க நம்ம கஷ்டம்...”

நோயின் பலயீனமும் பிரச்சினையின் பலமும் உந்தித்தள்ள அழுவதற்கே ரசீனா தயாராகினாள்.

“இல்ல புள்ளம்மா. ரெண்டு பேருக்குமே கஷ்டம் வராம நான் ஒரு முடிவெடுத்திருக்கன். வீட்டோட சேர்த்தாப் போல பின்னால கொஞ்சம் இடமிருக்குத்தானே. அதுக்குள்ள ஒத்த அறையாக்கட்டி எடுப்பம். நீங்க புள்ளயல பிரிஞ்ச மாதிரியும் இருக்காது, நாம ஒதுங்கி நிம்மதியா இருந்த மாதிரியும் இருக்கும். சரி. இப்ப நீங்க குளிசையள விழுங்குங்க. நாளைக்கு காலையில கடைக்கு சாமான் எடுக்க நான் கொழும்புக்குப் போகனும். பெருநாளைக்கு எல்லோருக்குமுரிய உடுபுடவைகளையும் சொன்னீங்கன்டா அங்கேயே பார்த்து எடுத்து வருவன். பெருநாள் கழிஞ்ச பிறகு அறையக் கட்டுறதுக்குரிய ஏற்பாடுகளைப் பண்ணுவம்”.

புருஷன் எடுத்த முடிவுதான் காலத்துக்கும் தனக்கு நிம்மதி அளிக்கக்கூடிய பெருநாள் பரிசென்பதை புரிந்து கொண்ட செயினம்பு சாதிக், தந்த கசப்பான மாத்திரைகளையும் தண்ணீர் இல்லாமலே விழுங்கத் தொடங்கினாள்.

✦ ✦ ✦

# 4

# பாவ மன்னிப்பு

“ஹமீது நாநா இந்த முறையும் ஹஜ்ஜுக்குப் போறாராம்...”

ஹமீது நாநாவின் உறவு முறை தெரிந்தவர்களிடையே பேசப்பட்ட சாதாரன விடயம் அது. அருந்தி வருந்தி கஷ்டப்பட்டு உழைத்து காசு சேர்த்து பயணம் போக வெளிக்கிட்டால் அந்தப் பயணத்துக்குரிய பெறுமதியோடு பேச்சும் இருந்திருக்கும்.

ஆனால் ஹமீது நாநாவுக்கு ஏதோ அடுத்த ஊருக்குப் போய் வருவது போலத்தான். அவரிடம் இருக்கும் சொத்துக்கும் சுகத்துக்கும் வருடத்துக்கு ஒரு தரமும் ஹஜ்ஜுக்குப் போய் வரலாம். கஷ்டப்பட்டவர்கிட்டதான் காசு பணம் சேர்ரதுக்கும் கஷ்டப்படும். ஹமீது நாநா போன்றவங்க ஆடி ஓடியெல்லாம் கூட உழைக்கத் தேவையில்லை. காலையில் எழுந்து உட்கார்ந்தால் பல் துலக்க முதல் கையில இருக்கிற ஹேன்போன் மூலமாகவே ஆயிரக்கணக்கில் வியாபாரம் பாத்திடுவார். அது ஹலாலா ஹறாமா என்றெல்லாம் யோசிக்கத் தேவையில்லை. அது அவங்கருக்கும் அல்லாஹ்வுக்கும்தான் வெளிச்சம். பணம் பணத்தோடத்தானே சேரும். தான் எத்தனையாவது தரம் ஹஜ்ஜுக்குப் போறனென்பதை எண்ணிப் பார்த்துச் சொல்லும் நிலைதான் ஹமீது நாநாவுக்கு. தொழில்ல கொஞ்சம் டல்லா...? அங்க போறாப்போல போய் ஒரு யாவாரமும் பார்த்து வர நிய்யத்துப் பண்ணிடுவார். உடம்புக்கு ஏதும் சுகக்குறைவா...? உடனே மௌத்துடைய பயம் வந்து விடும் அவருக்கு...

“ஏன்ட அல்லா! உன்ட பாக்கியமான ஸ்தலத்துக்கு வந்து சேந்திடுவன் நாயனே. என்ட உடம்ப நீதான் தேத்தனும்”. என்று நிய்யத்துப் பண்ணி தானதருமமும் செய்து பயணமும் வெளிக்கிட்டு விடுவார்.

அல்லா கொடுத்தும் சோதிப்பானாம். எடுத்தும் சோதிப்பானாம். பணம் சேர்ராப் போல ஹமீது நாநாவச் சுத்தி ஏற்படும் பிரச்சினைகளுக்கும் குறைச்சலில்லை. கோடியாய்க் கொட்டிக்

கொடுத்து கொழும்பில் எடுத்த புதுபங்களா சஹிராபானுக்கு! அதான் ஹமீது நாநாட வீட்டுக்காரிக்கு அறவே பிடிக்காமல் போய்விட்டது.

"மகளுக்குத்தானே வாங்கிப் போட்டேன். உனக்குப் பிடிக்கலேனா நீ இங்கேயெ இரு. அவளக் கட்டிக் கொடுக்கிற நேரம். மத்ததப்பத்தி யோசிக்கலாம்..." என்று சொல்லி அந்தப் பிரச்சினையை இப்போதைக்கு முடித்தாலும் அதைத் தொட்டு அடிக்கடி வீட்டில் ஏற்படும் மனஸ்தாபத்தால் அவருக்கு மண்டை காய்ந்து போவதென்னவோ உண்மைதான். கோடியில வாங்கிப் போட்டதுகூடப் பிடிக்கலேன்னு சொல்ர சம்சாரமென்டா வீட்டுல என்ன சம்பவம்தான் எளிமையா இருக்குமென்று நினைக்கிறீங்க.

காலைச் சாப்பாட்டை முடித்துக் கொண்ட ஹமீது நாநா புருசனுக்காக மாம்பழம் சீவிக் கொண்டிருந்த சஹிராபானுவை நிமிர்ந்து பார்த்தார். கண்கள் கொன்னவில்லையோ என்னவோ ஒரு தரம் கண்களை மூடித்திறந்து கொண்டார்.

இருபது வருடத்துக்கு முதல் கொடிப்பட்டுப்போல் என்று சொல்வார்களே அப்படியொரு உடல்வாகு சாஹிராபானுவுக்கு. பிந்திய இருபது வருடத்திற்குள்தான் இப்படியொரு மாயாஜாலம்... உண்மைதான் கழுத்து இடுப்பெல்லாம் எங்கு போனதென்றே தெரியவில்லை. மொத்தமாய் ஒரு உருவம்தான் அவர் கண்ணுக்குத் தெரிந்தது. கையை நீட்டி ஒரு மாம்பழத் துண்டை எடுத்தவரை பறித்தெடுத்த சஹிரா...!

"என்ன பச்சப் புள்ளயாட்டம் அவசரப்பர்ரீங்க. ரெண்டு மூனு சாதியில வாங்கின மாம்பழம். எது நல்ல இனிப்பெண்டு நான் திண்டு பாத்திட்டு தருவன்தானே..."

அவள் சொன்னதைக் கேட்ட ஹமீது நாநாவின் நெஞ்சில் சுருக்கென்று ஒரு வலி. இதுதான் இந்தக் கவனிப்பும் கரிசனையும்தான். இப்போது அவர் மனசாட்சியை அடிக்கடி பிராண்டும் விடயமாக மாறிவருகின்றது.

புருஷனுக்கு வயதாகிவிட்டது. நாம் கூடுதலாக அக்கறை காட்ட வேண்டுமென்று அவள் செய்யும் ஒவ்வொரு செயலும் வயதாகியும் அவர் புரியும் வாலிப விளையாட்டுக்களை கீறி வலிக்க வைக்கும் ஆயுதமாகிவிட்டது. "டிப் டார்ப்பா" உடுத்தி வெளிக்கிட்ட ஹமீது நாநாவுக்கு நாப்பத்தெட்டு வயது முடியப் போகின்றதென்று சொன்னால் சத்தியமா யாருமே நம்ப மாட்டார்கள்.

பகல் சாப்பாட்டுக்குரிய நேரம் மேசையை சுற்றியிருந்த நண்பர்கள் அனைவரும் பாரின் வரை போய் பிஸினஸ் பார்க்கும் பணக்கார நபர்கள். நடுத்தர வயது. நாகரிகமான தோற்றம்... பாரினில் பார்த்த 'பிகரி'லிருந்து நேற்று நடந்த தாக்குதல் வரை அவர்கள் பேச்சில் அலசப்பட்டது.

"என்ன பேசி என்ன மச்சான் பிரயோசனம். எல்லாம் கொஞ்ச நாளைக்குத்தான். இந்தா கடல் பொங்கி வந்து ரெண்டு மூனு வருடமாச்சி... இப்ப சனம் அதக்கூட மறந்திடுச்சி. அல்லாஹ்... அல்லாஹ்... என்டு இருந்த மக்கள் இப்ப நப்ஸீ நப்ஸீ என்டு அலையிறாங்க".

'ஓசி'யில சுகம் அனுபவிச்சிப் பழகி இப்ப உழைக்கக் கூட உடம்பு கூசுது. யாரு என்ன தருவாங்கன்டே அலையிராங்க. அப்படிப் பாத்தா மறதியும் அல்லாஹ் தந்த பாக்கியம் என்டுதான் சொல்லனும் இல்லையா...?

"அது சரி அழிவுகள் வரக்க அகதிகள் ஏற்பர்ரதும்... அரசாங்க கொடுப்பனவுகள்ள அதிகாரிகள் கைவைக்கிறதும்... போர்ர பிச்சைய கொள்ளையடிக்கிற மாதிரி... நாம பன்ர பிஸினஸ் பரவால்ல மச்சான். நாம தேடிர சொத்து சுகமெல்லாம் நம்மட சந்ததியும் அனுபவிக்கக்கூடியளவு கொஞ்சம் ஹலாலா இருக்கோனுமில்லையா..."

ஒரு நண்பன் ஆதங்கப்பட்டதற்கு கொஞ்சம் சாலிஹீத்தனமும் நேர்மையும் கொண்ட கபூர் முதலாளி சொன்ன பதிலோடேயே அவர்கள் சம்பாஷனையும் முடிவுக்கு வந்தது. ஒவ்வொருவராக விடைபெற்றுக் கொள்ள கடைசியாக மிஞ்சியது ஹமீது நாநாவும் அவரது நெருங்கிய நண்பரான அஸன் ஹாஜியாரும்தான். அவர்கள் இருவருடைய கடையும் ஆபீஸும் பக்கத்துப் பக்கத்திலேயே இருந்த படியால் பொடி நடையாக இருவரும் வெளிக்கிட்டார்கள். இருவருக்குள்ளும் ஒருவருக்கொருவர் அந்தரங்கங்களைப் பகிர்ந்து கொள்ளக் கூடியளவு நட்பு இருந்தது. பிஸினஸை தாண்டி குடும்ப ரீதியாகவும் ஆழமாக அந்த நட்பு வியாபித்திருந்தது.

அஸன் ஹாஜியாரின் அறையிலே வந்தமர்ந்து கொண்ட இருவருக்குள்ளும் சில நிமிடத் துளிகள் மௌனம். இரண்டு கிழமை மட்டில் துபாயிலே இருந்து பிஸினஸ் பார்த்து விட்டு வந்த நண்பனின முகத்தில் பழைய களையை தேடிய ஹமீது நாநா... அஸன் ஹாஜியாரின் முகத்தில் தெண்படும் இறுக்கம் குறையலாம் என்ற நோக்கத்தில்,

"பாத்திமா டீச்சர் பிறகு கோல் ஏதும் எடுக்கலயா மச்சான்..." என்று இயல்பாகவே கேட்டார்.

"இல்ல..." கட்டாயமாகவே அஸன் ஹாஜியாரிடமிருந்து பதில் வந்தது மட்டுமன்றி இதற்கு மேல் அதைப்பற்றி எதுவும் பேச வேண்டாம். என்பது போல வேலைகளில் அவர் மூழ்கிவிட, மேற்கொண்டு எதுவுமே பேசத் தோன்றாமல் ஹமீது நாநா விடைபெற்றுக் கொண்டார்.

பாத்திமா டீச்சரைப்பற்றிய முழுக்கதையுமே ஹமீது நாநாவுக்குத் தெரியும். ஆனால் அவரது மனம் நிலை கொள்ளாமல் தவித்தது. சலனம் சபலம் இரண்டுக்குமே பணத்தால் தீனி போட்டுக் கொண்டிருப்பவர்தான் ஹமீது நாநாவும். இன்று வரைக்கும் தன்னைத் திருத்திக் கொள்ள அவரால் முடியவில்லை. வீட்டிற்குப் போய் மனைவி குழந்தைகளின் முகம் பார்த்தாரென்றால் உருகிக் கரைந்திடுவார். மனசாட்சியின் பிரண்டல் தாங்க முடியாமல் தௌபாவிலும் மூழ்கிடுவார். மனித பலவீனங்கள் விடாமல் அவரைத் துரத்திக்கொண்டே இருந்தது. என்னதான் இருந்தாலும் மனைவியெனும் ஸ்தானத்திற்கு ஈடாக தன்னை நம்பிக்கொண்டிருக்கும் ஒரு உறவை மாத்திரம் இது வரைக்கும் அவர் தேடிக் கொண்டதேயில்லை. பணத்தேவை இருப்பவர்கள் பலவீனத்துக்கு மருந்து தருகின்றார்கள். ஆனால் மனசென்ற ஒன்றைத் தொட்டு நம்பிக்கையைக் கொடுத்து பின்வாங்குவதெல்லாம் அவரைப் பொறுத்த வரைக்கும் கோழைத்தனம். அதைச் செய்ய எப்போதும் அவர் தயாரானதில்லை.

பாத்திமா டீச்சர் அஸன் ஹாஜியாரின் பால்ய சினேகிதனின் தங்கை. ஒரு பெண் குழந்தையுடன் புருஷனைப் பறிகொடுத்து இளம் வயதிலேயே விதவையானவள். எதிர்பாராத விதமாக சந்தித்துக் கொண்ட நண்பர்கள் பழைய நட்பைப் புதுப்பித்துக் கொண்ட போது... பாத்திமா டீச்சரின் அழகு அறிவு அடக்கம் என்பன அஸன் ஹாஜியாரின் மனதில் நீங்காத இடத்தைப் பிடித்துக் கொண்டது.

மனைவியானவள் உடல் ஆரோக்கியத்தை இழக்கும் போது..., புருசனின் எதிர்பார்ப்புக்களை பூரணமாக நிறைவேற்றும் வலிமையை இழக்கும் போது...,வசதியும் உடல் ஆரோக்கியமும் உள்ள ஆண்மகன இரண்டாம் திருமணம் முடிப்பது ஹலால் என்பது எம்பெருமானார் நபி (ஸல்) அவர்கள் காட்டிச் சென்ற வழி முறையில் ஒன்று. பெண் சுகம் தேடி நிலை தடுமாறி நெறி பிரண்டு வாழ்வதை விட இந்த

வழிகாட்டலை நேர்மையாகப் பின்பற்றும் அதில் எவ்வளவோ பரக்கத்துக்கள் இருக்கத்தான் செய்கிறது.

அஸன் ஹாஜியார் பாத்திமா டீச்சரை இரண்டாம் திருமணம் செய்ய முடிவெடுத்த போது முதல் முதலில் அவரை ஆரத்தழுவி வாழ்த்துச் சொன்னது ஹமீது நாநாதான். சென்ற முறை அஸன் ஹாஜியார் மக்கா செல்ல வெளிக்கிட்ட போது கண்கலங்க அவரைப் பயணம் அனுப்பி வைத்தார்.

“இன்ஷா அல்லாஹ் எல்லாம் ஹயராக முடியும் மச்சான். எல்லாத்தையும் அல்லாஹ்வுடைய பொறுப்பில் விட்டுட்டு வா. ஒரு ஏழைத்தாய்க்கும் மகளுக்கும், உனக்கு அல்லாஹ் தந்த பறக்கத்துக்கள இடம் கொடுக்கப் போரே. ரியலி கிரேட்டா, இந்த தைரியமும் துணிச்சலும் உன்ன விட வயசில பெரியவனான எனக்குக் கூட இன்னும் வரல்லியே. இந்த அசிங்கம் பிடிச்ச பழக்கத்தையெல்லாம் விட்டுப்போட்டு மஹ்சருக்கான வாழ்க்கையை நானும் வாழனும் மச்சான். எனக்காகவும் அந்தப் புனிதமான மண்ணில் வச்சு துஆ கேட்டுக்கடா...”

ஹமீது நாநா நாத்தழுதழுக்க உள்ளத்தால் உருகி கூறிய போது அஸன் ஹாஜியாரும் கூடச்சேர்ந்து கண்கலங்கி விட்டார்.

இருந்தும் என்ன, மக்காவிலிருந்து வந்த ஹசன் ஹாஜியார் சொற்ப நாளைக்குள்ளே முழுவதுமாக மாறிப் போனார். மெல்ல மெல்ல பாத்திமா டீச்சரிடமிருந்து தொடர்புகளையெல்லாம் விலக்கிக் கொண்டவர் பழையபடி பொரின் ட்ரிப் பிஸினஸ் என்று ஓடத் தொடங்கினார். ஏதோ உலக மகா ‘பிஸி’ மேனாக தன்னைக் காட்டிக் கொண்டு ஹமீது நாநாவை விட்டும் கூட தூரமே நின்றார். பாத்திமா டீச்சரைப்பற்றி ஹமீது நாநாவே வலிந்து ஏதாவது கேட்டால் கூட இப்படித்தான், ஒத்தையாக பதில் சொல்லி மௌனமாகிவிடுவார். பணக்காரன் என்ற இமேஜிக்குக் கிடைக்கும் அந்தஸ்தையும் குடும்பத்தினரின் திருப்தியையும் இழப்பது அத்தனை சுலபமல்ல. என்பது ஹமீது நாநாவுக்குப் புரிந்தது.

நண்பனின் கூடவே இருந்து நல்லது கெட்டதைப் பிரித்துப் பார்த்ததில் தான் எவ்வளவு சரியானவன் என்ற கேள்விதான் அவர் மனதில் ஆழமாக எழுந்தது. பாத்திமா டீச்சருக்கு நண்பன் கொடுத்த வாக்குறுதி நம்பிக்கை... கொட்டிய அன்பு எல்லாமே தெரிந்திருந்தும் ஒரு வார்த்தை கூட கேள்வி கேட்க முடியாமல் மௌனித்துப் போனார்.

"நீ யோக்கியமானவனா..." என்று நண்பன் திருப்பிக் கேட்டு விட்டால் நிச்சயமாக அவரால் பதில் சொல்ல முடியாது. மனச்சாட்சியின் முன் மானசீனமாக தலை குனிந்த போதுதான் தப்பும் தவறுமான தன் வாழ்க்கையின் உண்மை நிலையை உணர்ந்தார்.

அந்த நாட்களில் ஒரு பொழுது பாத்திமா டீச்சரின் தொலைபேசி அழைப்பிற்கும் ஹமீது நாநா முகம் வேண்டி ஏற்பட்டது. அஸன் ஹாஜியாரின் மௌனம் அவள் மென்மையான உணர்வுகளை எந்தளவுக்கு காயப்படுத்தி இருக்கின்றதை விபரித்தபோது அங்கும் பதில் பேச அவரால் முடியவில்லை. ஒரு துணையின் மௌனத்தின் மூலம் அடைந்த வேதனைகள் போதும்..., இன்னுமொரு முறை தன்னால் முடியாதென்று கூறி தன் மூச்சுள்ள வரைக்கும் அஸன் ஹாஜியாருக்காக தான் காத்திருப்பதாகச் சொல்லி தொலைபேசியை அவள் வைத்த போது இரண்டு துளிக்கண்ணீர் அவர் கண்களிலும் தேங்கி நின்றது. ஏழைகளின் உள்ளத்தையும் உணர்வுகளையும் சிதைப்பது எந்தளவு கொடுமையானது என்பதைப் புரிந்து கொண்டார். பாத்திமா டீச்சரின் அழுகையுடனான குரல் அடிக்கடி காதிற்குள் ஒலித்தது. மறக்க நினைத்தாலும் அவர் மனசாட்சியை தூங்க விடாமல் எழுப்பிக் கொண்டேயிருந்தது.

அதன் பிறகு ஒரு நாளல்ல இரண்டு நாளல்ல பலநாள் போராட்டம். யுத்த களத்தில் போராடிக் கூட ஒரு முடிவு கண்டு விடலாம். ஆனால் மனசாட்சியுடன் போராடுவதென்பது அத்தனை சுலபமானதல்லவே. மனசு ஓரளவு தெளிந்த பின் தீர்மானமாக வெளிக்கிட்டார். காரின் வேகமான ஓட்டத்திலும், அவர் மனதிற்கு சட்டெனப் பிடித்துப் போன ஒரு ஊரில் தரித்துக் கொண்டார். ஊரின் உள் நுளைந்து சுற்றிப் பார்த்ததில் அமைதியான இடத்தில் எளிமையாக நின்றிருந்த அந்தப் பள்ளிவாயல்... தான் எண்ணி வந்த கருமத்திற்கு தோதான இடம்தான் என்று முடிவெடுத்து பள்ளியில் சென்று உட்கார்ந்து கொண்டார்.

இரவின் தழுவலில் அங்குமிங்கும் தென்பட்ட ஒன்றிரண்டு பேரும் காணாமல் போக, பள்ளிவாயல் நிசப்தமாகியது. நிமிட முள் நகர்ந்து நேரம் நடுநிசியைத் தாண்டியதும் ஹமீது நாநா மெல்ல எழுந்து கொண்டார். மனிதர்கள் யாரும் இல்லாவிட்டால் என்ன, அல்லாஹ் தன்னைப் பார்த்துக் கொண்டிருக்கிறான் என்ற எண்ணமே

உடம்பை சிலிர்க்கவைக்கையில் சாட்டையை எடுத்துக் கொண்டார். “ஒன்று... இரண்டு... மூன்று...” மனம் எண்ணத் தொடங்க கைகள் இயங்கத் தொடங்கியது. ஒவ்வொரு அடியும் அவர் வெற்றுடம்பில் விழ... விழ... வெள்ளை மேனியில் சிவப்புக் கோடுகளாக எழத் தொடங்கியது. வாழ்க்கையில் தான் செய்த பாவங்களின் வலிமையை விட இந்த வலியொன்றும் அவருக்குப் பெரிதாகத் தோன்றவில்லை. ஹறாமென்று தெரிந்தும் இந்த துனியாவுக்காக ஹமீது நாநா சுமந்த அழுக்குகளெல்லாம் மூச்சோடு கலந்து வெளியேறுவதைப் போலிருந்தது.

ஏழை ஒருத்தன் திருந்தினால் அவன் குடும்பம் மட்டும்தான் நேர்வழி பெறும். பணக்காரன் ஒருவன் திருந்தினால் அவன் வாழும் சமுதாயமே பலனடையும். அல்லாஹுவை விட தீர்ப்பாளி யார்...? ஹமீது நாநா திருந்த வேண்டுமென்று அல்லாஹ் தீர்ப்பெழுதி விட்டான்.

ஹமீது நாநா இந்த முறையும் ஹஜ்ஜுக்குப் போறாறராம். தெரிந்தவர்களிடையே சாதாரணமாகப் பேசப்பட்ட விடயமாக அது இருந்தாலும், இன்ஷா அல்லாஹ் அவர் மக்காவிலிருந்து திரும்பி வரும் போது பாவங்கள் தொலைத்த அன்று பிறந்த பாலகனைப் போல் வருவார். தன் நண்பனைக் கேள்வி கேட்பார். ஏழையொருத்திக்கும் வாழ்வு கொடுப்பார். காரில் வீடு திரும்பிக் கொண்டிருந்த ஹமீது நாநாவின் உடம்பில் வலி இருந்தது.

ஆனால் உள்ளத்தில் தூய்மையின் ஒளி தெரிந்தது!

✦ ✦ ✦

# 5 முஹர்ரம் தந்த விடுதலை

பிசைந்த மாவை உரலில் வைத்துப் இடியப்பம் பிழிவதிலேயே கவனமாக இருந்தாள் செயினம்பு. அந்தப்பக்கமாக அடுப்பிற்கு அருகில் குந்தியிருந்த மூத்தமகள் ஹினாயா வண்டுப் பானையில் வைத்து அவிந்த இடியப்பத்தை இறக்குவதும் உம்மா பிழிந்து தந்த இடியப்பத்தை வண்டில் வைப்பதும் அளவாக அடுப்பை எரிய விடுவதுமாக இயந்திர கதியில் இயங்கிக் கொண்டிருந்தாள்.

"புள்ள ஹினாயா! அந்தப் பொட்டியில நூறு இடியப்பம் எண்ணி அடுக்கினாப் போல இருக்கி, இறக்கி வச்சிருக்கிறதுகளையும் அதோடு எண்ணி அடுக்கிரு"

"சரிம்மா"

"ஒன்னு... ரெண்டு" என்று இடியப்பங்களை எண்ணி அடுக்கத் தொடங்கிய மகளை நிமிர்ந்து பார்த்த செயினம்பிற்கு தொண்டைக்குள் முள் சிக்கிக் கொண்டதைப் போல வேதனை ஏற்பட்டது. இந்த நோன்புப் பெருநாளோட இவளுக்கு இருபத்தேழு வயசு முடிஞ்சு. இருபத்தெட்டு வயசு தொடங்கப் போகுது. மூச்சுப் பிடிச்சி எல்லோரும்தான் கிடந்து கஷ்டப்படுறம். ஏழை எளியதுகளுக்கு ஒழுங்கான இடமொன்று அமையிறதுதான் என்ன கஷ்டமாக்கிடக்கு?

பாவாடை நெகிழ்ந்து இடுப்புமுள் துருத்திக் கொண்டு நிற்கும் மகளின் தோற்றத்தைப் பார்த்து மேலும் மனசுக்குள் புகைந்து போனாள் செயினம்பு.

"முன்னூறு இடியப்பம் இருக்கும்மா..."

மகளின் பதிலால் தாயின் சிந்தனை கலைந்தது.

"சரி புள்ள நான் அடுப்படி வேலைய கவனிச்சிக்கிறன். சுபஹுக்கு பாங்கு சொல்லும் ஒகுத்தாப் பெய்த்து நீ போய் ஹம்னாவ எழுப்பி உட்டுப் போட்டு சுபஹத் தொழுதிட்டு வா..."

ஹினாயா அங்கிருந்து நகர்வதற்கிடையிலே வேலையில் பரபரப்பாகிப் போனாள் செயினம்பு. இன்று நேற்று தொடங்கிய தொழிலா அது?

ஹினாயா வயதுக்கு வருவதற்கு முதல் தொடங்கியது. உம்மா மக்களுக்கெல்லாம் நடுநிசியில் எழும்புவதும் அலுப்புடனும் இடியப்பச் சட்டியுடனும் மாரடிப்பதும் பழகிப்போன ஒன்றாகவே ஆகிவிட்டது.

“க்கள... க்கள... க்கள...” ஹினாயாவின் வாப்பா வாய் கொப்பளிக்கும் சத்தந்தான் அது. எப்பவும் அவர் கிணற்றடிக்கு வந்திட்டாரென்றால் ஏக தடபுடல்தான். அமைதியான அந்த நேரத்தில் செருமுவதும் காறுவதுமாக கம்பி வாளியால் கிணத்தை ஒரு கலக்குக் கலக்கி மளமளவென்று தலையில் தண்ணீர் ஊற்றிக் கொண்டுதான் உள்ளே வருவார். உச்சி விறைத்துப் போகும் அளவிற்கு குளிரென்றாலும் மழையென்றாலும் அவர் பழக்கம் மட்டும் மாறாது. குளித்து விட்டு வந்தவர் ஹம்னா நீட்டிய தேயிலைக் கிளாசை குடித்துக் கொண்டே...

“மகள் ஹம்னா! இன்டைக்குப் பகல் கறிய வேண்டி, கொண்டு தர எனக்கு தோதுப்படுதோ என்னமோ தெரியல்ல. இங்கின ஏதாச்சும் வேண்டி சமாளிக்கப் பாருங்க. இன்டைக்கு தேதி இருபத்தொன்னு இல்லையா? நேத்தே குடுத்திருக்க வேண்டிய சீட்டுக் காசு, அலுமாரி மேல் தட்டுலதான் வச்சிருக்கன். மறந்திடாம எடுத்துக் கொடுத்திடுங்க. நான் அங்கின எங்கயாச்சும் வச்சு சாப்பிட்டுக்குவன். சரி மகள் நான் போறன் உம்மாட்ட சொல்லிரு...”

கட்டியிருந்த மாட்டை அவிழ்த்து வண்டியில் பூட்டி பிரம்பால் ஒரு சொடுக்கு கொடுக்கி “தா... ஹை... ஹை...” என்று ஒலி எழுப்பியபடியே அசனார் புறப்பட்டு விட்டார். அசனாருடைய வண்டில் மாடென்றால் அந்தப் பகுதியில் பிரபல்யம்தான். அதிலும் வெள்ளி கழிந்து வரும் சனி ஞாயிறில் இப்படித்தான் ரொம்ப பரபரப்பாக இருப்பார்.

வெள்ளி பூரா ஓய்வெடுக்கும் கடைத்தெரு சனி, ஞாயிறில் கலகலப்பாகிவிடும். வாடிக்கையாக சாமான் ஏற்றும் கடைக்காரர் போக மற்றவர்களும், அசனாரின் வண்டில் மாடு இல்லையென்றால்தான் மற்றவர்வளைத் தேடுவார்கள். சிந்தாமல், சிதறாமல் பொருட்களைக் கொண்டு சேர்ப்பதுமில்லாமல் நியாயமான கூலியை மட்டும்தான் அசனார் எதிர்பார்ப்பார்.

“இதுகளையெல்லாம் அள்ளியேத்துறத்துக்கு ஆயிரத்தெட்டு நவீன வாகனங்கள் வந்தாலும் அசனார் வண்டில் மாட்டுக்கு மட்டும் இன்னும் மவுசு குறையாமல் இருப்பதற்கு அவருடைய கண்ணியமான

தோற்றமும் புள்ள குட்டிக்காரன் என்ற பரிதாபமும் கூட காரணமாக இருக்கலாம். அசனாரின் வண்டில் தெருமுனையைக் கடப்பதற்கிடையில் "அல்லாஹு அக்பர்... அல்லாஹு அக்பர்..." என்று பாங்கு சொல்லத் தொடங்கி விடும். இது தினசரி வழக்கம். தெரு முனையில் வண்டியை நிறுத்தி விட்டு பக்கத்திலிருக்கும் பள்ளிவாயலில் சுபஹுத் தொழுகையை முடித்து விட்டுத்தான் அவர் மெயின் றோட் பக்கம் வண்டியைத் திருப்புவார்.

மெல்ல மெல்ல இருள் விலகி சூரியனின் ஒளிக்கரங்கள் சுள்ளென்று உலகை ஆக்கிரமிக்கத் தொடங்கியது. ஹினாயாவையும் ஹம்னாவையும் தவிர செயினம்பின் மற்றைய நாலு கீழ் கண்டுகளும் பாடசாலைக்குச் சென்றுவிட்டனர். காலை நேரத்து அடிப்படை வேலையை ஒதுக்கிவிட்டு பகல் கறி வருவதற்கிடையில் ஒரு கண்ணுக்குச் சாய்ந்து எழும்பித்தான் செயினம்பு சமையல் வேலையை பார்க்கத் தொடங்குவாள். இன்றும் அப்படித்தான். கையை மடித்து தலைக்கு அணையாகக் கொடுத்து கண் மூடிக்கிடந்தாலும் தூக்கம் மட்டும் எட்டிக்கூடப் பார்க்கவில்லை.

சுனாமி ஏற்பட்டதற்குப் பிறகு அங்கே இங்கேயென்று பயத்தில் கொஞ்ச நாள் அலைந்து திரிந்து விட்டு சொந்த இடத்திற்கே அவர்கள் திரும்பி வந்துவிட்டார்கள். செயினம்பிற்கென்று அரையும் குறையுமாகக் கட்டிக் கொடுக்கப்பட்ட வீட்டில் சரி பாதியை சுனாமித் தண்ணீர் கொண்டு போய்விட்டது.

"நாலு பொட்டப் புள்ளகளுக்கும் நிலம் தேடுற கஷ்டத்தை மட்டும் அல்லாஹ் நமக்குத் தரல்ல" என்று அசனார் அடிக்கடி திருப்திப்பட்டுக் கொள்ளும் அளவிற்கு பெரிய காணி அது. புருசனும் பொண்டாட்டியும் புள்ள குட்டிகளுமாகச் சேர்ந்து சுனாமி ஏற்படுத்திப் போன அலங்கோலங்களையெல்லாம் சீர் செய்து பள்ளிவாயலால் இனாமாகக் கொடுத்த தகரத்தால் கிணத்துக்கு மறிப்புக் கட்டி தாழ்வாரமொன்றையும் இறக்கி குசினியாக்கி, நிரந்தரமாக அவர்கள் வீட்டிலேயே குந்திய போதுதான் அசனாரின் மாளிகையை விட நமக்குச் சொந்மான குச்சிக் குடிசை எவ்வளவு மேல் என்பது புரிந்தது.

சுனாமி ஏற்பட்டு இரண்டு மூன்று கிழமைக்குள்ளேயே இடியப்பச் சட்டியையும் அடுப்பில் ஏற்றி அரசாங்க சுனாமிக் கொடுப்பனவுகள் அனைத்தையும் வென்றெடுத்து விட்டாள் செயினம்பு.

375 ரூபாவின் நிவாரண முத்திரை மட்டும் குடும்ப அங்கத்தவர்களின் எண்ணிக்கை படி. எட்டு நிவாரண அட்டைகள் அவளுக்குக் கிடைத்தன. 5000 ரூபா பணம். அதோடு, அங்கே இங்கே என்று கிடைக்கும் எந்த நிவாரணத்தையுமே செயினம்பு இழக்கவில்லை. ஹினாயாவுக்கென்று பக்கத்தில் போட்டுக் கிடந்த அத்திவாரத்தில் அதிக பாதிப்பு இல்லையென்று தெரிந்ததும் வீடு திருத்துவதற்காக அரசாங்கம் கொடுத்த பணத்தையும் பெற்று குருவி சேர்ப்பது போல் கொஞ்சம் கொஞ்சமாக வங்கியில் சேமித்து வைத்திருந்த பணத்தயும் எடுத்து வைத்து வேலையை ஓரளவு ஒப்பேற்றியே விட்டாள். சுனாமி சுனாமி என்று ஆளாளுக்கு அழுது குமுறினாலும் அதிலிருந்த பறக்கத்தை மட்டும் அவள் மறக்கவே மாட்டாள். உடம்பு அசதிகளுடன் நினைவுகளால் துலக்கமின்றி வெறுமனே கண்மூடிக் கிடந்தவளை ஹம்னாவின் குரல் தட்டி எழுப்பியது.

"உம்மா... உம்மா... சாச்சிம்மா வாராங்க! எழும்புங்கம்மா..."

வாரிச்சுருட்டி எழுந்து முடியைக் கைகளால் கோதி கொண்டை போட்டு தலை முக்காட்டை சரி செய்வதற்கிடையில் நீட்டி முழங்கிக் கொண்டே வந்த சாச்சிம்மா.

"அவளுக்கென்னடிம்மா நிம்மதியான நித்திரையும் பொழப்புமா இருக்கா, பாழாய்ப் போன சுனாமி வந்ததுக்குப் பொறகு நித்திரையென்டா என்னென்று கேட்க வேண்டியதாக் கிடக்கு..."

நடுநிசி இரண்டு மணிக்கெழும்பி நெருப்புடனும் தணலுடனும் போராடும் செயினம்புவிற்கு சாச்சிமாவின் வார்த்தைகள் நெஞ்சில் சுருக்கென்று தைத்தது. விடிந்தது தெரியாமல் தூங்கி உழைப்புக் கஷ்டமில்லாமல் ஊர் சுற்றி வம்பளப்பவர்களிடம் நியாயம் பேசாமல் மௌனமாக இருப்பதே மேல். என்ற எண்ணத்தில் அமைதியாக இருந்து விட்டாள்.

"சுனாமி வந்ததென்டு உன்டபாடு பிழையில்லடிம்மா. இங்கின அல்லசல்ல எல்லோரும் அதையேதான் கதைக்கிறாங்க. வீட்டையும் கலாதியாத்தான். முடிச்செடுத்திருக்கிற, இன்னும் என்னத்துக்கு இவ ஹினாயாவ வச்சிட்டிருக்கிற குமர் முத்தி குரங்காப் பெய்த்தென்டு சொல்லப் போறாங்க. ஒருத்தனப் பார்த்து கட்டிக் குடுக்கிறதானே..."

தாய் வழி தூர உறவு வயதில் பெரியவங்க என்பதை மனதில் நிறுத்தி செயினம்பு பொறுமையாகவே இருக்க சாச்சிம்மா தொடர்ந்தாள்.

"என்ட பேரன் முறையானவன்தான் இஸ்திகார், அவன ஹினாயாவுக்கு செய்வமென்டு அவங்கட ஊட்டால கேட்டனுப்பினதுக்கு வேணாம் என்டிட்டாங்களாமே. இல்ல தெரியாமத்தான் கேக்கன். அவன் ஆம்பிளதானே. அவனில் என்ன குறை கண்டீங்க. மேஸன் வேல... இப்ப மேஸன்மாருக்கெல்லாம் ஊரில இருக்கிற தட்டுப்பாடு தெரியும்ல ஆயிரக்கணக்கில சம்பாதிக்கிறான். அவனவிட ஒசத்தியான மாப்பிள்ள உன்ட மகளுக்கு கிடைச்சிருமாக்கும். வலிய வந்த சீதேவிய மறுத்திருக்கிறீங்கென்டா மகளக் கட்டிக் கொடுக்கிற ஐடியாவே உங்க மனசில இல்ல போல..."

நாக்கில் நஞ்சைத் தடவி வந்து விழுந்த வார்த்தைகளால் கொதிச்சுப் போன செயினம்பு முதன்முறையாக வாயைத் திறந்தாள்.

"கொஞ்சம் யோசிச்சுக் கதைங்க சாச்சிம்மா. வயசிக்கு மூத்தவங்கன்டாப் போல வாய்க்கு வந்ததையெல்லாம் கதைச்சிரக்கூடா. நாங்க கஷ்டப்பர்ரதெல்லாம் வேற யாருக்கு. எங்க புள்ளகளுக்குத்தான். உங்க பேரன் ஆம்பிளதான். ஆனா ஒழுக்கமானவன் இல்ல. உழைக்கிற காசையெல்லாம் ஊர் மேயிறத்துக்கே செலவழிக்கிறவன். அப்படிப்பட்டவனுக்கு ஹினாயா வாழ்க்கப்படறதவிட ஆயுசுபூரா எங்க கூடவே இருந்துட்டுப் போகட்டும். ஒரு நல்லவனுக்கு வக்காளத்து வாங்குறதுக்காக இவ்வளவு கதச்சிருந்தீங்கன்டா நான் வாய் தொறந்திருக்க மாட்டன். போயும்... போயும்..."

அதற்கு மேல் செயினம்பால் கதைக்க முடியவில்லை. விம்மலும் வெப்பு சாரமுமாக எழுந்து உள்ளே சென்று விட்டாள்.

நிமிடங்கள் பல மணித்தியாலமாகி நகர்ந்து கொண்டிருந்தன. ஒப்புக்காக வேலைகளை செய்து கொண்டிருந்த செயினம்பின் முகத்தில் பழைய உற்சாகமில்லை.

இஷாவிற்குப் பிறகு பிள்ளைகள் ஆளுக்கொரு பக்கமாக உறங்கி விட, நிலைப்படியில் கண்மூடி சாய்ந்திருந்தாள். எல்லா ஆரவாரமும் அடங்கி அமைதியாகியபோதும் அவள் நெஞ்சு மட்டும் குமுறும் எரிமலையாய் கொந்தளித்துக் கொண்டிருந்தது.

"யா அலலாஹ் பொண்ணாய்ப் பொறந்தவளுக்கு விமோசனமே இல்லையா? நான்தான் காலத்துக்கும் கிடந்து கஷ்டப்பர்றேன்னு என் புள்ளையையும் அவமானத்துக்கும் பழிச்சொல்லுக்கும் ஆளாக்கிடாதே

நாயனே. நீ தந்த சொத்து சுகமெல்லாம் அதுகள்தானே. யா... அல்லாஹ்... நாலாவது அஞ்சாவதையெல்லாம் சுமக்கும் போது என் முகத்துக்கெதுக்கவே கேலி பேசினாங்க. குறைசொன்னாங்க.

அப்போவெல்லாம் என் புருஷன் படைச்சவன் படியளப்பான் செயினம்பு. அல்லாஹ் நாடாதது எதுவுமே நடக்காது. நாம பாவம் செய்ய வேணாம். பிள்ளைகளுக்காக ஹலாலா கஷ்டப்படுவோம். மற்றையதெல்லாம் படைச்சவன் பார்த்துக்குவான்னு'' தெம்பூட்டுவார்...

“கைவிட்டிராத நாயனே எங்கள நீ கைவிட்டிராத...”

நெஞ்சின் துக்கம் தாளாமல் பொங்கிப் பொங்கி அழத் தொடங்கினாள் செயினம்பு.

‘தடக்... தடக்... தடக்...’

அசனாரின் வருகையை உறுதிப்படுத்திய உருண்டு வரும் வண்டில் சில்லின் ஓசை. பதறியெழும்பிய செயினம்பு முகத்தை அழுத்தி துடைத்து விட்டபடி கதவடியில் செல்லவும் ‘க்ரீச்’ என்று வண்டில் நிற்கவும் சரியாக இருந்தது.

“இறைவனிடம் கையேந்துங்கள் அவன் இல்லையென்று சொல்லுவதில்லை... பொறுமையுடன் கேட்டுப் பாருங்கள் அவன் பொக்கிஷத்தை மூடுவதில்லை.”

உற்சாகமான உரத்த குரலில் அசனார் பாடிய பாடல் அவள் காதை கடந்து சென்றது. என்னடா இது புதினம் என்று ஆச்சரியத்தோடு கதவைத்திறந்த செயினம்பிற்கு வண்டியில் பரவிக்கிடந்த சாமான்கள் மேலும் ஆச்சரியத்தைக் கூட்டியது. கனிந்தும் கனியாத வாழைப்பழக்குலை, தட்டத்தில் கேக், நல்ல சாதி பிஸ்கட் பெட்டிகள், ஒரு பெட்டியில் மூட்டை, பிடவைப் பார்சல்....!

ஆச்சரியம் விலகாமல் பார்த்து நின்ற செயினம்பிடம்...

“எல்லாத்தையும் பத்திரமாய் உள்ள கொண்டு போய் வைபுள்ள. வந்து எல்லாத்தையும் விபரமாச் சொல்றன்.”

என்றபடியே மாட்டை வண்டிலை விட்டும் அவிழ்த்து உரிய இடத்தில் கட்டி வைக்கோலைப் பிரித்துப் போட்டு, பக்கத்தில் தண்ணி வாளியையும் வைத்து விட்டு வந்த அசனார்! உட்சாகத்தின் உட்பொருளை அவிழ்க்கச் தொடங்கினர்.

“சீமெந்துக்கூட மஹ்ரூப் ஹாஜியாரைத் தெரியும்தானே புள்ள உனக்கு. அவர்ர கடைக்குப் பக்கத்தில கிடக்கிற வளவுக்குள்ளதானே

வண்டிலைக் கட்டி இளைப்பார்ர நான். சின்ன லோடென்றாலும் நம்மள உடமாட்டாரு மனிசன். தேநீர் பின்னேரத்து சாப்பாடு... தேடி வந்து மனிசன் தந்திட்டுப் போவாரு.... அவ்வளவு சாலிஹானவரு..."

அசனார் சொல்லும் தெரிந்த விடயங்களைக் கேட்டுக் கொண்டே புதிதாய் சொல்லப் போகும் தெரியாத விடயத்திற்காக நெஞ்சு பதைபதைப்புடன் செயினம்பு காது கொடுத்துக் காத்திருந்தாள்.

இன்டைக்குப் பின்னேரம் என்னயக் கூப்பிட்டனுப்பி...

'அசனாரு நாளைக்கு நம்மட ஊட்டுப் பொண்டுக ஒரு இருபத்தஞ்சு முப்பது பேர் மட்டுல உன்ட ஊட்டுப் பக்கமா வர இருக்காக, என்னடாப்பா கவனிச்சி அனுப்புவியா'

ஒரு குண்டைத் தூக்கிப் போட்டாரே பார்க்கலாம். எனக்கு கையும் ஓடல்ல, காலும் ஓடல்ல, பிறகுதான் விஷயத்த விளக்கினாரு.

"என்ட மட்டக்களப்பு கடையில நிற்கிற சலீம் தெரியும்தானே, தாய் தகப்பன் இல்லாதவன் நம்மட ஊர்க்காரனும் இல்ல. நம்மட குடும்பத்தில ஒருத்தனா வளர்ந்திட்டான். முஹர்ரம் புதுவருசம் ஆரம்பிச்சிருக்குதானே?"

"இப்ப என்னடான்னா காத்தான்குடியில வந்திருந்து வணக்க வழிபாடெல்லாம் செய்யப் போறானாம். கல்யாணமொன்ட கட்டிக்கிட்டு உன்ட பொண்டாட்டி குடும்பத்தோட என்ன வேணுமென்டாலும் செய்துக்கடா ராசான்னு சொல்லிட்டன்".

பின்ன என்ன அசனார். முப்பத்து நாலு வயசு முடியப்போகுது. கலியாணம் வேணாம் கலியாணம் வேணாம் என்டு சொன்னா எப்படி? அதுதான் இதுதான் சமயமென்டு அமுக்கினன். பையன் சம்மதிச்சிட்டான். உன்ட குடும்பத்தையும் சொன்னன். உன்னைத் தேடி ரெண்டு மூனு பயணம் உண்ட ஊட்டயும் வந்திருக்கானாம். அவனுக்குச் சந்தோசம்தான்..."

மஹ்ரூப் ஹாஜியார் சொன்னதையெல்லாம் அசனார் ஒப்புவிக்க கன்னங்கள் ஈரமாவதை செயினம்பால் தடுக்கவே முடியவில்லை.

"நாளைக்கு வாரவங்களக் கவனிக்கிறதுக்கு கையோடயே எல்லாத்தையும் வாங்கிட்டு வந்திட்டன். விடிய இடியப்பச் சட்டிய ஏத்திராத. முட்டை இரிக்கி வட்டிலப்பம் அவிக்கனும். புடவை எடுத்திட்டு வந்திருக்கன். நாளைக்கு ஹினாயாம்மாக்கு அதத்தான் கட்டனும்.

சுனாமி ஏரியாதானே நம்ம இடம். வாரவங்க சுத்திப்பாக்க ஆசப்பட்டா எல்லாத்தையும் கூட்டிட்டுப் போய்க் காட்டு. அல்லாஹ்ட ஹொதரத்தையும் எல்லோரும் பார்க்கத்தானே வேணும். இன்ஷா அல்லாஹ் வார வெள்ளிக்கிழமைக்கே நெருங்கினவங்கள மட்டும் கூப்பிட்டு எளிமையா கலியாணத்த முடிச்சிடுவம் என்டு ஹாஜியார் சொன்னாரு."

பெருமிதத்தோடு புருசன் கேட்ட கேள்விக்கு பேசவே முடியாத சந்தோசத்துடன் தலையாட்டினாள் செயினம்பு. இது நாள்வரை கண்மூடியும் தூங்காமல் விழித்திருந்த ஹினாயாவின் நினைவில், அன்றொரு நாள் கதவிடுக்கில் கண்ட சலீமின் கறுத்த கம்பீரமான உருவம் ஞாபகத்திற்கு வரவே முகம் மூடி வெட்கப்பட்டாள். இனியேது அவளுக்கு உறக்கம்?

✦ ✦ ✦

*பி.கு.*

| | |
|---|---|
| *ஒகுத்து* | *: வேளை* |
| *அல்லசல்* | *: அக்கம்பக்கம்* |
| *ஹொதரத்து* | *: அதிசயம்* |

## ௬

# நடை

**கா**லையில் சரியாக 8.45ஐ கடிகாரம் காட்டும் போதே வீட்டை விட்டு வெளியில் வந்த விடுவேன். ஒரு பத்து நிமிஷத்து நடை... முன்னரெல்லாம் நாநா, மாமா என்று யாராவது வர மாட்டார்களா? சைக்கிளில் ஏறிக் குந்தினால் ஒரு அலுப்புமில்லாமல் ஆபீஸ் வாசலில் போய் இறங்கிக் கொள்ளலாமென்று எதிர்பார்ப்பேன். இப்போது அப்படியல்ல; நடப்பதில் உள்ள ஆரோக்கியத்தையும், நன்மையையும் உணர்ந்த பிறகு நடப்பதற்கு தயங்குவதில்லை.

அன்றும் குறிப்பிட்ட நேரத்திற்கு வீதிக்கு வந்து விட்டேன். எதிர்ப்பட்ட இடியப்பக்கார மூத்தம்மா

"என்ன புள்ளம்மா வேலைக்குப் போகயா?"

என்று கேட்ட கேள்விக்கு சிரித்து தலையசைத்து விட்டு நடக்கத் தொடங்கினேன். மெதுவாக ஒரே சீராக நடப்பதுதான் எனது சுபாவம். அதை மாற்றிக் கொள்வதற்குரிய எந்த சூழலையும் ஏற்படுத்திக் கொள்ள மாட்டேன். அவசர நடைக்காரர் யாரும் இடையில் அகப்பட்டாலும் என்னுடன் வந்தாலொழிய அவர்களின் வேகத்திற்கு நான் போகாமல் மெல்ல ஒதுங்கிக் கொள்வேன். ஒரே சீரான நடைதான் உடற்பயிற்சிக்கும் உகந்தது என்று பத்திரிகையில் படித்த ஞாபகம்.

சிறிது தூர நடைக்குப் பிறகு இடையில் குறுக்கிடும் "பீச்" றோட்டைக் கடக்க வேண்டும். பிரதான வீதியில் இருந்து பிரியும் அந்த றோட் நெடுகப் போய் கடற்கரையில்தான் முடிவடையும். மெயின் வீதியைப் போலவே எந்த நேரமும சனப் புழக்கமும் வாகன நெரிசலுமாக அல்லோலப்படும். இரண்டு பக்கமும் திரும்பித் திரும்பிப் பார்த்து அந்தப் பக்கம் போய்ச் சேருவதற்கிடையில் "பதக்... பதக்" என்று நெஞ்சுத் துடிப்பு கூடிவிடும். எப்போதாவது பரபரப்பு குறைவாக இருக்கும் தருணத்தில் கடற்கரைப் பக்கம் திரும்பிப் பார்ப்பேன்... தூரத்தில் அந்த வீதி முடியும் இடம், அதற்கப்பால் கடற்கரைக்குரிய தார் வீதி, மணற்பரப்பு, ஹோ... என்ற கடல் எல்லாமே ஒரு நொடிக்குள் மனத்திரையில் ஓடும்.

சுனாமி ஏற்பட்ட அன்று ஒரு பனை உயரத்திற்கு அலையெழும்பி வந்ததென்று சொன்னார்கள். அந்தக் காட்சி எப்படி இருக்குமென்று நினைத்துப் பார்ப்பேன். உடம்பு சிலிர்த்துக் கொள்ளும்.

“பீச்” ரோட்டையும் தாண்டி விட்டேன். அப்பாடா!மனசுக்குள் இனம் புரியாத நிம்மதி. இனி ஆறுதலாக நடக்கலாம். ஹேன்ட் பேக்கை தோளில் ஏற்றிவிட்டு இரண்டொரு எட்டுக்கள்தான் எடுத்து வைத்திருப்பேன்...

“தம்பி மெயின் ரோட் பக்கமா போறீங்க..?

என்னைக் கடந்து சென்ற சைக்கிள்காரரிடம் கேட்ட குரலுக்குரியவர் ‘ஓம்’ என்ற விடை கிடைக்காததால் என்னைத்தாண்டி முன்னுக்கு வந்தார்.

பிடித்திருந்த குடையை சற்று நிமிர்த்தி அவரை நோட்டமிடுகிறேன். எண்ணெய் போட்டு படிய படிய வாரிய தலை. முழுக்கை சேர்ட், புதுச்சாரன் கையில் மடித்த நிலையில் ஒரு சிறு பேக், அவசரமான பதற்றமான நடை... மெயின் ரோட்டில் ஏதோவொரு பஸ்ஸை பிடிப்பதற்காகத்தான் அவர் வெளிக்கிட்டுப் போய்க் கொண்டிருக்கிறார் என்பது புரிந்தது. முகம் பெரிதாகத் தெரியவில்லை. ஆனால் அவருக்குப் பின்னாலேயே எனது நடையும் தொடர்ந்தது.

இது கூட ஒரு வகையில் சௌகரியம்தான். காலையில் எத்தனை வகையான முகங்களைப் பார்க்கக் கிடைக்கின்றது. தெரியாதவர்களைக் கண்டால் தலையசைத்து சிறிதாக ஒரு புன்னகை. மற்றப்படி தெருவைப் பார்த்து நம்நாட்டில் சென்றாலும் மனதில் பதியும்படி ஏதாவது ஒரு நிகழ்வு இடம்பெறாமல் விடாது. இப்படித்தான் ஒரு நாள்...!

என் முன்னே வந்து கொண்டிருந்த ஒரு சோடி... அவள் கையில் குழந்தை, முகத்தில் வேதனையும், கோபமும் கலந்த உணர்ச்சிக் கலவை. அவள் பின்னாலேயே சைக்கிளைப் பிடித்தபடி வந்து கொண்டிருந்த புருஷனின் முகத்தில் குற்றத்தின் சாயல், அதை சமாளிக்கும் ஏமாளித்தனமான சிரிப்பு, அரைக்கை சேர்ட்டும், நீளக்காற்சட்டையும் பார்ப்பதற்கு படு ‘ஸ்மார்ட்’டாகத்தான் இருந்தான். தூரத்தில் தெரிந்த உருவங்கள் அருகில் வந்த போதுதான் தெருவென்றும் பாராமல் அவள் படபடத்த வார்த்தைகள் என் காதில் விழுந்தன.

"இந்தப் பச்சமண் எங்கையில் இல்லேன்டா, வெளிநாட்டுக்குப் போயென்டாலும் என்ட பொழப்ப நான் பாத்திருப்பன். நீங்க புருஷனா இருந்து கிழிச்ச அழகு, கடனும் கஷ்டமும்தான் மிச்சம். மனிசனுக்கு ரோசம் வேணும். தனக்குத்தான் புத்தி இல்லேன்னாலும் பொண்டாட்டி சொல்லையாவது கேட்டு நடக்கத் தெரியனும்..."

ஒரு கையால் பிள்ளையைத் தூக்கி இருந்ததால் அந்தப்பக்கம் உயரத்தூக்கிய அபாயா... ஒழுங்காகப் போடப்படாத ஹிஜாப், கலங்கிய கண்கள் இன்னும் நெருக்கத்தில் அவளும் அவளுடனே சிதறிச் சென்ற வார்த்தைகளும் என்னில் பாதிப்பை ஏற்படுத்தியது என்னமோ உண்மைதான். திருமணக் கனவுகள் பலதும் பத்துமாக இருக்கும் எனக்கு... பெண்மையின் யதார்த்தம் பல நேரங்களில் ஆற்றாமையை உண்டு பண்ணுவதாகவே எனக்குள் உணர்கின்றேன்.

வேகமாக வந்த மோட்டார் சைக்கிளொன்று மெதுவாகியதும் சரேலென்று நிமிர்ந்து பார்க்கின்றேன். எனக்கு முன்னால் சென்றவர்தான் கைச் செய்கையால் மெயின் ரோட் பக்கம் காட்டி அந்தப் பக்கமா போகின்றீர்கள் என்பது போலக் கேட்கின்றார். அவனோ இல்லை என்று தலையசைத்து எதிரே தெரிந்த தெருவிற்குள் லாவகமாக மோட்டார் சைக்கிளை மாறியெடுத்து மறுபடியும் பறக்கத் தொடங்கினான். 'ச்சே...! என் மனம் தன்னாலேயே சலித்துக் கொண்டது. மெதுவாகியதும் ஒற்றிக்கொள்வான் என்றுதான் எதிர்பார்த்தேன். அரைக்கண்ணால் பின்னால் வந்த என்னையும் நோட்டமிட்டு என்ன ஸ்டைலாகத்தான் போகின்றான். "ராட்சஷன்" என்று திட்ட வேணும் போலவே தோன்றியது.

முன்னுக்கும் பின்னுக்கும் திரும்பிப் பார்த்தவரின் நடையிலுள்ள பதற்றம் இப்பொழுது வெளிப்படையாகவே தெரிந்தது. என்னை அறியாமையிலேயே நானும் திரும்பிப் பார்க்கிறேன். எனக்கு தெரிந்தவர்கள் என்றாலும் யாராவது வரமாட்டார்களா? என்ற நப்பாசைதான். பாவம் அவர், அவஸ்தையாக தலையை தடவிக் கொண்டவர் தலையில் வைத்த எண்ணெய் கையில் பிசுபிசுத்ததோ என்னமோ கைக்குட்டையால் கையை பிசைந்து முகத்திலிருந்து பிடரி வரை அழுத்தித் துடைத்துக் கொண்டார்.

புதுக்காத்தான்குடியிலிருந்து மெயின் ரோட்டிற்கு வருவதென்றால் கொஞ்சம் தூரம்தான். ஆட்டோவில் ஏறினால் மறுக்காமல் ஐம்பது ரூபாய் கொடுக்க வேண்டும். காலையிலேயே

ஆட்டோக்காரனுக்கு ஐம்பது ரூபாய் அழ எல்லோராலும் முடியுமா என்ன?

திடீரென்று திரும்பியவர் என்னைப் பார்த்து மணி என்ன என்று கேட்கிறார்.

நான் கைக்கடிகாரத்தைப் பார்த்து மணியைச் சொன்னதும்... அவரது நடையின் வேகம் சற்று கூடிவிட்டதைப் போலவே தெரிந்தது. எங்கே போகின்றீர்கள்..., வீட்டிலிருந்தே யாருடனாவது வாகனத்தில் வந்திருக்கலாமே என்று எனக்கும் இரண்டு வார்த்தைகள் அவருடன் கதைக்கனும் போலவே இருந்தது. வீட்டில் ஆளில்லையோ... அல்லது வாகனம்தான் இல்லையோ என்று மனம் ஆதங்கப்படும் போது, நேற்றிரவு எனது வீட்டில் வாப்பாவுக்கும் உம்மாவுக்கும் நடந்த வாக்குவாதம்தான் பளிச்சென்று ஞாபகத்திற்கு வந்தது.

'நம்மட புள்ள படிச்சு உத்தியோகத்துக்குப் போகிறாள். மகன வெளிநாட்டுக்கனுப்பி கஷ்டப்பட்டு ஊடுகட்டி வச்சிருக்கம். நகை நட்டு பொருள் பண்டமென்டு சேத்திருக்கம். நல்லவனென்டாப் போல... நல்லவன வச்சிக்கிட்டு நாக்கு வழிக்கவா போறம். வீட்டுக்கு வார மூத்த மருமகன்... ஓட ஒரு வாகனமில்ல. கூலிக்கு கடையில நிக்கிற பாடு... உங்கட மூள எங்க போச்சு, முதல்ல இந்த போட்டோவக் கொண்டு போய் குடுத்திட்டு வாங்க...!

சிரித்த படி போஸ் கொடுத்துக் கொண்டிருந்த யாரோ ஒருத்தனின் போட்டோவைப் பார்த்த வேகத்திலேயே மேசையில் வைத்து விட்டேன். உம்மா சொன்னால் மறுபேச்சுக் கிடையாது. இந்நேரம் புகைப்படம் உரிய இடம் போய்ச் சேர்ந்திருக்கும்.

மாப்பிள்ளை என்று பார்க்கத் தொடங்கும் போது ஒரு ஆணுக்கு என்னென்ன தகுதியெல்லாம் பெண் தரப்பிலிருந்து எதிர்பார்க்கப்படுகின்றது என்று இப்போதுதான் புரிகின்றது. திருமணம் பேச்சு எடுக்கும் போதெல்லாம் மனதில் பரவும் இனம் புரியாத வலியை மட்டும் என்னால் தடுக்கவே முடியவில்லை.

"க்கிரீச்"

என்னைத் தாண்டி சென்ற சைக்கிள் 'ப்ரேக்' போட்டு நிறுத்திய ஒலியில் சிந்தனை தொடராமல் கலைந்து போனது.

"என்ன மச்சான்... பயணம் புறப்பட்டாச்சா..."

"ஆ... சகீர் ...ம்பியா... புள்ள குட்டிக்கார நமக்கு இதுக்கு மேலயும் ஊரில நிக்க தாங்குமாடாப்பா. அதான் வெளிக்கிட்டிட்டன்.

பஸ் வந்திட்டோ என்னமோ... இன்டைக்கென்டு தெரிஞ்ச பயலுக ஒருத்தனையும் தெருவில காணல்ல. அது சரி உன்ட தங்கச்சி மிஸ்ரியாட பாடெப்படி...? சரிவருமா, இல்ல பிரிஞ்சிதான் பெய்த்திடுமா...?"

சைக்கிளில் வந்தவர் சொந்தக்காரர் போலும். ப்ரேக் போட்டு நிறுத்தி சைக்கிளை விட்டு இறங்கி அவரின் அவசர நடையுடனேயே தொடர்ந்தார்....

"நாசமறுவாங்க! நம்ப வச்சி ஏமாத்திப் போட்டாங்க மச்சான், நல்லா இருப்பாங்களா? அழிஞ்சிதான் போவாங்க. இவள் மிஸ்ரியாக்கிட்ட எவ்வளவு சொல்லிப் பார்த்தம். கூறுகெட்ட கழுத... காதல் கத்தரிக்காயெண்டு கூத்தாடினாள். ஆச அறுபது நாள், மோகம் முப்பது நாள், எல்லாம் முடிஞ்சி போச்சு... இல்லாதது பொல்லாததையெல்லாம் சொல்லி காழிக்கோட்ல கேஸ் போட்டிருக்கான். உதறித் தள்ளினவன்ட காலில எத்தனை தரம் விழுரது... த்தூ...! ஈனப் பொறப்புக்கள்..."

அவர் காறி உமிழ்ந்த ஆக்ரோசத்தின் வேகம் என் நெஞ்சை இறுக்குவதைப் போலிருந்தது.

"இவள் மூத்தவளுக்கு சரியான மூச்சு மச்சான் ரெண்டு நாளா கிடந்து இழுக்காள். இளையவளுக்கு காய்ச்சல். ரெண்டு பேரையும் ஆஸ்பத்திரியில காட்டுவமென்டுதான் வெளிக்கிட்ட நான். இல்லாட்டி நானே உங்கள கூட்டிட்டு போய் மெயின் ரோட்டில விட்டிட்டு வந்திருவன்..."

"பரவால்ல சகீர், நீ முதல்ல ஆஸ்பத்திரிக்குப் போய்ச் சேர். சுணங்கச் சுணங்க சனம் கூடிரும். நான் ஓட்டமும் நடையுமா போய்ச் சேர்ந்திருவன். இவள் மிஸ்ரியாட அலுவலத்தான் கொஞ்சம் யோசிச்சு செய்யப்பாரு..."

"என்னத்த மச்சான் இன்னும் யோசிக்கிற. கூழோ கஞ்சோ நம்ம புள்ள நமக்குப் பாரமில்ல. அவளுக்கெண்டொருத்தன் இல்லாமப் போக மாட்டானே. ஆனா ஒன்டு மச்சான், அநியாயம் செய்தவங்க அல்லாஹ்ட பார்வையில இருந்து தப்ப ஏலா. ஏழையிட நெஞ்சில வச்ச நெருப்புக்கு இந்த துனியாவிலேயே அவங்க கட்டாயம் பதில் சொல்லித்தான் ஆகனும்"

வேதனை கொப்பளிக்க வந்தவர் சொல்லிவிட்டுப் போய்விட்டார். கண்ணில் படர்ந்த ஈரத்தை என்னால் கட்டுப்படுத்த முடியவில்லை.

'ஏழையின் நெஞ்சில் நெருப்பு' என்ற அந்த வார்த்தையே நெருப்புத் துண்டை விழுங்கிய தகிப்பை எனக்குள் ஏற்படுத்தியது. சந்திக்கு வந்து விட்டோம். சந்தியால் மடங்கினால் வரும் தெரு நெடுகப் போய் மெயின் ரோட்டில்தான் முடிவடையும். கொஞ்சம் உள்ளுக்குப் பார்த்தால் போலத்தான் எனது ஆபீஸ். இன்னும் ஒரு மூச்சுக்கு நடக்கத்தான் வேண்டும். இப்பொழுது தெருவின் அந்தப் பக்கம் அவரும் இந்தப்பக்கம் நானுமாகி விட்டோம்.

மரம் மட்டைகள் அதிகமில்லாத தெரு. வெயிலும் சுள்ளென்று உறைக்கத் தொடங்கியது. மனசுக்குள் புழுக்கமும் சேர்ந்து வியர்வையுடன் எரிச்சலூட்டியது.

"சே மனிசனுக்கு ஆகிற வெயிலா இப்போ விழுது. எல்லாத்தையும் கொளுத்திடும் போலக் கிடக்கு..."

என்பாட்டில் ஆதங்கப்பட்டுக் கொண்டேன். வேறு என்னதான் செய்யலாம்?

"தம்பி... தம்பி... மெயின் ரோட்டிற்குத்தானே போறே... கொஞ்சம் நில்லுடா மன. நானும் வாறன். என்ன அந்த சந்தியில இறக்கிவிட்டாப் போதும்..."

படிக்கும் மாணவனைப் போலவே இருந்தான். ஆனால் சீருடை புத்தகப்பை எதுவும் இல்லை. இரண்டு மூனு கொப்பிதான் சைக்கிள் கரியரில் இருந்தது. எதுவும் ஸ்பெஷல் கிளாசுக்குப் போகிறானோ அல்லது... அதற்கப்பால் சிந்திக்க முடியவில்லை. அவர் கைதட்டி குரலெடுத்துச் சொன்னதைக் கேட்டு தன் சக்திக்கு முழு வேகமாக வந்த சைக்கிளை ஒரு காத தூரம் போய் நிறுத்தினான்.

"அப்பாடா..." வாய்விட்டே சொல்ல வேண்டும் போல் இருந்தது. ஒரு மாதிரியாக சைக்கிளொன்று கிடைத்து விட்டது. சீக்கிரமாக அவர் மெயின் ரோட்டிற்குப் போய்ச் சேர வேண்டும். அவர் எதிர்பார்த்த பஸ் கிடைக்க வேண்டும்... மளமளவென்று என் மனம் எண்ணங்களை அடுக்கியது.

சைக்கிலை நிறுத்தி ஒற்றைக் காலை தரையில் ஊன்றி தலையை பின்னால் திருப்பி அவரை எதிர்பார்த்து நின்றவன்... சில நொடிகள்தான் மண்டையில் உறைத்த வெயிலோ, போகும் வேலையின் அவசரமோ ₁₀று காலால் பெடலை சுழற்றியவன் அதே வேகத்தில் கிளம்பி விட்டான். புயல் வேகமென்று சொல்வார்களே. அப்படியொரு வேகம். ஓட்டமும் நடையுமாக சைக்கிளை நோக்கிச்

சென்றவருக்கு ஏமாற்றமென்றால், எனக்கு செருப்பால் அடித்ததைப் போலவே இருந்தது.

என்ன காலக்கஷ்டம்தான் இது... ம்., காலம் என்ன செய்யும். அதுபாட்டில் இயங்கிக்கொண்டிருக்கின்றது. மனிதன் செய்யும் நியாய அநியாயங்கள்தான் அவனுக்குப் பின்னால் துரத்திக் கொண்டு இருக்கிறதோ என்னவோ... இவர் செய்த என்ன அநியாயத்திற்கு இன்று இப்படி அலையிறாரோ? யா அல்லாஹ் அநியாயம் செய்தவர்கள் மறந்தாலும் பாதிக்கப்பட்டவர்களுக்கு அதனோட வலி காலம் பூரா இருக்கத்தானே செய்யும்.

ஒரு ஐந்து வருசங்களுக்கு முன்னால் எங்கள் வீட்டு வாசலில் நைந்து போன குரலில் அந்தப் பெரியவர் சொல்லி விட்டுப் போன வார்த்தைகள்...

“அநியாயம் செய்து போட்டீங்க... எம் பொண்ணுக்கு அநியாயம் செய்து போட்டீங்க. இதுவே உங்க பொண்ணா இருந்தா நீங்க தாங்குவீங்களா? குழந்தையோட வாழாவெட்டியா நின்ட மகள கூட்டிக்கிட்டு இந்த ஊருக்கு ஆறுதல் தேடித்தான் வந்தம். வாழ்வுதாறேன்... வாழ்வுதாறேன்னு பழகின உங்க மகன புடிச்சி மனச மாத்தி வெளிநாட்டுக்கு அனுப்பிட்டீங்க இல்ல... மிச்சம் நல்லம். நாங்க போறம்... இந்த ஊர விட்டே போறம். என் பொண்னோட கண்ணீருக்கும் எங்க குடும்பத்தோட வேதனைக்கும் சத்தியமா நீங்க பதில் சொல்லித்தான் ஆகனும். எங்களுக்கு ஒரே நீதிபதி அந்த அல்லாஹ்தான்”

விம்மலும் வெப்பிசாரமுமாக அன்று அப்படிச் சொல்லிவிட்டுப் போனவர் ஒரு ரிட்டையர் டீச்சர். கொஞ்ச நாளில் அவர்கள் அந்த ஊரைவிட்டே போய்விட்டார்களென்று அறிந்தோம். வாழ்க்கையில் அதிகம் கரடு முரடுகளை சந்திக்காத வயதாகையால் என்னால் அந்த சம்பவத்தை... அந்த வார்த்தைகளை மறக்கவே முடியவில்லை. எனக்கு மாப்பிள்ளை என்று பார்க்கத் தொடங்கி எவ்வளவு நாளாகிவிட்டது. எதுவுமே சரிவர அமையவில்லை. ஒவ்வொரு தடவை ஏமாறும் போதும் முகம் தெரியாத அந்தப் பெண்ணின் கண்ணீர்தான் ஞாபகத்திற்கு வரும். நிஜங்களால் மட்டுமல்ல நினைவுகளால் கூட பெண்கள்தான் அதிகம் வதைபடுகிறார்கள் என்பது எனது அனுபவத்தில் புரிந்தது.

“ம்... ஹும்...”

நீண்ட பெருமூச்சுடன் நிமிர்ந்து பார்க்கிறேன் என்னை விட்டும் அந்த மனிதர் முன்னே சென்றுவிட்டார். இப்போது அவர் நடையில் வேகமோ பதற்றமோ அவசரமோ இல்லை. எது நடந்தாலும் சரிதான் என்பது போல நிதானமாகவே நடந்தார்.

அதிகளவான எதிர்பார்ப்பும். அடுக்கடுக்கான ஏமாற்றங்களும் சலிப்பை ஏற்படுத்திவிட்டதோ... அல்லது மெயின் ரோட்டை நெருங்கிவிட்டோம்தானே என்ற தெம்பில் போகிறாரோ...? எனது ஆராய்ச்சியில் தெளிவான ஒரு முடிவிற்குள் வரமுடியவில்லை. காரணம்... எனது ஆபீஸ் கேற்றடிக்கு நானும் வந்துவிட்டேன். அப்போதுதான் நான் நிதானித்துப் பார்க்கிறேன். என்றுமில்லாதவாறு அவர் வேகத்துடன் நானும் நடந்து வந்தது புரிகின்றது.

“அஸ்ஸலாமு அலைக்கும்..., குட்மோர்னிங்...” என்று புன்னகைத்த முகங்களுக்கு தலையசைத்து பதில் சொல்லிவிட்டு நேரேயே எனது பார்வையை செலுத்துகின்றேன். சந்திக்குப் போய்ச் சேர்ந்த அவர் பஸ் போய்விட்டதோ, அல்லது இன்னும் வரவில்லையோ, என் மனம் நிஜமான ஆதங்கத்துடன் கவலைப்பட்டுக் கொள்கிறது. ஆபீஸ் மேசையில் காத்திருக்கும் வேலைகள் ஞாகத்திற்கு வர குடையை மடக்கி ஹேன்ட் பேக்கை தோளை விட்டு இறுக்கி எடுத்துக் கொண்டு உள்ளே செல்வதற்கு முதல், மறுபடியும் நிமிர்ந்து பார்க்கின்றேன். பஸ்ஸை எதிர்பார்த்து அப்போதும் அவர் அங்கேதான் நின்று கொண்டிருந்தார்.

✦ ✦ ✦

*பி.கு:*

| | |
|---|---|
| *அபாயா, ஹிஜாப்* | *: முஸ்லிம் பெண்கள் அணியும் ஆடை* |
| *துனியா* | *: உலகம்* |
| *காழிக்கோர்ட்* | *: முஸ்லிம்களின் திருமணப் பிரச்சினைகள் பற்றி தீர்க்கும் நீதிமன்றம்* |

# 7

# தலை நோன்பும் புதிய பயணமும்

**கை**கள் லாவகமாக ஸ்டியரிங்கைப் பிடித்திருக்க கண்களில் நம்பிக்கையும், இதழ்களுக்கிடையில் கம்பீரமான புன்சிரிப்புமாக தன் பாதையில் தெளிவாக வாகனத்தை ஓட்டிச் சென்றாள் மிஸ்ரியா. எதிர்பட்ட மஞ்சள் கடவையில் சிக்னலுக்காக காரை நிறுத்தி காரின் யன்னல் கண்ணாடியை இறக்கி விட்டு வெளியே பார்வையைச் செலுத்தினாள்.

காலை நேரத்து பரபரப்பில் சனங்கள் அங்குமிங்குமாக நகர்ந்து கொண்டிருக்க வெள்ளைச் சீருடையில் தேவதைகள் போல் சென்று கொண்டிருந்த பருவ வயது பள்ளி மாணவிகளைக் கண்டதும் குமிழ் குமிழாக அவளுள் எழுந்த ஏக்க அலை பெருமூச்சாக வெளிப்பட்டது.

“ம்ஹூம்...”

நீண்ட பெருமூச்சுடன் கண்களை மூடி இருக்கையில் சாய்ந்தவள் ஒரு கணம் தன்னையே மறந்து போனாள்.

“மம்மி...! சிக்னல் ஓகேவாம் போகலாம்...” பின்னாலிருந்த இருண்ட குட்டீஸூம் அவள் கழுத்தை தாண்டி வெளியே தலையை நீட்டி கத்தியதில் திடுக்கிட்டு நிமிர்ந்தவள்...

“ஸாரிடா... சீக்கிரமா போயிடலாம் என்ன...” மன்னிப்புக் கேட்கும் தோரணையுடன் வாகனத்தை ஸ்ரார்ட் பண்ணி கொஞ்சம் வேகமாகச் செலுத்தத் தொடங்கினாள்.

நேர ஒழுங்கு என்பது அவள் குழந்தைகளுக்கு சொல்லிக் கொடுக்கும் போதனைகளில் ஒன்று. அதைத்தானே தவறவிட்டு மனச்சாட்சி. முன் தலை குனிய அவள் விரும்ப வில்லை. மாடிக்கட்டிடங்களுடன் பெயர் பதிந்து நின்ற அந்தப் பாடசாலை முன் காரை நிறுத்தி குழந்தைகளை கையசைத்து அனுப்பி வைத்தவளுக்கு நெஞ்சம் நிறைந்து போனது.

"அதீக்... அகீல்..." இரட்டைக் குழந்தைகள் போல் எவ்வளவு ஸ்மார்ட்டாக அழகாக போகின்றார்கள். மூத்தவள் ஐந்தாம் ஆண்டிலும் இளையவன் மூன்றாம் ஆண்டிலும் கல்வி கற்றாலும், இளையவன் ஆள் கொஞ்சம் வளர்த்தியாகையால் மூத்தவனின் உயரத்திற்கே இருக்க, எல்லோரும் அவர்களை இரட்டைக் குழந்தைகள் என்றே எண்ணினார்கள்.

பிள்ளைகள் பார்வையை விட்டு மறைந்ததும் மறுபடியும் தன் பயணத்தைத் தொடர்ந்தாள் மிஸ்ரியா. இந்தப் பாதையும் பயணமும் மிஸ்ரியாவைப் பொறுத்தவரை மிகவும் புதியது. காரின் வேகத்துக்கு கடந்து செல்லும் காட்சிகளைப் போல கடந்து சென்ற சில நினைவுகளும் அவள் மனதின் முன் நிழலாடத் தொடங்கின.

மிஸ்ரியாவின் தந்தையும் தந்தையின் சகோதரியும் ஒரு பணக்கார குடும்பத்தின் வாரிசுகள். ஏகப்பட்ட சொத்துக்களை இரண்டு பேரும் திறம்பட நிர்வாகம் பண்ணிக்கொண்டிருந்த வேளை, மிஸ்ரியா தன்னை அறியாத வயதிலேயே தன் தந்தையையும் தாயையும் ஒரு சேரப் பறிகொடுத்துவிட்டாள். அதன்பிறகு எல்லாமே அவளுக்கு மாமிதான். அந்த வீட்டின் மகாராணியாகவே வளர்ந்தாள். ஏகத்துக்கும் சொத்துக்களை மாமியே நிர்வகிக்க வேண்டியிருந்ததால் மாமியின் அண்மையோ, உறவுகளின் நெருக்கமோ அவளுக்குக் கிடைக்கவில்லை.

மாமியின் ஒரு மகன் நௌஷாத். மிஸ்ரியாவை விட ஐந்து வயது பெரியவன். அமைதியான சுபாவம். ஒரே வீட்டில் வசித்தாலும் நேரில் சந்திக்கும் போது ஒரு ஹலோ, ஒரு புன்சிரிப்பு அவ்வளவுதான். மிஸ்ரியாவுக்குப் பிடித்த இடம் பள்ளிக்கூடம் ஒன்றுதான். அங்கேதான் வாழ்வின் சந்தோசமான தருணங்களையெல்லாம் கண்டாள். சக மாணவிகள் ஆசிரியர்கள் எல்லோருடனும் நட்புடன் கைகோர்த்து ஒரு தேவயைப் போலவே அங்கே உலா வந்தாள். உயர்தரப் பரீட்சை எழுதிவிட்டு பெறுபேறுகள் வரும் வரை இடைப்பட்ட காலத்தில் நண்பிகள் எல்லோரும் கணினி வகுப்பில்தான் சங்கமமானார்கள்.

"சாதிக்..." கணினி வகுப்பிற்குரிய அழகான இளமையான ஆசிரியர். சேர்-மாணவியென்ற உறவு நாளடைவில் மாறியது. சாதிக்கின் கனிவும், அன்பும் பாசத்திற்காகத் தவித்த மிஸ்ரியாவின் நெஞ்சில் பூக்களைத் தூவியது. மென்மையான் அவள் உணர்வுகள் சாதிக் எனும் கொழு கொம்பில் பற்றிப் படர்ந்தது. வாழ்க்கையிலுள்ள ஆனந்தங்களையெல்லாம் அடைந்து விட்டதைப் போன்ற நிறைவில் தன்னையே மறந்தாள்.

சடுதியான ஒரு திருப்பத்தில் எல்லாவற்றையுமே இழந்து தவிக்கும் ஓர் அகதியைப் போல் தன் நிலைமை ஆகுமென்று அவள் கனவில் கூட நினைத்திருக்கவில்லை.

ஒரு நாள் இரவு அவளை அழைத்து அருகில் இருத்திய மாமி அவளுக்கும் நௌஸாத்துக்கும் திருமண ஏற்பாடுகள் செய்யப்போவதாகவும் அப்படி செய்வதற்கான நியாயங்களையும் எடுத்துச் சொன்னபோது தனது மறுப்பைத் தெரிவிக்க முடியாமல் மிஸ்ரியா தவித்துப் போனாள். அவளுக்கிருந்த ஒரே நம்பிக்கை சாதிக்தான். ரெலிபோன் எடுத்து ஏற்பட்டுள்ள அனைத்து நிலைமைகளையும் கடகடவென சொல்லி முடித்தாள்.

"இரண்டொரு நாள் பொறு மஸ்ரியா, யோசிச்சு ஒரு முடிவெடுப்போம்..." என்று சொன்ன சாதிக்கை நம்பிக் காத்திருந்தாள்.

அவனில்லாத ஒரு வாழ்க்கையை அவளால் நினைத்துக்கூடப் பார்க்க முடியவில்லை. சொத்து, சுகம், சொந்தபந்தம் எதுவுமே வேண்டாம். நிம்மதி தரக்கூடிய அந்தக் காதல் வாழ்க்கை ஒன்றே போதுமென்று முடிவெடுத்துக் காத்திருந்தாள். ஆனால் சந்தர்ப்ப சூழ்நிலைக்கு பலியாகாமல் காதல் வாழ்வென்பதெல்லாம் நடைமுறைக்குச் சாத்தியமாகாத விடயம் என்பதை சாதிக்கின் பதிலால் தெரிந்து கொண்ட போது, உலகத்தில் எதைத்தான் நம்புவதென்ற விரக்தியே அவளுள் மேலோங்கியது.

"மிஸ்ரியா! ரெண்டு நாளுமிருந்து நல்லா யோசித்துப் பார்த்தேன். நாம சேர்தற்குரிய எந்த சந்தர்ப்புமே இல்லேண்ணுதான் தோணுது. என்னோடது சாதாரண குடும்பமென்று உனக்குத் தெரியும். ரெண்டு தங்கச்சி, ஒரு ராத்தான்னு மூனு பேர் கலியாணக் கனவுகளோட காத்திருக்காங்க. நான் வெளிநாட்டுக்குப் போய் இவங்களையெல்லாம் கரைசேர்த்து வரும்வரைக்கும் காத்திருக்க முடியுமா? உங்க மாமியோட மோதக் கூடியளவு என்கிட்ட என்ன பலமிருக்கு. வலிக்குதுதான் மிஸ்ரியா. எனக்கும் வலிக்குதுதான். உன்னைப்போல ஒரு நல்லவளோட வாழக்கிடைக்கல்லேங்கிற வலி காலம் பூரா என் மனசில இருக்கும். நாம் சேரல்லேன்னா நம்ம ரெண்டு பேரோட மனசும்தான் வலிக்கும் ஆனா, நாம சேர்ந்தா பல பேரோட சாபம்தான் நமக்கு பரிசாகக் கிடைக்கும். இதையெல்லாம் யோசிக்காம ஏன் என்ன நேசிச்சீங்கென்னு நீ கேட்டா, அதுக்குப் பதில் சொல்ல எனக்குக்கூடத் தெரியல்ல மிஸ்ரியா..." மேலும் பேச முடியாது மெதுவாக அவன் விசும்பினான்.

உணர்ச்சிகள் ஆரம்பித்து வைக்க அறிவு வந்து முடித்து வைப்பதுதான் காதல்...' என்று படித்தவரிகள் எவ்வளவு ஆழமானது என்பதைப் புரிந்து கொண்டாள். அழகாக இருந்தான்.

அழகாக நேசித்தான். எல்லாவற்றையும் விட எவ்வளவு சுலபமாக விடைபெற்றுக் கொண்டு போய்விட்டான்.

"க்ரீச்"

காரின் குறுக்கே பாய்ந்து ஆட்டுக்குட்டி ஒன்றிற்காக சடுதியாக ப்ரேக் போட்டவள், தன்னை மீறி கலங்கிய கண்களையும் துடைத்துக் கொண்டாள். நிறுத்திய இடத்தை நோட்டமிட்டவளுக்கு மனதில் சிறு சலனம்...

"பாஹிமாவை சந்திக்கப் போனால் என்ன..." எண்ணிய வேகத்திலேயே காரை பின்னாலெடுத்து உள்நோக்கி திருப்பிய ஒரு வளைவினூடாக செலுத்தத் தொடங்கினாள்.

பாஹிமா... அவள் குடும்பத்திற்கு மட்டுமல்ல, அவளுக்கும் நெருங்கிய தோழி, சிறந்த டொக்டர், அதைவிடச் சிறந்த சமூக சேவகி... மிஸ்ரியாவின் இன்றைய பயணத்துக்கு பாஹிமாதான் முதல் காரணம். கடற்கரையை அண்மித்தால் போல் அழகான, அமைதியான சூழலில் அமைந்திருந்த டிஸ்பென்சரி முன் காரை நிறுத்தியவள், இறங்கி உள்ளே சென்றாள்.

எப்போதும் நோயாளிகளை ஒரு பார்வை பார்த்து விட்டுத்தான் பாஹிமாவை சென்று சந்திப்பாள். அன்றும் வழமைபோல் நடந்தவளுக்கு ஒரு அறையில் கேட்ட தீவிரமான வலியின் முனகல் சத்தம்..., ஈரமான நெஞ்சுடன் உள்ளே நுழைய முற்பட்டவளை கட்டிலில் சாய்ந்திருந்த பெண் உருவத்தைத் தாண்டி பக்கவாட்டில் தெரிந்த ஆணிண் முகம் தடுத்து நிறுத்த சமாளித்தபடியே சட்டென்று திரும்பியவள் நேரே காரில் போய் உட்கார்ந்து கொண்டாள். "நௌஸாத்... நௌஸாத்... நௌஸாத்..."

மனம் பதறித் துடித்தது. அவளால் தாள முடியவில்லை. வேகமாக காரை ஸ்டார்ட் பண்ணியவள் அதே வேகத்துடன் செலுத்தத் தொடங்கினாள். உதடு கடித்து வெடித்து வந்த விம்மலை அடக்க முயன்றும் தோற்றுப் போனாள். நினைவுகள் காற்றாற்று வெள்ளம் போல் கரை புரண்டது.

"உம்மா நீங்க தெரிவு செய்ததைத்தான் சாப்பிட்டேன். நீங்க தெரிவு செய்ததைத்தான் உடுத்தினேன். நீங்க தெரிவு செய்ததைத்தான் படிச்சேன். இப்போ... இப்போவும் நீங்க செலக்ட்

பண்ணின பொண்ணைத்தான் கட்டிக்கனுமெண்டா... எனக்கென்று எந்த விருப்பு வெறுப்புமே இல்லையா...! எனக்கென்று தனி மனசென்று ஒன்று இருக்கும்மா, அதை ஏன் நீங்க புரிஞ்சிக்க மாட்டேன்கிறீங்க..."

திருமண ஏற்பாடுகள் நடந்து கொண்டிருக்கும் பொழுது, தூக்கம் வராம, தவித்த ஓர் இரவில் காற்றாடலில் நிற்கலாம் என வெளியில் வந்த மிஸ்ரியாவின் காதில் விழுந்த நௌசாத்தின் ஆற்றாமையான குரல்... மாமிக்கு மட்டுமல்ல, மாமியின் முடிவுகளுக்கும் தனிக்கம்பீரமுண்டு. என்றைக்குமே அவர் முடிவுகள் தோற்றுப் போவதற்கு உடன்பட மாட்டார். திருமணம் நடந்தது... ஏமாந்து போன இதயத்துடன் மிஸ்ரியாவும் ஏற்றுக் கொள்ள முடியாத இதயத்துடன் நௌஸாத்தும் இல்லற பந்தத்தில் இணைந்தார்கள்.

காலம் நகர்ந்தது. தேவைகள் வாழ்க்கையை வழிநடத்திக் கொண்டிருந்தன. அதீக், அகீல் என்ற இரு ஆண் வாரிசுகளுக்கு மிஸ்ரியா தாயானாள். எல்லாவற்றையும் விட அந்த தாய்மைப் பதவி உண்மையானதாகவும் உள்ளத்தை அமைதிப்படுத்துவதாகவும் உணர்ந்தாள். அதற்காகவே வாழ்ந்தாள்.

சில வருட நகர்வின் பின் ஒரு நாள்...! அந்த நாள் ஏன் விடிந்ததென்று இன்று கூட மிஸ்ரியா நொந்து கொள்வாள். குழந்தைகளையும் அழைத்துக் கொண்டு சொப்பிங் சென்றவள் தேவைப்பட்டதையெல்லாம் வேண்டி எடுத்துக் கொண்டு வீடு திரும்பிய போது, ஆச்சரியம்! அத்தனை நேரத்துடன் மாமி, மாமா, நௌஸாத் மூவரும் ஒன்றாக ஹோலில் அமர்ந்திருந்தனர். மூவர் முகத்திலும் தெரிந்த அசாதாரண இறுக்கம் சங்கடத்தைத் தர அவசரமாக மாடி ஏறி குழந்தைகளைத் தூங்கப் பண்ணிவிட்டு படியிறங்கியவள், ஹோலில் கேட்ட கதைப்பேச்சின் கருப்பொருளால் கதிகலங்கி படியிலேயே சிலைபோல நின்றுவிட்டாள்.

"மிஸ்ரியா உனக்கு மனைவி மட்டும்தான், ஆனா என் உயிரே அவள்தான். நீ அவளுக்குப் பண்ணியிருக்கிற துரோகத்தை கடைசி வரைக்கும் நான் மன்னிக்க மாட்டேன். நான் கேள்விப்தெல்லாம் பொய்யாக இருக்கக் கூடாதாங்கிற நப்பாசையிலதான் மறுபடியும் மறுபடியும் உன்னக் கேட்டிருக்கன். இல்ல... எல்லாமே உண்மைதாங்கிற பட்சத்தில இந்த வீட்டில இந்த சொத்தில ஏன்? தாய் என்கிற என் உறவில கூட இனிமே துளி கூட உனக்கு உரிமையில்ல"

அன்றுதான் கர்ஜித்த மாமியின் குரலுக்கு இணையாக நௌஸாத்தின் குரலும் ஓங்கியது.

“வேணாம்... எதுவுமே வேணாம்... இத்தின வயசுக்குப் பிறகு நான் எனக்காக பண்ணினதெல்லாம் நூர்ஜஹானைக் காதலிச்சதும் கலியாணம் கட்டிக்கிட்டதும்தான். அத யாருக்காகவும் எதுக்காகவும் இழக்க நான் தயாரில்ல. மிஸ்ரியா என்ன கணவனா மதிச்சா அவளுக்கும் உறவா இருப்பேன். இல்லேன்னா...! மறுபடியும் சொல்றன் யாருக்காகவும் எதுக்காவும் நூர்ஜஹானை இழக்க நான் ரெடியில்ல...”

தீர்க்கமாகச் சொன்ன நௌஸாத் போய்விட்டான். போயே விட்டான்.

வேதனையிலும் வெஞ்சத்திலும் தாய் எடுத்த அதிரடி நடவடிக்கைகள் நௌஸாத்தை அந்தப்பக்கம் மறுபடியும் வரவிடவில்லை. அதிலும் உச்சக்கட்டமாக மிஸ்ரியா முன் நீட்டப்பட்ட விவாகரத்து நோட்டீஸ்...! விழிமூடி அழுது கிடந்தாலும் அவள் உணர்வுகள் விழித்து வெகுநாளாகிவிட்டன. என்பதை பாவம் மாமி அப்போது அறியவில்லை. விவாகரத்து நோட்டீஸை கைநீட்டி வாங்கியவள் சுக்கல் சுக்கலாக கிழித்து வீசினாள். அதிர்ந்த மாமியிடம் அமைதியாகச் சொன்னாள்.

“நீங்க நினைக்கிறதெல்லாம் நடக்கணுமென்று போராடுகிறது நியாயம்தான். ஆனா, அது மத்தவங்களோட சம்பந்தப்பட்டதாக இருக்கக் கூடாது. மத்தவங்கெண்டா நானும் நௌசாத்தும் கூட மத்தவங்கதான்; விவாகரத்து வேண்டி மறுமணம் பண்ணி... இன்னும் ஏன் இப்படியெல்லாம் ஏமாறனுமென்னு எதிர்பார்க்கிறீங்க. போதும், எல்லாமே போதும். உங்களுக்கு மருமகளா வாழக்கிடைக்கல்ல. மகளா வாழப் போறன்... தயவு செய்து என்னைத் தடுக்காதீங்க”

மாமியின் கண்கள் கலங்கியதை அன்றுதான் மிஸ்ரியா நேருக்கு நேர் கண்டாள். அந்தக் கண்ணீரையே தனக்கு கிடைத்த வாழ்த்தாக நினைத்தாள்!

ரமழான் மாதம் நோன்பு பிடிப்பதற்குரிய நாட்களை மக்கள் எண்ணிக் கொண்டிருக்கையில் அவள் மனதிற்குள் முளைவிட்ட “சுயதொழிலும் முன்னேற்றத்திற்குமான பெண்கள் அமைப்பை வேரூன்ற வைத்தாள். இரவு-பகல் பாராது அதற்காக உழைத்தாள். மாமா, மாமி, பாஹிமா, அவளது கணவரென பலர் அவளுக்கு உதவினார்கள். உற்சாகப் படுத்தினார்கள்.

இரண்டு வருடங்களின் முன் தலை நோன்பை எதிர்பார்த்து நின்ற இது போன்ற ஒரு நாளில்தான் இருபது பெண்களுடன் சு.மு.பெ.

அமைப்பை ஆரம்பித்தாள். பசிகாத்து வணக்கம் போற்றி உணர்வுகளைச் செப்பனிட்ட அந்த நோன்பு நாட்களில் அமைப்பை வளர்க்க அவர்கள் செய்த ஒவ்வொரு செயலும் வணக்கம் போன்றே ஆனது. அவளது மாற்றத்திற்கும், முன்னேற்றத்திற்கும் காரணமான நௌஸாத்தையும் நூர்ஜஹானையும்தான் இன்று பாஹிமாவின் டிஸ்பென்சரியில் வைத்துக்கண்டாள். பல முறை பல இடங்களில் அவர்களைத் தற்செயலாக சந்தித்து இருந்தாலும் இன்று நிறைமாசக் கர்ப்பிணியாக அவளையும் அவளுக்கு அன்பாகப் பணிவிடை செய்யும் புருஷனாக நௌஸாத்தையும் கண்ட போது...! எழுத்தில் வடிக்க முடியாத வேதனை அவளுள் ஏற்பட்டதென்னவோ உண்மைதான்.

வாயில் காப்போன் கேற்றை திறந்து விட, காரை உள்ளே எடுத்து பார்க் பண்ணி விட்டு ஓபீஸில் நுழைந்தவளுக்கு ஏராளமான ஆச்சரியம். மாமா, மாமியுடன் அறிமுகமான முகங்கள் பல, மலர்க்கொத்துக்கள் தந்து கைகுலுக்கி வாழ்த்துச் சொன்ன போது தன் தோல்விகளின் பின்னால் கிடைத்த வெற்றியின் நிறைவில் திருப்தி கண்டாள். எல்லோரையும் உபசரித்து அனுப்பிவிட்டு வேலைத் தளத்திற்குள் விரைந்தாள். ஆடைகளை உற்பத்தி செய்வதற்குரிய நாலாவிதமான வேலைகள்...

இன்று இரண்டு வருடங்களின் நிறைவில் ஐம்பத்தொரு பெண்களுடன் இயங்கிக் கொண்டிருந்தது. எல்லோருமே ஏதோ ஒரு வகையில் பாதிக்கப்பட்டவர்கள். தொழில் பயிற்சி அளித்து தொழிலும் கொடுத்து நிறைய வருமானம் பெற்று அதைவிட நிறைவான கூலியும் கொடுத்தாள். நாட்டின் பல பாகங்களுக்கும் அவரவர் உழைப்பின் மூலமும் முன்னேற்றத்தின் மூலமும்தான் பெண்கள் தன்னம்பிக்கையையும் தைரியத்தையும் வளர்த்துக் கொள்ள முடியுமென்பது மிஸ்ரியாவின் அசைக்க முடியாத நம்பிக்கை. எல்லாவற்றையும் பார்வையிட்ட பின் வந்தமர்ந்தவள் தன் மற்றுமொரு எண்ணத்தையும் செயல் வடிவமாக்கத் தொடங்கினாள்.

பியூன் ஒவ்வொரு பெயராக அழைக்க வந்தவர்கள் கையில் தலை நோன்பிற்குரிய விஷேட கொடுப்பணவுத் தொகையைக் கொடுத்தாள். அவர்களின் முகங்களில் தோன்றிய புண்ணகையும் சந்தோசமும் பல வெற்றிகளின் அழைப்பிற்குரிய வழிவகையை அவளுக்குச் சொல்லாமல் சொல்லிச் சென்றது.

# 8 கண்ணுக்குள் சுவர்க்கம்

"நுஸ்ரத் எதுக்காக நீ இவ்வளவு ஆத்திரப்படறே. நம்ம மகள் ஷிப்னா இயல்பிலேயே கெட்டிக்காரி. இப்ப ஊரிலேயே நல்ல ரிசல்ஸ் வேற எடுத்திருக்கிறாள். அவளுக்கு படிச்சிக் கொடுத்த டீச்சர்ஸ்மாரெல்லாம் என்னைச் சந்திக்கும் போது ஷிப்னாவை தொடர்ந்து படிக்க வைங்க..."

ஆசிர் ஹாஜியார் முடிக்கவில்லை. புயலென சீறிப்பாய்ந்தாள் நுஸ்ரத்.

"ஆமாமா, எல்லோரும் எல்லாம் சொல்லுவாங்க நமக்கெங்க புத்தி போகும். உள்ளது ஒரே புள்ள, படிச்சி உத்தியோகம் பார்த்து பொழப்பு நடத்த வேண்டிய அவசியம் அவளுக்கில்ல. யார் என்ன சொன்னாலும் சரி. அவள் படிச்சது போதும். என்னோட நாநாட மகன் அவள கட்டிக்கிறதுக்காகவே காத்திட்டிருக்கான். அதற்குரிய ஏற்பாடுகளைப் பண்ணுங்க போதும்"

படபடவெனப் பொரிந்தவள் அவ்வளவுதான் என்பது போல மறு பேச்சுக்கு இடம் வைக்காமல் சடாரென எழுந்து உள்ளே சென்று விட்டாள். வெளியே வந்த ஆசிர் ஹாஜியார் களங்கிய கண்களுடன் பரிதாபகமாக நின்ற மகளை பார்க்க சக்தியற்று தோளில் கிடந்த சால்வையால் முகத்தைத் துடைத்தபடியே வெளியேறினார்.

ஷிப்னாவால் அழுகையை அடக்க முடியவில்லை. தைரியமான தெளிவான பெண்தான் ஷிப்னா. உம்மாவின் அட்டகாசத்தை அறியாமையின் வெளிப்பாடென்றே இத்தனை நாளும் கருதிவந்தாள். ஆனால் இன்று அத்தனையும் சுக்கு நூறாகிவிட்டது. பத்துப் பாடத்திலும் அதிதிறமைச் சித்திபெற்ற மகளை மேலே படிக்க வைக்க கூடாது. என்று கண்டிப்பு காட்டுவது முட்டாள்தனமாக இல்லை, இல்லவே இல்லை. தான் நினைத்ததை சாதிக்க வேண்டும் என்ற பிடிவாதம்;

இதில் யார் மனம் வெந்தாலும் நொந்தாலும் அதைப்பற்றி உம்மாவுக்கு கவலையில்லை. நினைக்க நினைக்க ஷிப்னாவுக்கு வேதனைதான் கூடியது. அழுது கொண்டே கட்டிலில் சரிந்தவள்

அப்படியே தூங்கியும் போனாள். திடீரென முன் அறையில் கதைக்கும் சத்தத்தில் எழுந்தவள் திடுக்கிட்டுப் போனாள்.

"யா அல்லாஹ்! முபாறக் மாமா வந்திருக்கின்றார். என்னைப் படிக்க வைக்காமல் தடுப்பதற்காக இன்னும் என்னவெல்லாம் உம்மா செய்வார்களோ!"

மனதுக்குள் மெல்ல முனகியவளின் காதுகளில் மாமா கூறிக்கொண்டிருக்கும் நியாயங்களும் விழத்தான் செய்தது.

"இதப்பாருங்க மச்சான் எங்கட குடும்பத்துல பொம்புள புள்ளைங்கள அதிகம் படிக்க வைக்கிறது எல்லாம் கிடையாது. காலாகாலத்தில கலியாணம் கட்டி குடும்பத்த நடாத்தினாப் போதும். நீங்க கூடத்தான் பேருக்குப் பின்னால போட்டுக்கிறத்துக்கு எவ்வளவு பட்டம் வாங்கினீங்க. கடைசியில் என்னாச்சு. எங்க வாப்பாட சொத்துக்களுக்கெல்லாம் உரிமையாளரா ஆகினீங்க. ஊருக்குள்ளேயும் பெரிய மனுசனா ஆகிட்டீங்க. மகள படிக்க வைக்கனும்னு நீங்களே ஒத்தக் கால்ல நின்னா ஷிப்னாவ நாங்க எப்படி சமாதானப்படுத்தலாம் சொல்லுங்க பார்ப்பம்"

"கேளுங்க நாநா நல்லாக் கேளுங்க. அவள் ஒழுங்கா சாப்பிட்டுத் தூங்கி எத்தனை நாளாகுது தெரியுமா? போதாக்குறைக்கு என்னோட முகம் கொடுத்துப் பேசவும் மாட்டேங்கிறாள்"

தங்கை நுஸ்ரத்தின் அழுகை முபாரக்கை மேலும் தூண்டிவிட, முபாரக்கின் குரல் இன்னும் உயர்கின்றது.

"வேணுமென்டா ஒன்னு பண்ணலாம்தானே மச்சான். ஊருக்கெல்லாம் தெரியிற மாதிரித்தான் நீங்க இன்னொரு குடும்பமும் வச்சு நடத்துறீங்கதானே. அதிலேயும் ஆணும் இருக்கு. பொண்ணும் இருக்கு. அவங்கள நல்லாப் படிக்கவைங்க. நீங்க ஆசப்பட்டமாதிரியெல்லாம் படிக்கவைங்க. என் தங்கச்சி தன் பொண்ணுக்கு கலியாணம் கட்டிக் கொடுக்கணும்னுதான் முடிவெடுத்திருக்கா. தயவு செய்து அந்த முடிவிற்கு குறுக்க நின்று அவள அழ வைக்காதீங்க"

முபாரக் மாமாவின் குதர்க்கமான பேச்சைக் கேட்ட ஷிப்னா துடித்துப் போனாள். ஷிப்னாவால் மனசை ஒருநிலைப்படுத்த முடியவில்லை. வாப்பாவின் கதை ஷிப்னாவுக்கும் ஓரளவு தெரியும்.

மிகவும் எளிமையான குடும்பத்தில் பிறந்தவர்தான் ஆசிர். பலதரப்பட்ட குடும்பக் கஷ்டம். எல்லாவற்றையும் பொறுத்துக் கொண்டு படித்தார். கிடைக்கின்ற தொழிலைச் செய்து கொண்டு கூடப்

பிறந்தவர்களையும் கவனித்துக் கொண்டு படிப்பதற்கு மட்டும் சோரவேயில்லை. ஆசிரின் நல்ல பழக்க வழக்கங்கங்களும் படிக்கும் திறமையும்தான் ஊரிலேயே பெரும் வியாபாரியான மக்பூல் ஹாஜியாரைக் கவர்ந்தது. பணமிருந்தாலும் மக்பூல் ஹாஜியார் மிகவும் சாலிஹான மனிதர். ஆசிரை மணமகனாகத் தேர்ந்தெடுத்ததோடு ஆசிரின் குடும்ப பொறுப்புக்கள் அனைத்திலும் பங்கெடுத்தார். தன் கண்ணுடனேயெ வியாபாரம் முழுவதையும் மருமகனிடம் ஒப்படைத்துவிட்டு ஓய்வெடுத்துக் கொண்டார்.

படிப்படியாக முன்னேறிய ஆசிர் ஹாஜியாராகி வியாபாரத்திலும் தன் ஆற்றலைப் பயன்படுத்தி ஆழமாகக் காலூன்றிய வேளையில்தான் அவர் வாழ்க்கையில் அப்படியொரு சம்பவம் நடந்தேறியது.

பிரச்சினைகளின் காரணமாக ஊரிற்கு அகதிகளாக வந்த பல குடும்பங்களை அவர் ஆதரித்தார். அதில் நஸீராவின் குடும்பமும் ஒன்று. தாயும் மகளுமாக தமது கஷ்டங்களையெல்லாம் அவரிடம் சொல்லி அழுதபோது ஏழ்மையின் நிழலில் வளர்ந்த ஆசிர் ஹாஜியார் ஆண் துணையற்ற அக்குடும்பத்தின் நிலைமைகளைப் புரிந்து கொண்டார். இருக்க இடம் கொடுத்து அடிக்கடி போய் பார்த்து தன்னால் இயன்ற உதவிகளையெல்லாம் செய்து கொடுத்தார்.

இப்படியிருக்கும் போதுதான் ஒரு நாள் நஸீராவின் உம்மாவிற்கு நெஞ்சுவலி ஏற்பட்டு துடித்துக் கொண்டிருக்கிறாள். என்ற செய்தியைக் கேள்விப்பட்டுப் பார்க்கப் போனபோது அந்த ஏழைத்தாய்,

“எம்பொண்ணு உங்க அமானிதம் ஹாஜியார்” என்று கூறி கைபிடித்து தம் மகளை அவரிடம் ஒப்படைத்துவிட்டு நிரந்தரமாகக் கண்மூடிவிட்டாள்.

எதற்குமே கலங்காத ஆசிர் ஹாஜியார் நிலை குலைந்து போனார். அந்தத் தாயின் அமானிதத்தை பாதுகாப்பது அவருக்கு தர்மமாகிவிட்டது. அல்லாஹ்விற்கும் ரஸுலுக்கும் பயப்படும் உண்மையான மனிதரவர். அல்லாஹ்வும் ரஸுலும் மனித குலத்துக்காக சொல்லிச் செல்லாத விடயங்களே இல்லையே. இந்த ஊரும் உறவும் மஹ்ஸரில் வந்து யாருக்காகவும் வாதாடப் போவதில்லை.

எல்லாம் உங்க வாழ்க்கை உடனேயே முடிந்துவிடும். இப்படியெல்லாம் நிறைய நியாயங்களை சிந்தித்த ஆசிர் ஹாஜியார்

தைரியமாக தலைநிமிர்ந்து முடிவெடுத்து நஸீராவை இரண்டாவது மனைவியாக ஏற்றுக் கொண்டார்.

ஷிப்னா வளர வளர வாப்பாவிற்கு இன்னொரு குடும்பம் குழந்தைகளெல்லாம் இருக்கின்றதென்பதை புரிந்து கொண்டாள். ஒரு தனி மனிதனின் நடத்தைகள்தான். அவனை அளவிடும். முதல் காரணியென்று அவள் படித்திருக்கின்றாள். அந்த வகையில் தன் தந்தையின் நேர்மையான பொறுமையான தருணத்தைத்தான் அவள் எப்போதும் கண்டிருக்கின்றாள். தந்தையின் முடிவுகளை ஏற்றுக் கொண்ட அவளால் தந்தைக்கிருக்கும் இன்னொரு குடும்பத்தை மட்டும் சொந்தமென்று ஏற்றுக் கொள்ள முடியாமல் போனது.

"ஷிப்னா... ஷிப்னா..."

உம்மாவின் அழைப்பால் சுயஉணர்வு வரப்பெற்றவள் கண்களை அழுத்தமாகத் துடைத்துக் கொண்டே உள்ளே சென்றாள்.

நாட்கள் நகர்ந்தன. மௌனமாக ஒரு கிழமை உருண்டோடியது.

அன்று

முபாறக் மாமாவின் மகன் ஸாதிக் வந்தான். ஷிப்னாவிற்கு நுஸ்ரத் நிச்சயித்து வைத்திருந்த மாப்பிள்ளை

"உள்ளே வரலாமா..." என்று கேட்டுக் கொண்டே வந்து நின்ற ஸாதிக் ஷிப்னாவின் பதிலுக்கு காத்திருக்காமலே கதைக்கத் தொடங்கினான்.

"ஷிப்னா! கலியாணமென்பது யாரும் கட்டாயப்படுத்தி வற்புறுத்தி பண்ணி வைக்கிற காலமெல்லாம் மலையேறிப் போச்சு. நான்தான் பிஸ்னஸ் பிஸ்னஸ் என்று கொழும்பிலேயே தங்க வேண்டியவனாகிட்டன். ஒவ்வொருத்தரா தனிப்பட்ட மனநிலை சூழ்நிலை எல்லாம் புரிஞ்சிருக்கிற அளவிற்கு நான் ஓய்வா இருக்கல்ல. தூரத்தில எந்நேரமும் பிஸியா இருக்கிற எங்கிட்ட திருமணத்திற்கு சம்மதம் கேட்டாங்க. சரின்னு சொல்லிட்டன்".

'மைகோட்!' வெளியே வராத ஷிப்னாவின் உதடுகளின் ஓசை

"அவங்க மட்டும் வந்து சரியான நேரத்தில் உன்னோட உண்மை நிலையை எங்கிட்ட தெளிவாக்கி இருக்கல்லேன்னா..."

ஸாதிக் முடிக்க முன் இடைமறித்தாள் ஷிப்னா

"அவங்கென்றா... யாரு...?

"உங்க வாப்பாவோட இரண்டாவது மனைவிதான். வயசில மூத்தவங்க; அந்த வயசிற்கே உரிய பக்குவத்தோடு அவ்வளவு அறிவா யதார்த்தமா எங்கிட்ட கதச்சாங்க தெரியுமா?"

ஷிப்னா ஆச்சரியம் விலகாமல் மறுபடியும் கேட்டாள்.

"நேரிலேயே வந்தாங்களா...!"

"ஆமா நேரிலேயே வந்தாங்க. எனக்குக் கூட ஆச்சரியமாகத்தான் இருந்துச்சு. என் மகள் ஷிப்னா மேற்கொண்டு படிக்கிறதுக்கு நீங்கதான் வழிகாட்டனும் என்று ஒரு கட்டத்துல தாங்க முடியாம அழுதுட்டாங்க..."

"எனக்கு எப்படி இருந்துச்ச தெரியுமா? எனக்கும் கல்வியோட பெறுமதி தெரியும் ஷிப்னா. அதிலும் முஸ்லிம் சமூகத்தில பெண் கல்வியோட தேவை எந்தளவு பெறுமதியா எதிர்பார்க்கப்படுகிறது என்பதும் தெரியும்"

ஸாதிக் கதைக்க கதைக்க இத்தனை நாளும் அடக்கி வைத்திருந்த ஆற்றாமையை வெளிப்படுத்தினாள் ஷிப்னா.

"கண்களைத் துடைச்சுக்கோ. இனிமே இது விடயமாக நீ அழவே கூடாது. உங்க உம்மா அதிகம் படிக்காதவங்க. செல்வத்திலேயே வாழ்ந்து பழக்கப்பட்டவங்க. நீ படிச்சு வெற்றி பெறும் போது நிச்சயமா அவங்களும் சந்தோசப்படத்தான் போறாங்க. நான் இந்த கலியான ஏற்பாட்டையெல்லாம் நிறுத்தும்படி எல்லோர்க்கிட்டேயும் கண்டிப்பா சொல்லிட்டன். இனிமேல் எந்தக் கவலையும் மனசில எடுக்காம படிக்கிறதிலேயே முழுக் கவனத்தையும் செலுத்தனும். என்ன..."

நல்ல நண்பனைப் போல் உரிமையுடன் சொல்லிவிட்டுப் போகும் ஸாதிக்கை நன்றி பணிக்கும் கண்களுடன் வழியனுப்பி வைத்த ஷிப்னா யன்னலினூடே வெளியே பார்க்கின்றாள்.

மலர்ந்து சிரிக்கும் பூக்களும் சிறகடித்துப் பறக்கும் பறவைகளும் தெளிவான நீல வானமுமாக உலகம் ரொம்ப குதூகலமாக இருந்தது. அவளுக்கு.

"உம்மா..."

வாய்விட்டு அந்த உறவைப் புதிதாக அழைத்துப் பார்க்கின்றாள் பலவீனங்களால் உந்தப்பட்டு தப்பும் தவறுமாக வாழ்ந்து கொண்டிருக்கும் பல பெரிய மனிதர்களுக்கு மத்தியில் ஊர் உறவுகளின் விமர்சனங்களைப் பற்றிக் கவலைப்படாமல் ஒரு ஏழைப் பெண்ணுக்கு வாழ்வு கொடுத்த தன் தந்தையை நினைக்கும் போது ஷிப்னாவுக்கு பெருமிதமாக இருந்தது. மனப்பூர்வமாக அந்தத் தாயையும் தன் சொந்தமென ஏற்றுக் கொண்ட ஷிப்னா 'உம்மா' என அழைத்து தன் உரிமையை சொல்லிக் கொள்வதற்காக புறப்படத் தயாரானாள்.

இப்போது 'அந்த' உம்மா அவள் கண்களுக்குள் சுவர்க்கமாக!

# 9 சுஜூதியும் ஒரு சோடிக் காலுறையும்.

"அல்லாஹு அக்பர்" என்று வாயால் மொழிந்து கைகளை உயர்த்தி நெஞ்சில் மடக்கி வைத்து லுஹர் தொழுகைக்குரிய தக்பீரை கட்டுகிறேன். சுஜூதில் பதிந்திருந்த கண்கள் மெல்ல விலகி கால்களில் பட்டதும் மழை மேகம் போல் துக்கம் அலை மோதத் தொடங்கியது. வேண்டாம் என்று குப்பையை ஒதுக்குவது போல் நினைவுகளை ஒதுக்கிக் கொண்டு போய் விட்டு விட்டு தொழுகையில் ஒன்றிருக்க முயற்சிக்கிறேன். அது அத்தனை சுலபமான காரியமாகத் தெரியவில்லை. அமைதியைத் தேடிய மனசு அல்லாஹ்விடமே எல்லாத்தையும் பாரஞ்சாட்டுகின்றது.

"அஸ்ஸலாமு அலைக்கும் வறஹ்மதுல்லாஹ்"...

இரண்டு தோள் பட்டையின் பக்கமும் முகம் திருப்பி ஸலாம் கொடுத்து தொழுகையை முடித்துக் கொண்ட பின் சுவரில் சாய்ந்திருந்து காலிரண்டிலும் மாட்டியிருந்த கால் உறையை கழட்டுகிறேன். மறுபடியும் ஓடிவந்து ஒட்டிக்கொண்ட நினைவுகள்... காலுறையை முகத்தில் வைத்து அழுத்தி எனது விம்மலையும் வெப்பிசாரத்தையும் அடக்க முயன்று தோற்றுப் போகிறேன்.

"கூடாது இது ஆபீஸ்"...

சட்டென்று நினைவுகளைக் கலைந்து வெளியில் வந்து அமர்ந்து கொள்கிறேன்.

சாப்பாட்டிற்குப் போனவர்கள் ஒவ்வொருத்தராக வந்து சேர ஆபிசில் பழைய களை சேரத் தொடங்கியது. நானும் சகஜமாக முயற்சிக்கிறேன். அத்தனை வேலைப் பரபரப்பிலும் கேலியும் கிண்டலுமாக நகரும் இந்தப் பொழுதுகளுக்காகத்தான் காத்திருக்கிறேன். இதைத் தேடித்தான் இங்கே ஓடி வருகிறேன். இங்கேயுள்ள எல்லோருக்குமே என் நிலைமை தெரியுமாகையால் நான் சோர்ந்து இருந்தால் எதையாவது சொல்லி சிரிக்க வைத்து கலகலப்பாக்கி விடுவார்கள்.

ஒவ்வொருவர் மனதிலும் எத்தனைதான் பிரச்சினை இருந்தாலும் ஒன்று கூடினால் எல்லாவற்றையுமே மறந்து உறவாய் தோழமையாய் மனம் விட்டுப் பழக வேலைத்தளங்களை விட வேறிடம் இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. மெல்ல மெல்ல பொழுது நகர்ந்து வேலைப் பரபரப்பும் குறைந்து, செல்லும் நேரம் நெருங்கவே வரவுப் பதிவேட்டில் செல்லும் நேரத்தை குறித்து வைத்து விட்டு விடைபெற்று ஒவ்வொருவரும் வெவ்வேறு பாதையில் பிரிய நானும் வழக்கமான வழியால் தனித்து நடக்கிறேன்.

இந்தத் தனிமைப் பயணம் மட்டுமல்ல இப்போதைய வாழ்க்கைப் பாதை கூட எனக்குப் புதியதுதான். கால்கள் முன்னோக்கி நகர நினைவுகளோ பின்னோக்கி செல்ல தொடங்கியது.

கனவுகளையும் கற்பனைகளையும் உள்ளடக்கிய இளமைப் பருவத்தில் எல்லோரையும்போல்தான் நானும் துள்ளித் திரிந்தேன். காதலெனும் கண்ணுக்குத் தெரியாத மாயவலை என்னையும் விடவில்லை. வறுமையான குடும்பத்தில் பிறந்தாலும் அழகாக இருந்தேன். அதைவிட அருமையாகப் படித்தேன். இப்படியான பெண்களை மடக்கிப் பிடித்து வழிக்குக் கொண்டு வருவதை ஆண்களில் பலர் ஒரு சவாலாகத்தான் கருதுகின்றார்கள்.

என்னையும் ஒருத்தன் காதலித்தான். சாதாரணமாக அல்ல, துரத்தி துரத்தி காதலித்தான். நிற்குமிடம் போகுமிடம் என்று எதையுமே அவன் விடவில்லை. உன்னை ஒரு நாள் பார்க்காவிட்டால் உயிர் போய்விடுமென்று உருகி வாழ்ந்தான். பக்குவமடையாத வயசு! அவனுக்குள் இருந்த வக்கிரகங்கள் புரியவில்லை. நானும் காதல் வயப்பட்டேன். அவன் காட்டிய பேரன்பில் உயிர் கரைந்து நான் நிற்க அவனோ உறவுகள் காட்டிய பணக்காரப் பொண்ணுக்கு மாலையிட்டு மாப்பிள்ளையாகி விட்டான்.

காதலின் யதார்த்தம் இப்படியும் ஆகலாம் என்று பிறகுதான் எனக்குப் புரிந்தது. என்னால் நீதி கேட்டெல்லாம் போராட முடியவில்லை. அவன் தந்த நம்பிக்கைகள் ஏமாற்றங்களாக நெஞ்சினில் தங்கிப் போனது. மனசில் போட்டு அழுந்தி அழுந்தி விழுங்கிக் கொண்டேன். காதல் என்றால் காலில் விழவும் காரியமானால் கரடிபோல் பாயவும் முடியுமான உள்ளங்களுக்கு இன்றில்லாவிட்டால் என்றைக்காவது இறை நீதியே தீர்ப்பளிக்கும்

என்று பொறுமை செய்து கொண்டேன். எழுத்தில் வராத அதிகம் அதிகமான நிஜங்கள் எல்லாம் இப்படித்தானே அவனது தீர்ப்புக்காக காத்திருக்கின்றன.

அதன் பிறகு முன்னரைப் போலில்லாது இன்னும் அதிக அக்கறையுடன் படித்தேன். உயர்தரப் பரீட்சையில் நல்ல முறையில் சித்தியடைந்த கையோடு போட்டிப்பரீட்சை ஒன்றிலும் தெரிவாகி அரச அலுவலகமொன்றிலும் வேலைக்கு அமர்ந்து கொண்டேன்.

ஆண்களென்றாலே வேப்பங்காயாக கசந்த எனக்கு ஆபீசில் வளைய வந்த சஹீர் முற்றிலும் வித்தியாசமானவராக தென்பட்டார். உள்ளுக்குள் ஊத்தைகளை சுமந்து கொண்டு வெளியில் உத்தமர்களாக நடமாடுபவர்களுக்கு மத்தியில், உள்ளவர்களை, உள்ளதை உள்ளபடியே ஒத்துக் கொண்ட சஹீரை ஆச்சரியத்தோடு பார்த்தேன். பெண்களைப் பலவீனப்படுத்தி அல்லது பலவீனங்களைப் பயன்படுத்தி பசியாறும் ஈனர்களுக்கு மத்தியில் சஹீரைப் பற்றி நான் கேள்விப்பட்டதெல்லாம் இன்னொரு உலகத்தை எனக்கு காட்டி நின்றது. ஒரு கால் உயரம் குறைவானதால் விந்திய படியே நடக்கும் சஹீர் மொத்தத்தில் நல்லவர். என் மனம் மறுபடியும் கனிந்தது. சஹீரை மனப்பூர்வமாக ஏற்றுக் கொண்டேன். என் அன்பைத் தெரிந்து கொண்ட போது சஹீர் ஏற்க மறுத்து விட்டார்.

“வேணாம்மா.... இன்றைக்கு சரியாத் தெரியும் என்னோட ஊனம், நாளைக்கு ஏதாவது ஒரு சூழல்ல உனக்குள் தாழ்வு மனப்பான்மையை உருவாக்கலாம். எல்லோரையும் போல என் புருசன் இல்லை என நீ நினைச்சிட்டேன்னா நம்ம நிம்மதியே பாழாகிவிடும். எல்லோருக்கும் பிரயோசனமாக இருக்க வேண்டுமென்றுதான் இந்த வாழ்க்கையை வாழுறன். தயவு செய்து என்னைக் குழப்பாதே ப்ளீஸ்.”

மன்றாடி அவர் மறுத்தபோது மேலும் பிடிவாதமாக அவருடனே என் மனம் ஒட்டிக்கொண்டது.

இன்றில்லாவிட்டால் என்ன, என்றாவது அவர் மனம் மாறும் என்று தவமிருந்தேன். என் காத்திருப்புக்கள் வீணாகவில்லை. எம் இருவரையும் .சார்ந்தவர்களின் சிறு சிறு முயற்சிகளுக்குப் பின்னால் சஹீரும் சம்மதித்து இருவரும் இல்லற பந்தத்திலும் இணைந்து கொண்டோம்.

“நீ ஜெயிச்சிட்டேடா... உன் மன உறுதிக்கு முன்னால என்னோட ஊனம் காணாமல் போயிடுச்சு”

என்னை நெஞ்சில் சாய்த்துக் கொண்டு அவர் சொன்ன அந்த நிமிஷத்திலிருந்து என் வாழ்வின் சந்தோசப் பயணம் தொடங்கியது.

மாடமாளிகையில்லை கூடகோபுரமில்லை, கார் இல்லை, காணி பூமி இல்லை, ஏவலுக்கு ஆளுமில்லை ஆனால் நிம்மதி இருந்தது. சந்தோசம் மிகுந்தது. என் முகத்தில் புன்னகை நிரந்தரமாகத் தங்கியது. எங்கள் பந்தத்திற்கு சொந்தமாக ஒற்றையாகல்ல, இரட்டையாக ஆண் வாரிசுகளை என் மடி தாங்கியபோது உலகத்தில் துன்பம் என்ற ஒன்று இருக்கிறதென்பதையே மறந்து போனேன்.

கால்கள் இல்லாத காலங்கள் சக்கரம் கட்டிப் பறந்தன. தஸ்னீம், தன்வீர் என்ற எங்கள் இரட்டை வாரிசுகளுக்கு ஐந்து வயது தொடங்கியது. அல்குர்ஆனில் மத்ரஸாவில் சேர்த்து விட நானும் சஹீரும் முடிவெடுத்தோம்.

2004.12.26 அன்று காலை எப்போதும் போல வெளிச்சமாகத்தானே விடிந்தது. ஆயிரமாயிரம் ஆத்மாக்களின் வாழ்க்கையை அஸ்தமனமாக்கப் போகின்றதை யார் கண்டார்கள். தஸ்னீம், தன்வீர் இருவருக்கும் ஒரே மாதியான ச∴பாரி சூட் அணிவித்து, வாப்பாவுக்கு ஸலாம் சொல்லி விடைபெற வைத்து நான்தான் அவர்களை மத்ரஸாவிற்கு அழைத்துக் கொண்டு போனேன். எல்லாமே சொற்ப நேரந்தான்... கடல் தண்ணீர் படாத இடத்திற்கு நானும் குழந்தைகளும் வந்துவிட்டோம். கடல் வந்து கடலோடு போன எங்கள் சஹீர் வரவேயில்லை.

அன்றைய இழப்புக்களை சந்தித்தவர்களில் நானும் ஒருத்தியாகிப் போனேன். காலத்தால் ஆற்ற முடியாத காயம். கண்ணீரால் அழிக்க முடியாத காயம், அத்தனை பேர் சோகத்தைப் பார்த்தும் என் சோகத்தை என்னால் பார்க்க முடியவில்லை.

கடற்கரையின் மணல் வெளியில் சஹீரின் காலடித்தடம் தென்படாதா என்றும் இன்றும் காத்திருக்கிறேன். அலைகளுக்கு அப்பால் ஏதாவது தெய்வீக ஒளி தோன்றி என் சஹீரை திரும்பக் கொண்டு வராதா என்று ஏங்கி நிற்கிறேன். எதுவுமே நடக்கப் போவதில்லை. இழந்தது இழந்ததுதான். ஆனால் பாழாய்ப்போன மனம் மட்டும் படிய மாட்டேன் என்கிறதே.

விம்மி வெடிக்கும் வெப்பிசாரத்தை மென்று விழுங்கியபடியே வாசல் கதவைத் திறக்கிறேன். நிலைப்படியிலேயெ ஆளுக்கொரு பக்கமாக குந்திக் கொண்டு என்னை எதிர்பாரத்திருந்த தஸ்னீம், தன்வீர் இருவரும் உம்மா... என அழைத்துக் கொண்டே ஓடி வந்து என் இரு கைகளிலும் தொங்கிக் கொண்டார்கள். அவர்களை அன்போடு உச்சி மோந்து அணைத்துக் கொண்டதும்தான் என் ஆதங்கம் எல்லாம் சற்று ஆசுவாசப்பட்டது போலிருந்தது.

"இப்பதான் வாரியம்மா"

வயதான உம்மாவின் மெல்லிய குரல். கடைசித் தங்கையின் வீட்டில் தங்கியிருந்தவர்கள் இப்போது என்கூடவே இருக்கின்றார்கள்.

"ஓம் உம்மா, நடந்து வரோணுமே... இன்றைக்குத் தஸ்னீம், தன்வீர் இரண்டு பேரையும் அழைச்சிட்டு வெளியே போகனும். நான் முதல்ல குளிச்சிட்டு வாரன். அவங்கட ட்ரஸ்ஸ கொஞ்சம் மாற்றி விடுங்கம்மா" சொல்லிட்டு நகர்ந்த என் நினைவில் ஓர் இடறல்,

கைப்பையை திறந்து உள்ளேயிருந்த காலுறையை வெளியே எடுக்கின்றேன். சுனாமி வந்து போன வீட்டில் தங்கிய பொருட்களில் இதுவும் ஒன்று. என் சஹீர் பாவித்தது. பத்திரமாக பாவித்து வைத்ததை ஆபீசில் தொழும் போது காலில் போடலாமென கொண்டு போனேன். ஆனாலும் நினைவுகளின் ஸ்பரிசங்களை என்னால் தாங்க முடியவில்லை. இனி இதை ஆபீசுக்கு கொண்டு போவதில்லை என்ற முடிவுடன் அலுமாரியைத் திறந்து மேல் தட்டில் காலுறையை வைத்து விட்டு கதவை இறுக்க மூடுகிறேன்.

நினைவுகளுக்கு மட்டும் கதவுகள் இல்லையென சொல்லிக் கொண்டு, பெருமூச்சு கண்ணீருடன் கலந்து வெளியேறி காற்றினில் மறைந்தது.

✦ ✦ ✦

# 10 இரசனைகள்

தனது சுக-துக்கங்களைக் கூட நிர்ணயிக்க முடியாதளவுக்கு பெண்ணை பலவீனப்படுத்தி வைத்திருப்பதுதான் ஆண்மையின் பலமா?

"ச்சேய்! இதென்ன வாழ்க்கை? என்னுள் மலர்ந்து நின்ற எதிர்பார்ப்புகளையெல்லாம் பூவோடும் பிஞ்சோடும் யாரோ பறித்து விட்டதைப் போன்ற வேதனையில் மனம் கசந்து கொள்கிறது.

"ஒரு கவிதையைக் கூட இரசிக்கத் தெரியாத மனமா? எத்தனை எதிர்பார்ப்புக்களை சுமந்து கொண்டு இந்த உறவிற்குள் காலடி எடுத்து வைத்தேன். உண்பது உறங்குவது இன்ப துன்பங்களுக்கு முகம் கொடுப்பதென்று சாதாரணமாய் எல்லோருக்கும் அமைவது போன்று எனது வாழ்க்கையும் அமைந்து முடிந்து விடுமா? ஓஹ்! திருமணமாகிய இந்த இரண்டு மாசத்திற்குள்ளும் ஒரு நல்ல கணவனாக என்னுடன் பொருந்திய அவரால் என்னோட வித்தியாசமான உணர்வுகளை, சிந்தனைகளை, வெளிப்பாடுகளை புரிந்துகொள்ள முடியாமல் போய்விடுமா? நினைக்கும் போதே நெஞ்சு சோர்ந்து போனது.

விழிக்கடையில் கசிந்த நீரோடு மனக்கண் நேற்றுக் காலையில் நடந்த சம்பவங்களை அசைபோட்டுப் பார்க்கத் தொடங்கியது.

திவாகர்..., அதுதான் என் கணவரோட பெயர். ஆபீசுக்குப் ஆயத்தத்துடன் சாப்பிட்டுக் கொண்டிருந்த சமயம்தான் கையில் வாராந்தரி ஒன்றை ஏந்தியபடி சந்தோசத்துடன் அவரை நெருங்கினேன்.

"திவா! திருமணமாகி திருமதியானதற்குப் பிறகு முதல் முதலா என்னோட கவிதை ஒன்று பத்திரிகையில் வெளிவந்திருக்கு. படிச்சுப் பார்க்கிறீங்களா"

புன்னகையுடன் நிமிர்ந்த அவர்...

"ஓஹ்...! நிஜமா என்னோட வாழ்த்துக்கள். ஆனா நித்யா இப்போ படிக்கிறதுக்குத்தான் டைம் இல்ல. ஆபீசுக்குக் கிளம்பனும். பிறகு பார்க்கலாம் தானே.

செல்லமாகக் கண்ணத்தில் தட்டிச் சென்ற அவரை நானும் புன்னகையுடனேயே வழியனுப்பி வைக்கின்றேன். வேலைக்குப் போகும அவசரம், வந்து ஆறுதலாக இருக்கும் நேரம் மறக்காமல் காட்டிட வேணுமென்று வேலைகளினூடே அடிக்கடி நினைத்துக் கொள்கின்றேன்.

அன்றிரவு எட்டு மணிபோல, ஓய்வாகச் சாய்ந்திருக்க திவாகரிடம் மறுபடியும் பத்திரிகையை நீட்டுகின்றேன். மறுபடியும் அதே 'ஸாரி...'

"ஸாரி, நித்யா டியர்! இப்போ கவிதை படிக்கிற மூடில நான் இல்லம்மா. ஒரே தலைவலி. எப்போ வேலையெல்லாம் முடிச்சிட்டு வருவீங்க. கொஞ்சம் தலையைப் பிடிச்சுவிடச் சொல்லலாம்னு காத்துக்கிட்டிருந்தேன். ப்ளீஸ் நித்யா, இப்போ இந்தத் தங்கக் கையால தலையைப் பிடிச்சு விட்டீங்கென்றா உங்கட ஒரு கவிதையை என்ன, ஓராயிரம் கவிதைகளை படிச்ச சுகம் எனக்குக் கிடைக்கும்... ம்..."

மடியில் சாய்ந்திருந்த அவரது தலையைக் கைகள் பிடித்து விட்டாலும் மனம் மட்டும் பிடிபடாமல் ஓவென்று அழுது துடித்துக் கொண்டிருந்தது.

அதன் பிறகு திவாகர்! அந்தக் கவிதையை கேட்கவுமில்லை, படிக்கவுமில்லை. அந்தச் சம்பவத்தையே மறந்துவிட்டதைப் போலக் காணப்பட்டார். என்னால்தான் அந்த முதல் ஏமாற்றத்தை ஜீரணிக்க முடியாமல் பெரும் அவஸ்தையாக இருந்தது. அப்படி அவஸ்த்தைப்படும் பொழுதெல்லாம் மனம் அடிக்கடி தாரணியைத்தான் நினைத்துக் கொள்ளத் தொடங்கியது.

தாரணி... ஊரில் என்னுடன் ஒன்றாகப் படித்தவள். எமது பாடசாலையின் லதா மகேஷ்கர். அப்படியொரு குரல் வளம் அவளுக்கு. விழாக்கள், கலை நிகழ்ச்சிகள், ரேடியோ, டி.வி. எங்கே பாடச் சென்றாலும் பரிசையும் பாராட்டையும்தான். அள்ளிக்கொண்டு வருவாள். பள்ளிப்படிப்பு முடிந்த கையோடேயே சங்கீத ஆசிரியையாக நியமனமும் பெற்று விட்டாள். இரண்டு வருசம் அவளது தீவிர இரசிகனாக இருந்து, காதலித்து அவளைக் கரம் பற்றியவன்தான் மகேஷ்.

எத்தனையோ பணக்கார வாலிபர்கள் அவளைச் சுற்றி வந்த போதிலும் தன்னுடைய இசையை இரசித்து நேசிக்கின்றான் என்ற

ஒரே காரணத்திற்காக சாதாரண தரத்திலிருந்த மகேஷை அவள் ஏற்றுக் கொண்டாள். என்னைச் சந்திக்கும் போதெல்லாம் அடிக்கடி கூறிக் கொள்வாள்.

"சமைக்காட்டியும் பரவாயில்ல நித்யா. நீ வீணை மீட்டினா போதும். ஒரு நாளைக்கென்றாலும் நான் பாடிக் கேட்கலேன்னா அவருக்கு தூக்கமே வராதுடி. எல்லாத்தையும் கெஸெட் பண்ணி வச்சிருக்கார் பாரு. அதனவச்சு ஒரு கடையே திறக்கலாம். அவரைப் புருஷனா அடைய நான் ரொம்பவும் கொடுத்து வச்சிருக்கோணும்டி"

அவள் கூறுவதைக் கேட்க எனக்குக் கூட பொறாமையாக இருக்கும். கொஞ்ச நாட்களுக்குப் பிறகு அவள் கணவருக்கு வேறு ஊருக்கு மாற்றலாக அவளும் மாற்றல் எடுத்துக் கொண்டு அங்கேயே போய்விட்டாள்.

சில வருடங்களின் பின்னால் எனக்கும் திருமணமாகி இந்த ஊருக்கு வந்துவிட்டேன். அதன் பிறகு அவளைச் சந்திக்கும் சந்தர்ப்பம் கிடைக்கவே இல்லை என்றாலும் அவளைப் போலவே எனக்கும் ஒரு துணை கிடைக்க வேண்டும் என்று நினைத்ததெல்லாம் கூடப் பொய்யாகிப் போய்விட்டது.

நாட்கள் மெல்ல நகர்ந்து கொண்டிருந்தன. திவாகரும் வேலைக்குப் போனால் தனிமையின் பொழுதுகள் பெரும் சுமைகளாகப் போயிற்று மனம் சோர்ந்து போனதாலென்னவோ எழுதுவதை நினைத்துக்கூடப் பார்க்கவில்லை.

அன்று..., மார்க்கட் போய் தேவையானதை வாங்கி வந்து சமையலையும் கவனித்துப் போகும் கமலம் அக்கா வந்ததும் அவளை நிறுத்தி, அவளுடன் நானும் மார்க்கட் போக வெளிக்கிட்டேன். மீன், காய்கறி, மளிகைச் சாமான் என்று எல்லாவற்றையும் வாங்கி கூடையில் அடைத்துக் கொண்டு திரும்ப எத்தனித்த நேரம்தான் அந்த... அந்த... முகத்தைக் கண்டேன்.

"தா... ததரணி...!"

தெருவென்பதையும் மறந்து கூவியே விட்டேன். சட்டென்று திரும்பிய அவனின் முகத்திலும் அதிர்ச்சியுடன் கூடிய பிரகாசம்.

"நித்தியா... நீ... நீ..."

இருவரும் கட்டியணைக்காத குறைதான். அத்தனை சந்தோசம் இருவருக்கும். அதிகம் பழகியிராத ஊரில் அறிமுகமான முகங்களைக் கண்டால் புது உற்சாகமே ஊற்றெடுக்கும் அல்லவா? பக்கத்து தெருவிலிருக்கும் அவளது வீட்டுக்கு வரும்படி விடுத்த அழைப்பை என்னால் மீறவே முடியவில்லை. எனக்கும் அந்த மாறுதல் தேவையானதாகவே இருந்ததால் போய் சமையலைக் கவனிக்கும் படி கமலம் அக்காவிடம் சொல்லிவிட்டு தாரணியுடன் புறப்பட்டேன்.

ஓரளவு வசதியாகத்தான் தாரணியின் வீடு அமைந்திருந்தது. அத்தியவசிய ஆடம்பரப் பொருட்களென்று வீடு நிறைந்திருந்தது. மூன்று வயசும் ஒரு வயசும் போல இரண்டு குழந்தைகள்... வேலைக்காரப் பெண்ணொருத்தி எல்லாவற்றையும் நோட்டமிட்டபடி மௌனமாக அமர்ந்திருந்தாள். தாரணிதான் முதலில் தொடங்கினாள்.

நாங்க இங்க வந்து ஒரு வருசமாச்சு நித்யா. நீ இங்கே இருக்கிறது தெரியாமலே போச்சு. உன்னோட திருமண அழைப்பிதழ் கிடைச்சும் என்னால வரமுடியல்லடி. ம்... ஹூம்... அரேன்ஜ் மரேஜ்தான் என எழுதியிருந்தாய். எப்படி நித்யா... கணவர் லை.்.ப் எல்லாம்? பிடிச்சிருக்கா...?

கேள்வியுடன் நிறுத்தி எனது முகத்தைப் பார்த்தாள் தாரணி. இவளின் முன்னால் உடைந்து விடக்கூடாது என்ற எச்சரிக்கை உணர்வுடன் சந்தோசமாகப் புன்னகைத்தபடி...

"ரொம்ப நல்லாயிருக்கேன் தாரணி. பார்த்துப் பல வருசமாச்சு இல்லையா? உன்னோட தோற்றத்தில கூட நிறைய மாறுதல் தெரியுது. நீ எப்படியிருக்கே?"

மிகவும் சந்தோசமாக இருப்பாள் என்ற நினைவில் சும்மா ஒரு பேச்சுக்காகத்தான் அந்த கேள்வியை கேட்டு வைத்தேன். ஆனால் மேலே சுற்றும் ்.பேனையே பார்த்துக் கொண்டிருந்தவள் கண்கள் மெல்ல தூங்குவகைக் கண்டதும் எனக்கு தூக்கிவாரிப் போட்டது.

"நல்லாயிருக்கேன் என்று உன்கிட்ட பொய் சொல்ல என்னால் முடியல்ல நித்யா, நல்லாயிருக்கிற மாதிரி நடிச்சிட்டு இருக்கேன்"

அழுகையுடன் நிறுத்திய அவளை... அவளது பேச்சை என்னால் நம்பவே முடியவில்லை. அவளே தொடர்ந்தாள்.

“உன்னால நம்ப முடியல்லயா நித்யா? ம், அவரையும் அவரது ரசணைகளின் நிஜங்களையும் புரிந்து கொண்ட போது என்னால கூட எதையுமே நம்ப முடியாமல் ஆச்சரியமாகத்தான் இருந்தது.

“எல்லாமே பொய் வேஷம்...”

அழுகையுடன் துடித்த அவளை இடைநிறுத்தி

“தாரணி நீ... நீ... என்ன சொல்கின்றாய்? எ... எனக்கு எதுவுமே புரியவில்லையே?” நிறுத்தியவள் தொடர்ந்தாள்.

“முத்தவள் ஜானகி கிடைக்கு மட்டும் எனது வாழ்க்கையும் சந்தோசமான சங்கீதத்தைப் போலத்தான் இருந்தது நித்யா... இவ பிறந்து ஆறு ஏழு மாசத்திலேயே இவளுக்கு ஆஸ்த்மா ஏற்பட்டுப் போச்சு. மாசத்தில இரண்டு தடவையாவது ஆஸ்த்மா வந்து படுத்திடுவாள். நாங்க எதிர்பார்க்காமலேயே இளையவன் மனோவும் தரிச்சிட்டான். காலையில ஸ்கூல் போகணும். பின்னேரம் முப்பது நாப்பது பிள்ளைகளுக்கு ட்யூஸன் கொடுக்கனும். இதெல்லாம் போதாதென்று ஒவ்வொரு இரவிலும் பரீட்சை எடுக்கும் பிள்ளைகளுக்கு ஸ்பெஷல் க்ளாஸ் வேற நடத்தணும். என்னால முடியல்ல நித்யா முடியல்ல; இது யாருமே தலையிட முடியாத, கணவன், மனைவி இருவருமே பார்த்து தீர்த்துக் கொள்ள வேண்டிய பிரச்சினை. அழுது கெஞ்சி சண்டை பிடித்து எல்லா வகையிலுமே சொல்லிப் பார்த்திட்டேன். ம்... எனது சங்கீதக் கலையாலே இன்னும் ஏதேனும் வருமானம் வருமென்றால் அதற்கு ஒழுங்கு பண்ணித் தருவாரே தவிர ஏற்கனவே வந்து கொண்டிருக்கும் வருமானத்தில் ஒன்றைக் கூட இழக்க அவர் தயாரில்லை நித்யா.”

“என்னோட சங்கீதத்தை இரசித்தது, நேசித்தது, மதித்தது எல்லாமே பொய் வேஷம். உடம்பிற்கு ஆடை போட்டு மறைக்கிறதைப் போல மனதையும் மறைச்சி என்னை ஏமாத்திப் போட்டார். எந்த சங்கீதத்தை உயிராக மதிச்சேனோ அதையே எனக்கு விலங்காக்கிப் போட்டார். எந்தக் கலையை தெய்வீகமென்று மகேஷ் கொண்டாடினாரோ அந்தக் கலையையே காசுக்ககாக விற்கத் துணிந்திட்டார். வெளி உலகத்திற்கு... மனிதர்களுக்கு நாங்க வசதியானவங்க என்று பிரகடணப்படுத்துவதற்காக அப்படியொரு பிரமையை உண்டு பண்ணுவதற்காக என்னோட ஆத்ம திருப்தியை அமைதியை இழந்திட்டேன் நித்யா... இழந்திட்டேன்.”

சொல்ல வேண்டியதை எல்லாம் சொல்லிவிட்டு குமுறிக் குமுறி அழுதாள் தாரணி.

எனது கண்களிலும் ஈரம். இப்படியும் ஆண்கள் இருப்பார்களா...? தன்னோட சுய துக்கங்களைக்கூட தானே நிர்ணயித்துக் கொள்ள முடியாதளவிற்கு பெண்ணை பலவீனப்படுத்தி வைத்திருப்பதுதான் ஆண்மையின் பலமா...? ஓஹ்!... திருமணமான புதிதில் ஒருநாள், திவாகர் என்னிடம் சொன்னது ஞாபகம் வந்தது.

“நித்யா! சின்ன வயசில இருந்து இதிலெல்லாம் இன்டரெஸ்ட் எடுத்து ஈடுபடாததாலோ என்னவோ, இப்ப கூட ஒரு கவிதை புரியணுமென்றா அமைதியா இருந்து ஆழமா அதை ரெண்டு மூனு தரம் படிச்சுப் பார்க்கணும். ஆனா எழுதுறவங்க பாடுறவங்க ஆடுறவங்க இவங்களையெல்லாம் கண்டா மனசுக்குள்ள ஒரு மதிப்பு ஏற்படும். எல்லோருக்கும் கொடுக்காத ஏதோ ஒரு சக்தியை கடவுள் அவங்களுக்குக் கொடுத்திருக்கிறார் என்று நினைக்கத் தோன்றும். எனக்கு இன்டரெஸ்ட் இல்லேன்னாலும் பரவாயில்லை. நீங்க நிறைய எழுதனும் நித்யா...”

ஓ! பலவீனத்தின் மீது பலத்தை பிரயோகிக்கத் தெரியாத திவாகர். உண்மையை - இயலாமையை ஒழிக்கத் தெரியாத திவாகர். நிஜத்தை நிஜமாகவே ஏற்றுக்கொண்டு என் ரசனைகளில் குறுக்கிடத் துணியாத திவாகர் உயர்ந்தவர். மிகவும் உயர்ந்தவர். கலையை இரசிக்கத் தெரிவதற்கு முதல் அதனோட உயர்ந்த தன்மையை உணர்ந்து மதிக்கத் தெரியணும். என்னோட....

என்னோட திவாகருக்கு மதிக்கத் தெரியும். தாரணியைத் தேற்றிவிட்டு வீடு திரும்பிய எனக்குள் ஒரு உறுதியான தெளிவிருந்தது. என் கணவரின் இரசனையைப் பற்றி!

# புரவலர் புத்தகப் பூங்கா

## நிர்வாகக் குழுவும் - வெளியிட்ட நூல்களும்.

*புரவலர் அல்ஹாஜ் ஹாசிம் உமர் (நிறுவனர்)*
*கலைஞர் கலைச்செல்வன் (செயலாளர்)*
*சமூகஜோதி எம்.ஏ.றபீக் - திரு. அந்தனி ஜீவா*
*திருமதி ஞானம் ஞானசேகரன்*

| இல | நூல்கள் | ஆசிரியர் | வெளியீடு |
|---|---|---|---|
| 1. | பீலிக்கரை (சிறுகதை) | பிரமிளா செல்வராஜா | ஆகஸ்ட் 2007 |
| 2. | கனலாய் எரிகிறது (கவிதை) | கே.எம்.ஏ.அஸீஸ் | செப்டம்பர் 2007 |
| 3. | சலங்கையின் நாதம் (வரலாற்று நாடகம்) | கலைஞர் எம்.உதயகுமார் | ஒக்டோபர் 2007 |
| 4. | தேன்கூடு (பாலர் கவிதைகள்) | கல்லொளுவை பாரிஸ் | நவம்பர் 2007 |
| 5. | மைவிழிப் பார்வையில் (மாதர் கட்டுரைகள்) | ஷாமலா ஸ்டீவன் | டிசம்பர் 2008 |
| 6. | நான் நீ கடவுள் (உருவகக் கதைகள்) | கலை அமுதன் எம்.ஸீ.எம்.இக்பால் | ஜனவரி 2008 |
| 7. | ஒரு மணல் வீடும் - சில எருமை மாடுகளும் (சிறுகதை) | சிவனு மனோகரன் | பெப்ரவரி 2008 |
| 8. | ரயிலுக்கு நேரமாச்சு (சிறுகதை) | கவிப்பிரியா நிஷா | மார்ச் 2008 |
| 9. | விழிகள் சுவாசிக்கும் இரவுகள் (கவிதை) | ஏ.எம்.எம்.ஜாபீர் | ஏப்ரல் 2008 |
| 10. | தடயங்கள் (கவிதை) | மருதூர் ஜமால்தீன் | மே 2008 |
| 11. | புதிய கதவுகள் (சிறுகதை) | மாரி.மகேந்திரன் | யூன் 2008 |
| 12. | ஒரு கலைஞனின் கதை (நாடகம்) | கலைஞர் கலைச்செல்வன் | யூலை 2008 |
| 13. | பச்சைப் பாவாடை (சிறுகதை) | எச்.ஐ.எம்.தாஹிர் | ஜனவரி 2009 |
| 14. | இளமை என்னும் பூங்காற்று (சிறுகதை) | ஷமீலா இஸ்மத் | பெப்ரவரி 2009 |
| 15. | இதயம் உள்ள பாரதி (கவிதை) | பொன்.பூபாலன் | மார்ச் 2009 |
| 16. | மேகவாழ்வு (கவிதை) | வெளிமடை ரபீக் | ஏப்ரல் 2009 |
| 17. | வேர்களற்ற மனிதர்கள் (கவிதை) | மருதநிலா நியாஸ் | மே 2009 |
| 18. | வெற்றிலை நினைவுகள் (கவிதை) | ஜோ.ஜெஸ்ரின் | யூன் 2009 |
| 19. | விடுமுறைக்கு விடுமுறை (சிறுகதை) | பவானி தேவதாஸ் | யூலை 2009 |
| 20. | மேட்டு நிலம் (சிறுகதை) | மு.சடாட்சரன் | ஆகஸ்ட் 2009 |
| 21. | விடியலில் ஓர் அஸ்தமனம் | எம்.ஏ.சுமைரா | செப்டம்பர் 2009 |
| 22. | மலையக சிற்றிதழ்கள் (ஆய்வு) | இரா.சர்மிளாதேவி | ஒக்டோபர் 2009 |
| 23. | விற்பனைக்கு ஒரு கற்பனை (கவிதை) | ஆரையூர் தாமரை | நவம்பர் 2009 |
| 24. | கண்ணுக்குள் சுவர்க்கம் (சிறுகதை) | காத்தான்குடி நசீலா | டிசம்பர் 2009 |



## பெண்ணியம் பேசும்
# காத்தான்குடி நசீலா

1980

1967இல் கவிதை களத்தினூடாக இலக்கியப் பரப்பிலே தடம் பதித்தவர் சகோதரி காத்தான்குடி நசீலா.

பாரதி அவதரித்தான்' என்ற தலைப்பிலே முதல் கவிதையை பிரசவித்ததன் மூலம், ஈழத்து இலக்கியத் துறையில் பெண்ணியம் பேசுவதற்கு ஒரு பெண் பாரதி பிறந்து விட்டாள் என்பதை நாசுக்காக உணர்த்தினார் போலும் நசீலா

பதினைந்துக்கு மேற்பட்ட வானொலி நாடகங்களை எழுதியுள்ளார். அந்நாடகங்களில் நான் பங்கு பற்றியமைகூட இன்னும் என் நெஞ்சில் பசுமையான நினைவுகளாக. அவரது நாடகங்களில் வரும் பெண் பாத்திரவார்ப்புக்களில் நசீலாவின் கோபத்தீயின் ஜுவாலைகள் கண்களுக்கு அனலாகவும், காதுகளுக்கு கனலாகவும் இருப்பதைக் கண்டு நான் வியப்புக்குள் வீழ்ந்திருக்கிறேன்.

கவிதை, நாடகம் அதைத் தொடர்ந்து கதை படைக்க ஆரம்பித்தார். எண்பதுகளில் 'அவளுக்கும் வாழ்வு வரும் என்ற சிறுகதையை சிந்தாமணி பத்திரிகையில் பதிவு செய்தார். பெண் அடிமைத்தனத்தைப் புதைப்பதும், பெண் விடுதலையை விதைப்பதுமே தன் எழுத்தின் தவமாக கொண்டார். இச்சிறுகதைப் போராளி இதுவரை 50க்கு மேற்பட்ட சிறுகதைகளை நம்நாட்டு தினசரிகளுக்கும் வாரமாத சஞ்சிகைகளுக்கும் எழுதிக் குவித்துள்ளார்.

"எங்கோ ஒரு பெண் இரவுகளுடன் நிரந்தரமாக அழுது கொண்டுதான் இருக்கின்றாள்". இது காத்தான்குடி நசீலா படித்த கவிதை வரிகள். "எங்கோ ஒரு மூலையில் இருந்து அந்தப் பெண்களுக்காக எழுத்தாணிப் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறார் நசீலா" - இது ஒரு கலைஞனின் வைர வரிகள்.

நசீலாவின் கண்ணுக்குள் சுவர்க்கம் எனும் இச் சிறுகதைத் தொகுப்பு புரவலர் புத்தகப் பூங்காவின் ஊடாக வெளிவருவது அவரது எழுத்துக்களுக்கு கிடைத்த காலத்தின் அங்கிகாரம்.

- கலைஞர் கலைச்செல்வன்

KANNUKKUL SUVARKKAM
ISBN 978- 955-095-80-2

Printed by : Uni Lanka's
Colombo 13.
Tel - 077 6258778